உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுபர் 32 | கதிர் 201 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆனி 01 வியாழக்கிழமை 15.06.2017

தவராசா வெளிநடப்பு

சபையில் உரையாற்றுவதற்கு அனுமதி வழங்காமையால்

யாழ்ப்பாணம், ஜூன் 15
வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவரை உரையாற்ற அனுமதிப்பதா இல்லையா என்பது தொடர்பில் சுமார் 50 >> 25

வடக்கு மாகாண சபையில் அதிர்ச்சிகரமான திருப்பம்

தூக்கி எறியப்பட்டார் முதல்வர் அவரது கடிதமே ஆயுதமானது

21 பேரின் இணக்கத்துடன் 18 பேர் கையெழுத்திட்டு ஆளுநரிடம் நேற்று இரவு அவசரமாக ஒப்படைப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 15

வடக்கு மாகாண சபையின் அதிர்ச்சிகரமான திருப்பமாக முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை பதவியிலிருந்து அகற்றுவது என்று அதிரடி முடிவை தமிழ் அரசுக் கட்சி நேற்றிரவு அவசரமாக எடுத்தது. இதற்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 6 பேர் உட்பட 21 பேர் ஆதரவு எனத் தெரிவிக்கப்படுகின்றது. அவர்களில் 18 பேர் கையெழுத்திட்டு, முதல்வரை பதவி நீக்குமாறு கோரும் கடிதம் நேற்றிரவு அவசர அவசரமாக ஆளுநரிடம் கையளிக்கப்பட்டது.

மாகாண சபையின் அமைச்சர்களான பொ.ஐங்கரநேசனையும், த.குருகுலராசாவையும் அவர்களது பதவிகளை தியாகம் செய்யுமாறு முதலமைச்சர் கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்து இந்த அதிரடி நகர்வு மேற்கொள்ளப்பட்டது. அதே சமயம், ஏனைய இரு அமைச்சர்களான ப.சத்தியலிங்கம், பா.டெனீஸ்வரன் மீதான குற்றச்சாட்டுக்கள் மீண்டும் விசாரிக்கப்படும் எனவும் அதற்கு ஏதுவாக அவர்கள் இருவரும் ஒரு மாத காலத்துக்கு விடுமுறையில் செல்ல வேண்டும் என்றும் முதலமைச்சர் அறிவித்தது கட்சிக்குள் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இதனால் அவசரமாகக் கூடிய தமிழ் அரசுக் கட்சியின் மாகாண சபை உறுப்பினர்கள் தலைமையுடன் கலந்தாலோசித்தனர். மிகத் தீவிரமான கலந்தாலோசனைகளை அடுத்து முதலமைச்சரை பதவி நீக்குமாறு ஆளுநரிடம் கோருவது என்ற முடிவு எட்டப்பட்டது.

முதலமைச்சர் 2013 ஆம் ஆண்டு கட்சிக்கு வழங்கிய கடிதம் தூசி தட்டி எடுக்கப்பட்டு தற்போதைய நிலையில் அவரை பதவி நீக்குவதற்கான பலமிக்க ஆயுதமாக பயன்படுத்தப்படுகின்றது. >> 25

இரு அமைச்சர்களையும் பதவியை தியாகம் செய்ய கேட்கிறார் முதலமைச்சர்

சபை முடிந்து வெளியே வரும் அமைச்சர் பொ.ஐங்கரநேசன்.

யாழ்ப்பாணம், ஜூன் 15

அமைச்சர்களான குருகுலராசா மற்றும் ஐங்கரநேசன் இருவரும் நாளை (இன்று) மதியத்துக் கிடையில் தமது >> 25

சி.வி.கே. முதலமைச்சராகும் வாய்ப்பு இன்று மாலைக்குள் முடிவு தெரியும்

அமைச்சரவையையும் இறுதி செய்யக் கூடும்

யாழ்ப்பாணம், ஜூன் 15

வடக்கு மாகாண சபையில் அடுத்தடுத்து அதிரடி மாற்றங்கள் இடம்பெற வுள்ளன. வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை பதவி நீக்குமாறு கோரும் கடிதம் ஆளுநரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ள நிலையில், புதிய முதலமைச்சராக சி.வி.கே.சிவஞானம் >> 25

லண்டனில் துயரம்

குடியிருப்பில் தீ ஆறு பேர் சாவு

லண்டன், ஜூன் 15

பிரிட்டனின் தலைநகர் லண்டனில் நேற்று அதிகாலை 5 மணியளவில் (இலங்கை நேரப்படி) ஏற்பட்ட தீ விபத்தில் 6 பேர் உயிரி >> 25

ரூ.25 லட்சம் செலவு

வடக்கு மோசடி விசாரணை மற்றும் சபை அமர்வுகளுக்காக

யாழ்ப்பாணம், ஜூன் 15

வடக்கு அமைச்சர்கள் மீதான விசாரணை மற்றும் அதனுடன் தொடர்புடைய சபை அமர்வுகளுக்காக இதுவரை 25 லட்சம் ரூபா வரை செலவு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபை >> 25

குற்றச்சாட்டுக்களுக்கு அமைச்சரவைதான் பதில் கூறவேண்டும்

குருகுலராசா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15

என் மீதான குற்றச்சாட்டுக்களுக்கு அமைச்சரவையே பதில் கூற வேண்டும் என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராசா தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய சிறப்பு அமர்வில், தன்னிலை விளக்கம் கூறுவதற்குக் கல்வி அமைச்சர் த.குருகுலராசா, அவைத் >> 25

முதலமைச்சரின் உரையை புறக்கணித்த ஆளும் தரப்பு

யாழ், ஜூன் 15

வடக்கு மாகாண முதலமைச்சர், விசாரணைக் குழுவால் குற்றம் சுமத்தப்படாத >> 25

பாடசாலைக்குச் செல்லாதவாறு

வீட்டுக்குள் முடக்கப்பட்டிருந்த சிறார்கள் மூவர் மீட்கப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஜூன் 15

பாடசாலை செல்லவேண்டிய சிறார்கள் சுமார் சில வாரங்களாக வீட்டுக்குள் முடக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுப் பொலிஸாரும் தெல்லிப்பழை சிறுவர் நன்னடத்தைப் பிரிவினரும் இணைந்து மீட்டனர். அவர்கள் நீதிமன்றினூடாக இல்லம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை கொல்லங்கலட்டியில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் அங்கு பரப >> 25

இனவாதத்தை ஒழித்துக்கட்ட தேவையேற்பட்டின் புதிய சட்டம்

தலைமை அமைச்சர் ரணில் சிறப்பு அறிவிப்பு குரோதத்தைத் தூண்டுபவர்களுக்கு எதிராக கடும் சட்ட நவடிக்கை எடுக்குமாறும் பணிப்பு

கொழும்பு, ஜூன் 15

ஓர் இனத்துக்கோ அல்லது மதத்துக்கோ எதிராக வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டு, குரோதத்தை விதைக்கும் தூண்டும் நபர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நவடிக்கை எடுக்குமாறு >> 04

என் மீது பொய்க் குற்றங்கள்

மறுதலித்தார் ஐங்கரநேசன்

யாழ்ப்பாணம், ஜூன் 15

எனது பெயருக்குக் களங்கம் கற்பித்து, எனது ஆளுமையைப் படுகொலை செய்து, அரசியல் அரங்கில் இருந்தும் பொது வாழ்க்கையில் இருந்தும் என்னை அகற்றும் நோக்குடன் பொய்யான குற்றச்சாட்டுக்கள் என் >> 25

வாள்களுடன் வந்த குழு கடைகளை நொறுக்கியது

கொக்குவிலில் நேற்று காடைத்தனம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

பட்டப்பகலில் வாள்களுடன் வந்த கும்பல் கடைகளை அடித்து நொறுக்கினர். இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம், கொக்குவிலில் >> 25

மைத்திரிக்குச் சூனியம்

கெப்பிற்றிக்கொலாவ மயானத்தில் செப்புத் தகடு கண்டுபிடிக்கப்பட்டதாம்

கொழும்பு, ஜூன் 15

பதவியா, கெப்பிற்றிக்கொலாவ முதன்மை வீதியின் அருகிலுள்ள பஹல உஸ்கொல்ல மயானத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன >> 25

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

நடைமுறை மாற்றத்தை விரும்புகிறார்கள் மக்கள் அதனைக் கவனத்திற் கொள்வது தார்மீகக் கடமை

வடக்கு மாகாண சபையின் சிறப்பு அமர்வில் முதலமைச்சர் உரை

யாழ்ப்பாணம், ஜூன் 15

அமைச்சர்கள் மீதான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டாலும் சரி இல்லாவிட்டாலும் சரி நடைமுறை மாற்றம் ஒன்றை எமது உறுப்பினர்களும் மக்களும் விரும்புகின்றார்கள் போலத் தெரிகின்றது. இவற்றை எல்லாம் கவனத்திற்கெடுத்துச் செயற்படுவது எனது தார்மீகக் கடமையாகும்.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

வடக்கு மாகாண சபையின் அமைச்சர்களுக்கெதிரான குற்றச்சாட்டுக்களின் விசாரணை தொடர்பான சிறப்பு அமர்வு நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தனது நீண்ட உரையில் மேலும் தெரிவித்ததாவது:

அமைச்சர்களாகிய நாம் உரிய பயிற்சியுடன் இந்தப் பதவிக்கு வரவில்லை. சட்டங்கள் எமக்குச் சாதகமாக இருந்ததில்லை. அரசியல் சூழல் எமக்குச் சாதகமாக இருப்பதாகத் தெரியவில்லை. இருப்பினும் எம் மக்களின் எதிர்பார்ப்பு எல்லை கடந்திருக்கின்றது. எம்மவர் எமக்குப் பெற்றுத் தருவார்கள் என்ற திடநம்பிக்கை அவர்களுக்குண்டு. அதை நாம் சிதைத்தலாகாது. எம் அமைச்சர்கள் குற்றங்கள் இழைத்தார்களா இல்லையா என்பது முக்கியமில்லை. சட்டப்படி அவை குற்றங்களா இல்லையா என்பதும் முக்கியமில்லை. அவை தண்டனைக்கு உட்படுத்தப்படக் கூடியகுற்றங்களா அல்லது வெறும் தவறுகளா என்பது கூட முக்கிய மல்ல.

அமைச்சர்களின் நடவடிக்கைகள் என்று கூறப்பட்டுள்ளவை மக்கள் மனதில் எந்தவிதமான எண்ணங்களை, மனத்திருப்தியின்மையை, வெறுப்பை ஏற்படுத்தியுள்ளன என்பன சிந்திக்கப்பாலன. அந்தவகையில் குறையோ நிறையோ, சரியோ பிழையோ, ஒரு செயன்முறையின் ஊடாக நாங்கள் வந்துள்ளோம். 'ஒருவர் மேல்தான் குற்றம், [illegible] பற்றையோரையும் தேவையில்லாது உள்ளடக்கியுள்ளார்' என்ற குற்றச்சாட்டைச் சிலர் முன்வைத்தார்கள். விசாரணை அறிக்கை அதற்கு விடை பகர்ந்திருக்கின்றது. இவ்வாறான விடயங்களில் அரசியல் கலக்கப்பட்டமை வருத்தத்திற்குரியது. இது சம்பந்தமாக ஒருவிடயத்தைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

ஏனைய அமைச்சர்கள் நிரபராதிகள் அல்லர்

விசாரணைக் குழு முன் சமர்ப்பித்த குற்றச்சாட்டுக்களுக்கு மேலதிகமாக முறைப்பாட்டாளர்கள் வராமையால் விடுவிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட அமைச்சர்களுக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுக்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. எனவே உரிய விசாரணைகள் உண்மையைக் கொண்டுவருவன. ஆனால் முறைப்பாட்டாளர் வராததால் விடுவிக்கப்பட்டவர்கள் குற்றம் செய்யாத நிரபராதிகள் என்று கூறித் திரிவது மனவருத்தத்துக்குரியது.

அவ்விரு அமைச்சர்கள் சம்பந்தமாகக் குற்றங்கள் நிரூபிக்கப்படவில்லை என்பது முழுமையான உண்மை அல்ல. முறைப்பாட்டாளர்கள் வராததால் அவர்கள் மீதான குற்றங்களைப் பரிசீலித்து முடிவுக்கு வரமுடியாதாக இருந்தது என்பதே உண்மை. முறைப்பாட்டாளருள் ஒருவர் பகிரங்கமாகவே இம்



மன்றில், தான் விசாரணைத் தினமன்று போகமுடியாமைக்கான காரணங்களைக் கூறினார். மீண்டும் விசாரணை நடந்தால் தன்னால் தனது குற்றச்சாட்டுக்களை நிலைநாட்டமுடியும் என்றுங் கூறியுள்ளார்.

இரு அமைச்சர்களின் தன் நிலைவிளக்கங்கள் எந்த அளவுக்கு மக்களின் நல்லெண்ணத்தை மீண்டும் நிலைநிறுத்துவன என்பது சர்ச்சைக்குரிய விடயம். ஆனால் கவனத்திற்கு எடுக்கப்படவேண்டிய பல விடயங்கள் அவர்களால் முன்வைக்கப்பட்டுள்ளன. அவர்கள் சம்பந்தமாக விசாரணைக் குழுவொன்றை மீள் நியமனம் செய்யமுடியாது. அவர்கள்பேரிலானமேலதிகவிசாரணைகள் காலத்தை விரயமாக்கும் செயல்கள். எமக்கிருக்கும் மிகுதிக் காலம் சொற்பமே.

ஒத்துழைக்காத அமைச்சர்கள்

எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் நாம் கூறியிருந்த விடயங்களை நடைமுறைப்படுத்த நாம் எமதுவேலைகளைத் துரிதமாகச் செய்ய எம்முள் ஒற்றுமைவேண்டும். சுயநலம் மேலிட்டால் பொதுநலம் மறந்துபோய்விடும். சிலஅமைச்சர்கள் எம்முடன் ஒத்துழைக்காது பிறநிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்ப செயற்படுவது நன்கு புலனாகின்றது. அவர்களுக்கு மத்தியஅரசும் அங்குள்ளஅமைச்சர்களும் கூடிய முக்கியத்துவம் பெற்றுவிட்டார்கள். அதனால் எம்மைத் தூஷிக்கவும் தயங்குகின்றார்கள் இல்லை. இது ஒற்றுமையை வளர்க்காது ஒத்துழைப்பின்மையையே வலியுறுத்தும். அமைச்சர்கள் ஐவரும் ஒருமித்து வெளிப்படைத் தன்மையுடனும் பொறுப்புடனும் முன் சென்றால்தான் மக்கள் பயன் அடைவார்கள். நாம் ஒருவரோடு ஒருவர் ஒத்துழையாது செயற்படுவது எமது மக்களுக்கு நாம் செய்யுந் துரோகமாகும்.

அமைச்சர்கள் மீது ஏளனப் பார்வை

எனினும் குற்றஞ்சாட்டப்பட்ட அமைச்சர்கள் குற்றவாளிகளாகக் காணப்பட்டார்களோ இல்லையோ காணப்படுவார்களோ இல்லையோ இன்றையநிலையில் அவர்கள் பதவியில் தொடர்ந்தால் எமது அமைச்சர்கள் மக்களின் ஏளனப் பார்வைக்கு ஆளாகவேண்டிவரும். அவர்களின் கீழ்பணிபுரியும் அலுவலர்களின் விமர்சனங்களுக்கு ஆளாக நேரிடும். அதுதான் யதார்த்தம்.

நிர்வாக ரீதியான முறைகேடுகளும், ஒழுக்கவீனங்களும் நடைபெற்றுள்ளதாலும் ஒரு நேர்மையானகண்ணியமானநாணயமான நிர்வாகத்தைமக்கள் எதிர்பார்த்திருப்பதாலும் இந்த அறிக்கையில்உள்ள சிலவிடயங்களையும் மற்றும் வேறு காரணங்களையும் கவனத்தில் எடுத்து மக்களின் நம்பிக்கையை மீண்டும் கட்டி எழுப்பவேண்டிய கடப்பாடொன்று எனக்குள்ளது. முன்னர் சாட்சியங்கள் வராமையால் விடுவிக்கப்பட்ட வர்கள் மீது உரிய விசாரணை நடத்தாது அவர்களைத் தண்டிப்பது பொருத்தமாகாது.

சந்தி சிரிக்க செய்துள்ளீர்கள்

இன்றைய இந்த நிலைமையை நான் ஏற்படுத்தவில்லை. இந்த மன்றின் உறுப்பினர்களே ஏற்படுத்தினார்கள். சில உறுப்பினர்கள் என்சார்பானவர் என்று அடையாளப்படுத்தப்பட்ட ஒரு அமைச்சரை மட்டும் வெளியேற்ற முற்பட்டு அவர்களின் மதிப்புக்குரிய இன்னொருவரையும் பதவி இறக்கும் நிலைக்குக் கொண்டுவந்துள்ளார்கள். எமது வெளிப்படையான செயற்பாடுகள் சகலதையும் மக்கள் முன்னிலையில் எடுத்துச் சென்றுவிட்டன. இது எமக்கு ஒரு பாடமாக அமையவேண்டும். குற்றங்கள் எனக் கூறப்பட்ட வற்றை என்னிடம் தனிப்பட்ட முறையில் கூறியிருந்தால் அவைபற்றி உரிய விசாரணை செய்து நடவடிக்கைகள் எடுத்திருப்பேன். சந்தி சிரிக்க மன்றில் எடுத்துப் பத்திரிகைகளில் விளாசித் தள்ளி அமர்க்களம் ஆக்கிவிட்டீர்கள். இப்பொழுது ஏன்தான் இவ்வாறு செய்தோம் என்று அல்லல்படுகின்றீர்கள். அமைச்சர்களின் மனங்களையும் புண்படுத்தியுள்ளீர்கள். இவ்வாறான புகார்கள் இனியாவது இரகசியமாக எமக்குத் தெரியப்படுத்தப்பட்டால் உரிய நடவடிக்கைகளை நாம் எடுப்போம்.

பன்டோராவின் பெட்டியைத் திறக்காதீர்கள் என்றார்கள். திறந்தார்கள். அத்துடன் வேண்டத்தகாத பலவும் வெளியே வந்துவிட்டன. அதுபோல் இதுவரை நடைபெற்ற செயற்பாடுகள் யாவும் எம் எல்லோருக்கும் பாடமாக அமையட்டும். தனிப்பட்ட குரோதங்களுக்கும் பதவியாசைக்கும் பேராசைக்கும் எம்மை அடிமைப்படுத்திக் கொண்டால் வரக்கூடிய விளைவுகளுக்கு எங்கள் எல்லோரதும் இது வரையிலான நடவடிக்கைகள் சாட்சியமாக அமைகின்றன. வேறெங்கோ இருப்பவரின் பதவி ஆசையானது எம்முள் சிலரை வழிநடத்திக் கொண்டிருக்கின்றதோ என்றும் எண்ணவேண்டியுள்ளது.

அமைச்சரவை மாற்றக் கோரிக்கை வலுவுடன்

மக்கள் எமது வேலைகளைத் துரிதகதியில் நிறைவேற்றவேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள். அவற்றை நேர்மையுடனும் பொறுப்புடனும் வெளிப்படைத்தன்மையுடனும் செய்யவேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றார்கள். இந்த நிலைமையில் இந்த மன்றின் 16 உறுப்பினர்கள் அமைச்சரவை மாற்றம் கோரிச் சென்ற வருடம் மார்ச் மாதம் ஒரு மனுச் செய்திருந்தார்கள். எந்தவித குறைகளும் கூறப்படாமல் எவ்வாறு அதனை நடைமுறைப்படுத்துவது என்று நான் அவர்கள் கோரிக்கைகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கத் தாமதித்தேன்.

ஆனால் முல்லைத்தீவுக்கு ஒரு அமைச்சர் இல்லை என்ற விடயத்தைக் கருத்தில் எடுத்திருந்தேன். அதன் பின்னர் தான் விசாரணைக்குழு அமைக்கவேண்டி வந்தது. அண்மையில் நான் அவர்களிடம் குறித்த கோரிக்கையை நினைவுபடுத்தி அந்தக் கோரிக்கை இன்றும் வலுவானதா என்று அறிய முற்பட்டேன். அதில் இருந்து தெரியவந்தவை அந்தக் கோரிக்கை இன்றும் வலுவுடையது என்பதே. நான்கு உறுப்பினர்கள் மட்டும் எந்தவித மாற்றங்களும் இனித் தேவையில்லை என்று கூறியுள்ளார்கள். அதில் அரசியல் கலந்திருப்பதைக் காண்கின்றேன். எனவே எல்லோரையும் மாற்றவேண்டும் என்று சென்ற வருடம் கேட்டவர்கள் இன்று ஒருவரையும் மாற்றத் தேவையில்லை என்கின்றார்கள். மாற்றக் கோரும் கோரிக்கை என்முன் கிடப்பில் இப்போது உள்ளது.

அதிகாரம் முதல்வருக்கே

மற்றையவர்கள் போனால் முதலமைச்சரும் வெளியேறவேண்டும் என்ற கோரிக்கை இப்பொழுது சிலர் மத்தியில் நடைமுறைச் செல்வாக்குப் பெற்றுவருகின்றது. ஒரு முதலமைச்சரை மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கின்றார்கள். அமைச்சர்களை முதலமைச்சரே கட்சி வரையறைகளைப் பேணி மாவட்ட நலவுரித்துக்களைச் சிந்தையில் நிறுத்தித் தேர்ந்தெடுக்கின்றார். அதற்குச் சட்டவலுவை ஆளுநர் அளிக்கின்றார். ஆளுநரால் தான் தோன்றித்தனமாக அமைச்சர்களை நியமிக்கமுடியாது. எனவே மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் முதலமைச்சர், தான் சிபார்சு செய்த அமைச்சர்களை நீக்கிப் புதியஅமைச்சர்களை நியமிக்கக் கோரும் பொறுப்பை உடையவர் என்பதை இங்கு கூறிவைக்கின்றேன்.

அமைச்சர்கள் மீதான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டாலும் சரி இல்லாவிட்டாலும் சரி நடைமுறைமாற்றம் ஒன்றை எமது உறுப்பினர்களும் மக்களும் விரும்புகின் றார்கள் போலத் தெரிகின்றது. இவற்றை எல்லாம் கவனத்திற்கெடுத்துச் செயற்படுவது எனது தார்மீகக் கடமையாகும். இதன் நிமித்தம் அமைச்சர்கள் குருகுலராஜா, ஐங்கரநேசன் ஆகியோரைத் தாமாகவே தமது பதவிகளைத் தியாகம் பண்ணுமாறுவேண்டிக் கொள்கின்றேன். மற்றைய இரு அமைச்சர்களுக்கு எதிராகப் புதிய விசாரணையொன்று நடைபெறும். அவர்களுக்குஎதிராகக் கிடைத்திருக்கும் மேலதிக விடயங்களும் அந்த விசாரணை யின் போது பரிசீலனை செய்யப்படுவன. விசாரணை முடிவடையும் வரை இயற்கை நீதியையும் நல்லாட்சி விழுமியங்களையும் கருதி இரு அமைச்சர்களும் விடுமுறையில் விலகி இருக்கவேண்டும். தமது அமைச்சு விடயங்களில் அவர்களோ அவர்களின் பிரதியேக ஆளணியினரோ பங்குபற்றல் ஆகாது. அவர்களின் அமைச்சுப் பொறுப்புக்களைநான் தற்காலிகமாக ஏற்றுக் கொள்கின்றேன். அந்த அமைச்சர்களின் செயலாளர்கள் எனக்குப் பொறுப்புக் கூறவேண்டும்.

விசாரணையில் அவர்கள் விடுதலை அடைந்தால் திரும்பவும் பதவிகளில் தொடர்ந்து கடமையாற்றலாம். எனவே முதலிரு அமைச்சர்களின் பதவி விலகல் கடிதங்களையும் மற்றைய இருவரின் ஒரு மாதத்திற்கான விடுமுறைக் கடிதங்களையும் நாளை மதியத்துக் கிடையில் நான் எதிர்பார்க்கின்றேன். கூடிய விரைவில் புதிய விசாணைக் குழு நியமிக்கப்படும். வேண்டுமெனில் விடுமுறையில் உள்ளஅமைச்சர்களின் விடுமுறைக் காலம் தேவைக்கேற்றபடி நீட்சி செய்யப்படும் - என்றார்.

(து-5)

மாணவி மீது வன்கொடுமை முயற்சி கண்டித்து டயகமவில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூன் 15

டயகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரபல பாடசாலை ஒன்றில் உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவி ஒருவரை பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்த முயற்சிக்கப்பட்ட சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், குற்றவாளிகளுக்குத் தகுந்த தண்டனை வழங்க கோரியும் நேற்று 2 மணியளவில் டயகம நகரில் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் இணைந்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. டயகம நகரில் உள்ள 59 கடைகளும்

சுமார் ஒரு மணித்தியாலம் பூட்டப்பட்டு ஆதரவு வழங்கப்பட்டது.

(ற-10)

பட்டப் பகலில் நகை திருட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 16

தம்பசிட்டி, மடத்தடி புலோலி வடமேற்கு பகுதியில் பட்டப்பகலில் 25 ஆயிரம் ரூபா பணமும், ஆறு பவுண் நகையும் களவு போயுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்று நண்பகல் 12 மணியளவில் குறித்த வீட்டுக்காரர் கோவிலுக்குச் சென்றிருந்த நிலையில் வீட்டின் முன்பக்கக் கதவு உடைக்கப்பட்டு சாமி அறையில் இருந்த பணமும், நகையும் கொள்ளையிடப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பருத்தித்துறைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(ற)

விபத்தில் சிக்கிய பெண்ணும் சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 15

நேற்றுமுன்தினம் காலை பளைப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த பெண் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். அவரது குழந்தை விபத்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில், அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

நேற்றுமுன்தினம் காலை 5.30 மணியளவில் பளை முகமாலைப் பகுதியில் கார் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 3 வயதுடைய குழந்தை உயிரிழந்தது. அதன் தாயும், தந்தையும் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தனர். (ற-6)

லண்டன் தீ விபத்து: இலங்கையர்கள் சிக்கியுள்ளனரா என விசாரணை

கொழும்பு, ஜூன் 15

லண்டன் நகரிலுள்ள 27 மாடிகளைக் கொண்ட கட்டடமொன்றில் ஏற்பட்ட தீ விபத்தால், இலங்கையர்கள் எவரேனும் பாதிக்கப்பட்டுள்ளனரா என்பது தொடர்பான தகவல்களை, அங்குள்ள இலங்கைத் தூதரகத்திடம் கோரியுள்ளதாக அயலுறவு அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இதுவரை கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில், தீ விபத்துக்குள்ளான கட்டடத்தில் இலங்கையர்கள் எவரும் இருக்கவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளதெனவும் அவர் கூறினார்.

நேற்று அதிகாலை ஏற்பட்ட இந்தத் தீ விபத்தைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், அந்தக் கட்டடத்துக்குள் சிக்கியுள்ள பொதுமக்களை மீட்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த)

வறட்சியால் பாதிக்கப்பட்ட வடக்குக்கு உதவி வழங்குவதில் அரசு பாரபட்சம்

சரவணபவன் எம்.பி. சீற்றம்

கொழும்பு, ஜூன் 15

வடமாகாணத்தில் சுமார் நான்கு லட்சம் பேர் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எந்தவொரு உதவியும் இதுவரை கிட்டவில்லை. இயற்கையால் வஞ்சிக்கப்பட்ட எமது மக்களை அரசும் வஞ்சிக்கிக்கின்றது. வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அரசு பாரபட்சமின்றி உதவிகளை வழங்கவேண்டும்.

இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கோரிக்கை விடுத்தார்.

நாட்டில் அண்மையில் ஏற்பட்ட இயற்கை இடர் தொடர்பில் நாடாளுமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை ஜே.வி.பியால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன, மத பேதம் பார்த்து இயற்கை வஞ்சிப்பதில்லை. தெற்கை வெள்ளமும் மண்சரிவும் வாட்டிவதைக்கின்றது. இலங்கையின் வடபுலத்தை வரட்சி வாட்டி வதைக்கின்றது. வடக்கின் 5 மாவட்டங்களில் சுமார் 4லட்சம் பேர் வரையில் வரட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என இடர் முகாமைத்துவத் திணைக்களம் அறிக்கையிட்டுள்ளது.

தென்பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்கப்படவேண்டும். அதில் மாற்றுக்கருத்து இருக்கமுடியாது. பல்வேறு தரப்புகளிடமிருந்தும் அவர்களுக்கு உதவிகள் கிடைத்துக்கொண்டு இருக்கின்றன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப்பொருள்கள் சரியாகப் போய்ச் சேருவதை அரசு உறுதிப்படுத்தவேண்டும்.

வடக்கில் வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தவோர் உதவியும் இதுவரை கிடைக்கவில்லை. இயற்கை வடக்கையும் தெற்கையும் வஞ்சித்தால், இந்த அரசும் வடக்கு, தெற்கு என்று உதவி வழங்கலில் பாரபட்சம் காட்டி வஞ்சிக்கின்றது.

தெற்கில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதையாரும்தடுக்கவில்லை. அதேபோல் வடக்கில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உதவுங்கள் என்றுதான் கேட்கின்றோம். இதைக் கேட்பது ஒன்றும் இனவாதமல்ல. சம உரிமையைத்தான் கேட்கின்றோம்.

அண்மையில் அமைச்சர் சம்பிக்க ரணவக்க பத்திரிகையாளர் சந்திப்பொன்றை நடத்தியிருந்தார். அதில் அவர், யாழ்ப்பாணம் இன்னும் 50 வருடங்களில் பாலைவனமாகும். நிலத்துக்காகப் போராடும் தமிழ் மக்கள் முதலில் இதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று கூறியிருந்தார்.

அமைச்சர் மிகவும் பாரதூரமான ஒரு விடயத்தை பத்திரிகையாளர் சந்திப்புடன் முடித்துவிட்டார். அபாய எச்சரிக்கை விடுத்த அமைச்சர், அதை எதிர்கொள்வதற்கு என்ன திட்டம் இருக்கிறது என்பதைக் கூறவில்லை. அமைச்சரின் அபாய எச்சரிக்கை தொடர்பில் கூட்டு அரசு என்ன செய்யப்போகின்றது?

50வருடத்தில்யாழ்ப்பாணம்பாலைவனமாகட்டும் என்று நீங்கள் பேசாமல் இருக்கப்போகின்றீர்களா?.

இந்த அரசு இதற்கு என்ன திட்டத்தை வைத்திருக்கின்றது? யாழ்ப்பாணம் பாலைவனமாவதைத் தடுப்பதற்குக் குறுகிய மற்றும் நீண்டகாலத் திட்டங்கள் என்ன? அரசு அதற்கான கலந்தாலோசனைகள் எவற்றையாவது இதுவரையில் முன்னெடுத்திருக்கின்றதா என்பது தொடர்பில் அரசின் பதிலை எதிர்பார்க்கின்றேன். மிகவும் பாரதூரமான விடயத்தை அரசு வெறுமனே கடந்துசெல்லக் கூடாது.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றவன் என்ற அடிப்படையில் மிக முக்கியமான பேரிடர் பற்றி இங்கு பிரஸ்தாபிக்கவேண்டியிருக்கின்றது. அதாவது, யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீர் தொடர்பில் கவனம் செலுத்தப்படவேண்டியிருக்கின்றது. அங்கு நிலத்தடி நீர் ஏற்கனவே மாசுற்றுள்ளது. அதனைப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீர் உவராகி வருகின்றது. மலத்தொற்றுக்கள் நீருடன் கலக்கின்றன. நைத்திரேற்நீரில் கலந்துள்ள அளவு அதிகரித்துள்ளது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாகச் சுன்னாகத்தில் இயங்கிய மின் உற்பத்தி நிலையத்திலிருந்து வெளியேற்றப்பட்ட கழிவு 'ஒயில்' நிலத்தடி நீருடன் கலந்துள்ளது. இப்படிப்பட்ட பல காரணிகளால் நிலத்தடி நீரைப் பயன்படுத்த முடியாதுள்ளது. இந்தப் பெரிய பிரச்சினைக்கு அரசு என்ன தீர்வைப் பெற்றுத்தரப்போகின்றது? இதற்காக இரணைமடுக் குடிதண்ணீர்த் திட்டத்தை முன்வைத்ததாக

அரசு கூறக்கூடும். இந்தத் திட்டத்தைக் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் எதிர்த்திருந்தார்கள். எனவே இதற்கு மாற்றுத்திட்டம் என்ன? அரசின் திட்டத்தை மக்கள் எதிர்த்ததால் மக்களுக்கு மாற்றுத் திட்டம் வழங்காமல் அவர்களைப் பழிவாங்குவதுதான் அரசின் வேலையா? நிலத்தடி நீரைப் பருகமுடியாது அவதிப்படுகின்ற மக்களுக்கு மாற்றுத் திட்டத்தை அரசு கண்டறிந்து உடனடியாகநடைமுறைப்படுத்தவேண்டும். எதிர்காலத்தில் சனத்தொகை அதிகரிப்பு, அபிவிருத்தித் தேவைகள் என்று குடிதண்ணீரின் தேவை அதிகரித்துத்தான் செல்லும். அந்த அதிகரிப்பை ஈடு செய்யும் வகையில் குடிதண்ணீர் வழங்கப்பட வேண்டும். சுத்தமான குடிதண்ணீர் வழங்கப்படுவதை அரசு உறுதிப்படுத்தவேண்டும்.

பாலைவனமாகும் என்று எச்சரிப்பதோ, குடிதண்ணீர் மாசடைந்துவிட்டது என்று அறிவிப்பதோ அரசின்வேலையல்ல. அதைச் சீர்செய்து அதிலிருந்து நாட்டு மக்களைப் பாதுகாப்பதுதான் அரசின் முக்கிய பணி -என்றார். (ற-ய)

பதில் கடமையாற்றும் அதிபர்கள் முறைப்பாடு

நாடளாவிய ரீதியில் பதில் கடமை புரியும் அதிபர்களுக்கான கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டமைக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யுத்த காலத்தில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தாம் கடமையாற்றிய போதிலும் தமக்கான கொடுப்பனவுகளை மத்திய அரசு நிறுத்தி வைத்துள்ளதாக பதில் கடமை அதிபர் சங்கத்தினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் 3ஆயிரத்து 800 பதில் கடமை அதிபர்கள் பணியாற்றி வருகின்றனர். அரசு தம்மை வேறுபடுத்திப் பார்க்கின்றது என்று சுட்டிக் காட்டிய அந்தச் சங்கத்தினர் தமக்கான கொடுப்பனவுகளை நிறுத்தாது கல்வி அமைச்சு பெற்றுத்தர வேண்டும் என்று வலியுறுத்தினர். (ற)

டுபாயில் நடைபெற்ற 89 நாடுகள் பங்குபற்றிய பன்னாட்டு கிராஅத் போட்டியில் இறுதிச்சுற்றில் தஸ்கரை அல் ஹக்கானியா அரபுக் கல்லூரி மாணவன் 4ஆம் இடத்தைப் பெற்றுள்ளார். கம் பளை, மரியாவத்தை பகுதியை சேர்ந்த அல் ஹாபில் அர்கம் ஹுசைன் 9ஆம் தரத்தில் கல்வி கற்கின்றார். (ற)

அனைத்து இன மக்களையும் அரவணைத்தாலே அபிவிருத்தி

கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

நுவரெலியா, ஜூன் 15

இலங்கையில் பெரும்பான்மையினர் என்று தங்களை அடையாளப்படுத்துகின்றவர்கள் அனைத்து இனத்தையும் அரவணைத்துக் கொண்டு சென்றால் மாத்திரமே இந்த நாட்டின் பெறுமதியையும் அபிவிருத்தியையும் மிக விரைவாக அடைய முடியும்.

இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் கல்வித்தரத்தை உயர்த்தும் வேலைத் திட்டத்தின் கீழ் 108 ஆசிரிய மத்திய நிலையங்களுக்கான நிலைய முகாமையாளர்களுக்கும், பத்தொன்பது ஆசிரிய கல்வியியல் கல்லூரிகள் ஆசிரியகலாசாலைகளுக்குமாக 127மடிக் கணினிகள் நேற்றுமுன்தினம் கொழும்பில் கல்வி அமைச்சின் கேட்போர் கூட மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டன.

அந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கல்வி அமைச்சு கல்வியின் தரத்தை உயர்த்தும் முகமாக தற்பொழுது பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அதன் ஒரு பகுதியாகவே மடிக் கணினிகள் வழங்கப்படுகின்றன. இவற்றை இலவசமாக வழங்குவதற்குக் காரணம் இவற்றை ஆசிரியர்கள் பயன்படுத்தி அவற்றை மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும் என்பதாகும்.

எதிர்காலத்தில் நாங்கள் அனைத்து பாடசாலைகளுக்கும் அறிமுகம் செய்யவுள்ள நேர்த்தியான வகுப்பறை அல்லது ஸ்மாட் வகுப்பறை என்று சொல்லப்படுகின்ற வகுப்பறையின் ஒரு ஆரம்பமாகவே இந்தத் திட்டம் அமைந்துள்ளது.

தற்போது இந்த நாட்டில் தமிழர்களுக்குப் பிரச்சினைகள் இருக்கின்றன. முஸ்லிம்களுக்குப் பிரச்சினைகள் இருக்கின்றன. அதே போல சிங்களவர்களுக்கும் பிரச்சினைகள் இருக்கின்றன. அவை அனைத்தும் சுமுகமாகத் தீர்க்கப்பட வேண்டும். அப்படிச் செய்யாமல் இந்த நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது.

சிங்கப்பூர் நாட்டை இன்று எல்லோரும் உதாரணமாக சொல்கின்றார்கள். அவர்களுடைய நாட்டில் இன, மத, மொழி பாகுபாடு இல்லை. அதன் காரணமாக அவர்கள் மிகவும் வேகமாக வளர்ச்சியடைந்துள்ளார்கள். நாங்கள் அதைச் செய்ய வேண்டும். இங்கிருக்கின்ற பெரும்பான்மை சமூகம் அதை உணரவேண்டும். அவர்கள் உணராத வரை இதற்கான தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியாது - என்றார்.

(ற-10)

மாவட்டங்கள் தோறும் நல்லிணக்கக் குழுக்கள்

அரசு தீர்மானம்

கொழும்பு, ஜூன் 15

நாட்டின் தற்போதைய நிலமையை கருத்திற்கொண்டு மாவட்ட மட்டத்தில் நல்லிணக்கக் குழுக்களை அமைப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது என்று நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் காணி அமைச்சரும், அமைச்சரவை துணைப் பேச்சாளருமான கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மாவட்டச் செயலாளரின் தலைமையில், மதத்தலைவர்கள், பிரதேச பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் தெரிவு செய்யப்பட்ட வேறு பிரதிநிதிகளுடன் கூடிய மாவட்ட மட்டத்திலான நல்லிணக்கக் குழுக்களை அமைப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள இன மோதல்களைத் தீர்த்துவைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அந்தக் குழுவுக்கு அதிகாரத்தை வழங்குவதற்கும், மாவட்டக் குழுக்களுக்கு மேலதிகமாக தேசிய நல்லிணக்க குழுவொன்றை நியமிப்பதற்கும் தேசிய ஒருமைப்பாடு மற்றும்நல்லிணக்கக்குழுவொன்றை நியமிப்பதற்கும்தீர்மானிக்கப்பட்டது.

இதற்காக தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சர் எனும் ரீதியில் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனசமர்ப்பித்த ஆவணத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது - என்றார். (ற)

மாங்குளத்தில் 1000 ஏக்கரில் பொருளாதார வலயம்

வேலையில்லாப் பிரச்சினைக்கு உடன் தீர்வு காணும் வகையில்

யாழ்ப்பாணம், ஜூன்15

வடபகுதி மக்களின் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக வவுனியா, மாங்குளம் பகுதியில் 1,000 ஏக்கர் காணியில் பொருளாதாரவலயமொன்றை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை யாழ். மாவட்டச் செயலகத்தில் அரச தலைவர் மைத்திரிபால தலைமையில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கூட்டத்தில் மேற்படி பிரச்சினை கலந்துரையாடப்பட்டபோது அரச தலைவரிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

இந்தப் பொருளாதார வலயத்தில் முதலீடுசெய்ய வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பலர் தற்போது தமது விருப்பத்தைத் தெரிவித்திருக்கின்றனர். முதலீட்டுச்சபையின் தலையீட்டுடன் இந்த முதலீட்டாளர்கள் நாட்டுக்கு வரவிருக்கின்றனர். மூன்று கட்டங்களாக நிர்மாணிக்கப்படவுள்ள இந்தப் பொருளாதார வலயம் சுற்றாடல் நட்புறவான விதத்தில் சர்வதேச தரநியமங்களுக்கு ஏற்றவாறு உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ள முடியும் - என்றார். (த-ய)

மக்களுக்கு உதவுவோரை ஊக்குவித்தல் வேண்டும்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டு. மாவட்ட கிளைத் தலைவர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 15

மனிதருக்கு மனிதர் உதவுதல் வேண்டும். எல்லோரும் ஏதோ ஒருவகையில் பிறருக்கு உதவிக்கொண்டுதான் இருக்கின்றனர். சிலர் பிறருக்கு உதவுவதை மனித கடமையாகக் கருதி தங்களது நேரம், காலம், செல்வம், உழைப்பு என்பவற்றில் பெரும் பகுதியை பிறருக்காக அர்ப்பணிக்கின்றனர். இத்தகைய அர்ப்பணிப்பாளர்களை வார்த்தைகளாலும் நடவடிக்கைகளாலும் நாம் ஊக்குவிக்க வேண்டும்.

இவ்வாறு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட கிளைத் தலைவர் த.வசந்தராஜா தெரிவித்தார்.

மட்டக்களப்பு இராஜபுரம் கிராமத்தில் தண்ணீர் தாங்கி அமைப்ப தற்கான அடிக்கல் நடும் நிகழ்வின்போது கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

ஒவ்வொரு கிராமத்திலும் தங்கள், தங்கள் கிராமத்தின் முன்னேற்றத்துக்காக பாடுபடுகின்றவர்கள் பலர் இருக்கின்றார்கள். அந்த வரிசையிலே இராஜபுரம் கிராமத்திலும் அந்தக்காலம் முதல் இந்தக்காலம் வரை கிராமத்துக்காக பாடுபடுபவர்கள் இருந்து கொண்டுதான் இருக்கின்றார்கள். அன்றைய கிராமத்தின் தலைவரின் முயற்சியால் இங்கிருக்கும் குழாய்க்கிணறு அமைக்கப்பட்டது.

தற்போது இந்நாள் தலைவர் ஆறுமுகத்தின் முயற்சியால் நீர்த்தாங்கி அமையப்போகின்றது.

இந்த நீர்த்தாங்கியை அமைப்பதற்கான நிதியை இப்பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞன் பெற்றுக் கொடுத்துள்ளார் - என்றார். (ற-10, 46)

யானையின் தாக்குதலில் குடும்பத்தலைவர் காயம்

மட்டக்களப்பு, ஜூன் 15

மட்டக்களப்பு மயிலவட்டுவான் ஆற்றுப்பகுதியில் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்த குடும்பத் தலைவர் ஒருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது. வந்தாறுமூலை வீ.சி. வீதியைச் சேர்ந்த 53 வயதுடைய க.குமாரசிங்கம் என்பவரே யானையின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

காலை 6 மணியளவில் மயிலவட்டுவான்-வயற் பிரதேசத்திலிருந்து வீடு திரும்பும் வழியில் ஆற்றுப் பகுதியில் யானை அவரைத் தாக்கியுள்ளது. அவர் உடனடியாக பிரதேச மருத்துவனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

மயிலவட்டுவான் மற்றும் சந்தனமடு ஆற்றுப் பிரதேசத்தை அண்டிய பகுதிகளில் காட்டு யானைகளின் நடமாட்டம் அதிகம் காணப்படுகின்றது. அடிக்கடி யானையின் தாக்குதல் இடம்பெற்று பலர் உயிரிழந்துள்ளனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (ற-10)

சுன்னாகம் மற்றும் மல்லாகம் பகுதிகளில் அமைக்கப்பட்ட திவ்யா கலைக் கூடத்தினதும் முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி மையத்தினதும் திறப்பு விழா நேற்றுக் காலை நடைபெற்றது. சாவகச்சேரி திருக்கணித பதிப்பக முகாமையாளர் கா.சிவஞானசுந்தரம் தம்பதியினர் மங்கள விளக்கேற்ற திருமதி பராசக்தி கனகேஸ்வரன் அவற்றைத் திறந்தார். (ற)

கல்வளை பிள்ளையார் தேவஸ்தான ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன சமர்ப்பண நவகுண்டசகித புனரா வர்த்தன இராஜகோபுர மகா குடமு முக்கு ஆலயப் பிரதம குருவும் கும்பாபி ஷேகப் பிரதம குருவுமாகிய சிவ ஸ்ரீ ர.ஜெயராஜக் குருக்கள் தலைமையில் நேற்று நடைபெற்றது. (ற-10)

முஸ்லிம்களின் விடயத்தில் சட்டம் என்ன செய்கின்றது

காதர் மஸ்தான் கேள்வி

வவுனியா, ஜூன் 15

நாட்டின் சட்டம் முஸ்லிம்களது விடயத்தில் என்ன செய்கின்றது என்பதில் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் எமக்கே சந்தேகம் எழுகின்றது.

இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத்தலைவருமான கே.காதர் மஸ்தான் தெரிவித்தார்.

வவுனியா அலுவலகத்தில் இடம்பெற்ற இலவச கண் பரிசோதனை முகாமைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அண்மைக்காலமாக நாட்டில் இடம்பெறும் வன்முறைகள் தொடர்பில் சட்டம் தனது கடமையை சரிவர செய்வதாக தெரியவில்லை. இதனால் கூட்டரசின் மீது வைத்திருக்கும் நம் பிக்கையை சிறுபான்மையினர் இழந்துவருகின்றனர். கடந்த ஆட்சியை நாம் வீட்டுக்கு அனுப்பி சிறுபான்மையினரிடம் பரப்புரை செய்து இந்த ஆட்சியை கொண்டுவந்தோம் இந்த ஆட்சியிலும் அதே நிலை தொடர்வதால் மக்கள் குறிப் பாக முஸ்லிம்கள் கேட்கும் கேள்விகளுக்கு எம்மால் பதில் கூற முடியாமல் இருக்கின்றது. படையினர் ஒரிருவரை கைது செய்தாலும் அவர்களை விடுத்து முதலில் இவ்வாறான நாசகார செயல்களை செய்யத் தூண்டுவோரையும் அதற்கு உதவிகளை வழங்குவோரையும் முதலில் கைது செய்ய வேண்டும். முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களால் இனவாதிகளுக்கு எதி ராக ஒன்றிணைத்து எடுக்கும் எந்த தீர்மானமாக இருந்தாலும் அதற்கு நானும் ஒத்துழைப்பேன்- என்றார். (ற-10)

சின்னம் சூட்டும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 16

கொக்குவில் இந்துக் கல்லூரி இன்ரறக்ட் கழகத்தின் புதிய தலைவர் பதவியேற்பும் கழகத்தில் புதிதாக இணைந்து கொண்ட மாணவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும் "சுரபி" நூல்வெளியீட்டு நிகழ்வும் இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கழகத்தலைவர் ஜி.ரகுராம் தலைமையில் கல்லூரியின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத் தலைவர் ம.அருள்குமரனும் சிறப்பு விருந்தினராக திருநெல்வேலி கிளை இலங்கை வங்கி முகாமையாளர் த.பிருதிவிராஜ்ம் கலந்துகொள்ள வுள்ளனர் என்று தெரிவிக்கப் பட்டது. (ற)

முதலாம் பக்கத்தொடர்ச்சிகள்...

இனவாதத்தை...

பொலிஸாருக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள் ளது எனத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அத்துடன், நாட்டில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு மேலதிக ஏற்பாடுகள் அவசியமெனில் அதற்குரியசட்டத்தைநாடாளுமன்றத்தில்நிறைவேற்றுவதற்கு அரசு தயாராகவே இருக்கின்றது எனவும் அவர் கூறினார்.

ஒரு சில இனவாதக்குழுக்களின் செயற்பாட்டால் நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் தலைதூக்கியுள்ளன. இந்தநிலையில் இவற்றுக்கு எதிராக அரசு எடுக்கவுள்ள நடவடிக்கைகளை விவரிக்கும் வகையில் அலரிமாளிகையில் நேற்றுச் சிறப்பு அறிவிப்பொன்றை விடுத்த தலைமை அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:

ஓர் இனத்துக்கு அல்லது மதத்துக்கு எதிராக வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டு, குரோதத்தைத் தூண்டும் வகையில் செயற்படும் நபர்களுக்கு எதிராகக் கடும் சட்டநடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு பணிப்புரை விடுப்பதற்கு நேற்று (நேற்றுமுன்தினம்) நடைபெற்றஅமைச்சரவைக்கூட்டத்தில்தீர்மானிக்கப்பட்டது. இதன்மூலம் அரசின் கொள்கை என்னவாக இருக்கின்றது என்பது மீள உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நல்லிணக்கத்தையும், இன ஐக்கியத்தையும் ஏற்படுத்துவதற்காகவே நாட்டின் பிரதானியான அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன 2015 ஜனவரி 8ஆம் திகதி பதவியேற்றார். எனவே, இந்த விடயத்தில் அரசு உறுதியாகவே இருக்கின்றது. 30 வருடகாலப் போரைச் சந்தித்த நாம், இப்போது அனைத்து மக்களையும் அரவணைத்துக்கொண்டு முன்நோக்கி நகரவேண்டும். சிங்கள, பௌத்தனாக இருப்பதில் நான் பெருமையடைகின்றேன். அதேபோல் இலங்கையராக இருப்பதையிட்டு அதைவிடப் பெருமிதம் கொள்கின்றேன். இலங்கையர் என்ற வகையில் ஏனைய இனங்களின், மதங்களின் கலை, கலாசாரப் பண்பியல்புகளை நான் மதிக்கின்றேன். ஏனைய இனத்தையோ, மதத்தையோ வெறுப்பூட்டும் வகையில் செயற்பட்டால் அவர் இலங்கையராக இருக்கமுடியாது. சகல மக்களும் சம உரிமைகளை அனுபவித்து ஐக்கியமாகவும், சமாதானமாகவும் வாழும் நிலையை ஏற்படுத்திக் கொடுப்பதே அரசின் நோக்கமாக இருக்கின்றது.

கடந்த நாள்களில் பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டன; முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் சேதமாக்கப்பட்டன. இவை தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுத்து நிலமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது. இனவாதம், குரோதங்களைத் தூண்டுபவர்கள் இருப்பின் அவர்களிடம் விசாரணை நடத்திகைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பணிக்கப்பட்டது.

அதேவேளை, 2014 இல் ஏற்பட்ட இனவாதச்செயற்பாடால் (அளுத்கம சம்பவம்) ஒற்றுமைக்குப் பாதிப்பு ஏற்பட்டதுடன், நாட்டின் நற்பெயருக்கும் களங்கம் ஏற்பட்டது. எனவே, மீண்டும் அவ்வாறானதோர் இடத்துக்குச் செல்லமாட்டோம். செல்வதற்கு இடமும் அளிக்கமாட்டோம். சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு மேலதிக ஏற்பாடுகள் தேவையெனில் அதற்குரிய சட்டங்கள் நாடாளுமன்றத்தில் இயற்றப்படும் - என்றார். (த)

வயோதிபப் பெண் கொலை வழக்கின் எதிரிதரப்பு சாட்சியம் திங்கள்

மேல் நீதிமன்றில் இடம்பெறும்

யாழ்ப்பாணம். ஜூன் 15

வீட்டின்உரிமையாளரைக்கொலை செய்து அவரது வீட்டின் முற்றத்தில் புதைத்த வழக்கில், எதிரி தரப்புச் சாட்சியப் பதிவுகள் எதிர்வரும் 19 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

2009 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் வீட்டின் உரிமையாளரான வயோதிபப் பெண் கொலை செய்யப்பட்டு அவரது வீட்டு முற்றத்தில் புதைக்கப்பட்டிருந்தார். இந்தச் சம்பவம் தொடர்பில் அவ்வீட்டில் தனது மனைவி மற்றும் பிள்ளையுடன் வசித்த ஜெரோம் என்ற குடும்ப த் தலைவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்த வழக்கின் அரச தரப்புச் சாட்சிகளின் சாட்சியமளிப்பு முடிவடைந்த நிலையில் எதிரி தரப்புச் சாட்சியப் பதிவுகளுக்காக வழக்கு திகதியி டப்பட்டது.

இந்த வழக்கு கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றில் நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் எதிரி தரப்புச் சாட்சியப்பதிவுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிரிதரப்புச் சாட்சிகள் அன்றையதினம் மன்றில் முன்னிலையாகவில்லை. அதனால் வழக்கு எதிர்வரும் 19ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பின்னணி

2009 ஆம் ஆண்டின் இறுதியில் வீட்டின் உரிமையாளரான லில்லி மேரியை மூன்று மாதங்களாகக் காணவில்லை என்று ஜெரோம் உறவினர்களுக்குக் கூறியுள்ளார்.

ஜெரோமுக்கும் அவரது மனைவிக்கும் இடையில் குடும்பத்தகராறு ஏற்படவே மனைவி அவரை விட்டுப் பிரிந்தார். அவர் வீடுதேடிய போது, காணாமல் போயிருந்த லில்லி மேரியின் உறவினர் வீட்டுக்கு அருகில் வீடு கிடைக்கவே அதில் குடியமர்ந்துள்ளார்.

மூன்று மாதங்கள் கடந்த நிலையில், காணாமற்போன வீட்டின் உரிமையாளரான லில்லி மேரியைத் தனது கணவன் ஜெரோம் கொலை செய்து வீட்டின் முற்றத்திலேயே புதைக்கப்பட்ட தாகக் கூறியிருக்கிறார்.

இந்தத் தகவல் உடனடியாக யாழ்ப்பாணப் பொலிஸில் முறைப்பாடாகியது. சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ்ப்பாண நீதிவான் மற்றும் சட்ட வைத்திய அதிகாரியுடன் பொலிஸார் விசாரணை நடத்தினர்.

சடலம் புதைக்கப்பட்ட இடத்தை ஜெரோமின் மனைவி அடையாளம் காட்டினார். சடலம் தோண்டி எடுக்கப்பட்டு அடையாளம் காணப்பட்டது. கொலைக் குற்றச்சாட்டில் ஜெரோம் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

அவருக்குக் கடந்த வருடம் யாழ்ப்பாண மேல் நீதிமன்று பிணை வழங்கியது.

வழக்கு விசாரணைகள் ஆரம்பித்ததால் ஜெரோம் மீண்டும் விளக்க மறியலில் வைக்கப்பட்டார்.

அதன்பின்னர் சந்தேகநபரான ஜெரோமின் மனைவி உயிரிழந்தார். ஏனைய சாட்சிகளின் வாக்கு மூலங்கள் மன்றினால் விசா ரிக்கப் பட்டுப் பதிவு செய்யப்பட்டது. சந்தேக நபரின் சாட்சியமும் கடந்த தவணை மன்றினால் பதிவு செய்யப்பட்டது. (4-12)

வடக்கு சுகாதாரத் தொண்டர்களை முதலில் சேவைக்குள் உள்ளெடுங்கள்

அரச பொது ஊழியர் சங்கம் கோரிக்கை

அம்பாறை. ஜூன் 15

வடக்கு மாகாணத்திலுள்ள சுகாதாரத் தொண்டர்களை நடைமுறையிலுள்ள அரச நிர்வாக சுற்றறிக்கைகளுக்கு அமைவாக முதலில் அரச சேவைக்குள் உள்வாங்க வேண்டும்.

இவ்வாறு அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்களின் நிலைமைதொடர்பில்வடக்குமாகாண ஆளுநர், முதலமைச்சர், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர்மற்றும் சபையின் எதிர்க்கட்சித்தலைவர் ஆகியோருக்குச்சங்கம்அனுப்பிவைத்துள்ளமனுவில் இவ்வாறு கோரிக்கை வலியுறுத்தப்பட்டுள்ளது.

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத் தலைவரும் தொழிற்சங்கவாதியுமான எஸ். லோகநாதன், பொதுச் செயலாளர் எம். எம்.ஏ.வகாப் ஆகியோர் ஒப்பமிட்டுச் சங்கம் சார்பில் இந்த மனு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கு மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளில் போர்க்காலம் தொடக்கம் இன்றுவரையும் சுமார் பதினைந்து வருடங்களுக்கு மேலாகவும் சுகாதாரத் தொண்டர் ஊழியர்கள் மிகுந்த அர்ப்பணிப்புடனும் சேவை மனப்பாங்குடனும் பணியாற்றி வருகின்றனர்.

இவ்வாறு 820 இற்கும் மேற்பட்ட சுகாதாரத் தொண்டர் ஊழியர்களின் சேவை கிடைத்து வருவதை மாகாண சுகாதார வைத்திய அதிகாரிகளும் மாகாண சுகாதார அமைச்சரும் ஏற்றுக் கொண்டு அவர்களது சேவையின் தேவையையும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

ஆனாலும் இந்தத் தொண்டர் ஊழியர்களை அரச சேவைக்குள் நிரந்தரமாக உள்வாங்குவதாயின் புதிய சுற்றறிக்கையை அரசு வெளியிட வேண்டுமென்று மாகாண சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

குறித்த சுகாதாரத் தொண்டர்கள் பலதடவைகள் தம்மை அரச சேவைக்குள் உள்வாங்குமாறு சாத்வீக ரீதியான போராட்டங்களைச் செய்தும் வருகின்றனர்.

தாபன விதிக் கோவை அத்தியாயம் IV இற்கு அமைவாக 15 வருடங்களாகக் கடமைபுரியும் இந்த ஊழியர்கள் (தொண்டர்கள்) தொடர்பில் முதலில் ஆளுநர் முகாமைச் சேவைகள் திணைக்களத்துடனும் (ஆளணி, அனுமதி தொடர்பாக) கலந்தாலோசித்தும்.

அரச நிர்வாக சுற்றறிக்கை 06/2006 இற்கு அமைவாகவும் ஆரம்ப மட்ட (தேர்ச்சியற்ற) தரத்திற்குள் அமைய/நாள் சம்பள ஊழியர்களாக உள்வாங்கி முறையான கடிதத்தைச் சுகாதார அமைச்சு வழங்கியிருந்தால் இன்று இந்த தொண்டர் ஊழியர்கள் அனைவரும் அரச நிர்வாக சுற்றறிக்கை 25/2014 இற்கு அமைவாகநிரந்தர ஊழியர்களாகநியமிக்கப்பட்டிருப்பர். இன்று வீதியிலிறங்கி சாத்வீக ரீதியான போராட்டங்களை முன்னெடுக்கும் நிலையும் இந்தச் சுகாதாரத் தொண்டர்களுக்கு ஏற்பட்டிருக்காது.

உள்வாங்குக

எனவே புதிய சுற்றறிக்கை வெளியிடும்வரை காத்திருக்காது வடக்கு மாகாண சபையில் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றி முதலமைச்சர் ஆளுநரின் அனுமதியுடன் முதலில் அமைய/ நாள் சம்பள ஊழியர்களாக அரச சேவைக்குள் இந்தச் சுகாதாரத் தொண்டர் ஊழியர்களை உள்வாங்குமாறு கோருகின்றோம்.

இதற்கான ஆவன நடவடிக்கைகளை இந்தச் சுகாதாரத் தொண்டர்கள் நலன்கருதி தவறாது முன்னெடுக்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டுமென எமது தொழிற்சங்கம் கோருகின்றது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-30)

சுமந்திரனின் வழக்கிலுள்ள ஐவருக்கும் மறியல் நீடிப்பு

கிளிநொச்சி. ஜூன் 15

சட்டத்தரணியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான ம.ஆ.சுமந்திரனைக்கொலை செய்ய முயன்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள வழக்கிலுள்ள 5 சந்தேக நபர்களின் விளக்கமறியல் எதிர்வரும்28ஆம்திகதிவரைநீடிக்கப்பட்டது. இவர்களது வழக்கு கிளிநொச்சி நீதிவான் மன்றில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. அனுராதபுரம் சிறைச்சாலையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள 5 சந்தேக நபர்களும் முற்படுத்தப்பட்டனர். அதன் போதே பதில் நீதிவான் விளக்கமறியலை நீடித்து உத்தர விட்டார். சந்தேகநபர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள கொலைமுயற்சி தொடர்பான விசாரணைகள் முடிவடைந்து அறிக்கைசட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இப்போது அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள போதைப்பொருள் கடத்தல் காரர்களுடன் தொடர்பு பற்றிய குற்றச்சாட்டுக் குறித்து விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றனஎன்றுபயங்கரவாத விசாரணைப் பிரிவினர் கிளிநொச்சிநீதிவான் மன்றில் ஏற்கனவே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-6)

வற்றாப்பளை அம்மன் ஆலயத்துக்கான சேவையில்

வவுனியா சாலைக்கு பதினேழரை லட்சம் ரூபா வருமானம்

வவுனியா, ஜூன் 15

வரலாற்றுச் சிறப்பு மிக்க வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் கோயிலுக்குச் சிறப்புப் பேருந்து சேவை நடத்தியதன் மூலமாக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வவுனியா சாலைக்கு 17 லட்சத்து 55 ஆயிரம் ரூபா வருமானம் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

"வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் நிகழ்வுக்குச் செல்லும் அடியவர்களின் நலன்கருதி இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வவுனியா சாலையினர் சிறப்பான பணியை வழங்கியிருந்தனர். அதன்மூலமாக எமது சாலைக்கு சுமார் 17 லட்சத்து 55 ஆயிரம் ரூபா வருமானம் கிடைத்தது" என்று சபையின்வவுனியாசாலை முகாமையாளர் முகமட் சாகிர் தெரிவித்தார்.

"கடந்த 12 ஆம் திகதி மற்றும் 13 ஆம் திகதி வவுனியாவிலிருந்து வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு 41 பேரூந்துகள் சேவையில் ஈடுபட்டன. இதனால் எமது வவுனியா சாலைக்கு 12ஆம் திகதி 9 லட்சத்து 93 ஆயிரம் ரூபா வருமானமும் 13 ஆம் திகதி 7 லட்சத்து 66 ஆயிரம் ரூபாவும் வருமானமாகக் கிடைக்கப்பெற்றுள்ளது" என்று அவர் மேலும் தெரிவித்தார். (4)

பாலியல் தொழில் வழக்கு; பெண்களுக்கு மறியல் நீடிப்பு

கிளிநொச்சி, ஜூன் 15

கிளிநொச்சி விநாயகபுரம் பகுதி வீடொன்றில் பாலியல் தொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நான்கு பெண்களுக்கும் எதிர்வரும் 28 ஆம் திகதிவரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டது கிளிநொச்சி நீதிவான் மன்று நேற்று மறியலை நீடித்தது.

பாலியல் தொழில் இடம்பெற்றதாகக் கூறப்பட்ட வீட்டில் இருந்தனர் என்ற குற்றச்சாட்டில் கடந்த மாதம் 17ஆம் திகதி நான்கு பெண்கள் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின்பேரில் விளக்கமறியலில் இருந்துவருகின்றனர். வவுனியா சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள அவர்கள் கிளிநொச்சி நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த பதில் நீதிவான், நால்வருக்கும் விளக்க மறியலை நீடித்தார். இவர்களின் குருதி மாதிரிகள் சட்டவைத்திய பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப் பட்டிருக்கின்றன என்று பொலிஸார் மன்றில் தெரிவித்தனர்.

குறித்த வீட்டில் பாலியல் தொழில் இடம்பெற்று வருவதாகக் கிளிநொச்சிப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய வீடு முற்று கையிடப் பட்டது.

அங்கு விடுதி நடத்தி வந்த குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார். அங்கு தங்கியிருந்த குற்றச்சாட்டில் இளம் பெண்கள் மூன்று பேருமாக மொத்தம் 4 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்களில் 2 இளம் பெண்கள் கிளிநொச்சியைச் சேர்ந்தவர்கள். ஒருவர் வவுனியாவைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகிறது. (4-6)

எதிர்பார்ப்புக்குரிய மாகாண சபை ஊழலின்றிச் செயற்படவேண்டும்

காதர் மஸ்தான் எம்.பி. கருத்து

வவுனியா, ஜூன் 15

வடக்கு மாகாண சபை மிக நீண்ட காலத்துக்குப் பிறகு எமது மக்களின் பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் உருவாக்கப்பட்டது. தற் பொழுது மாகாணசபைக்குள் நடப்பது என்னவென்றே விளங்க வில்லை. பெரும் எதிர்பார்ப்புடன் உருவாக்கப்பட்ட வடக்கு மாகாண சபை ஊழலின்றி மக்களுக்களுக்காக செயற்பட வேண்டும்.

இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத்தலைவருமான கே.காதர் மஸ்தான் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சபையில் ஊழல்கள் காணப்படுமாக இருந்தால் மக்கள் பிரதிநிதிகளாகத் யாரை தேர்ந்தெடுப்பது என்ற கேள்வி நிலை மக்களுக்கும் தோன்றியிருக்கின்றது.

மக்கள் பிரதிநிதிகள் இழைக்கும் தவறுகளுக்கு மக்களின் தேர்வுகளில் பிழை என்பதை வடக்கு மாகாண சபை நிரூபித்து விடாமல் மக்கள் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றியமாகாண சபையாக இருப்பதற்கான வழி வகைகளைத் தேடுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

போருக்குப் பின்னர் வடக்கில் மீண்டும் தமிழ் மக்களின் கல்விநிலையில் வளர்ச்சி ஏற்படுவதை அவதானிக்க முடிகின்றது.

வடக்கு மாகாண சபை மேலும் வலுச்சேர்க்க வேண்டும். ஆனால் இன்று கல்விக்கு வலுச் சேர்க்க வேண்டிய மாகாண கல்வியமைச்சில் ஊழல். எமது பகுதிக்கே உரித்தானது விவசாயம். ஆனால் இங்குள்ள விவசாய அமைச்சிலும் ஊழல் என்றால் என்னதான் செய்வது?

கடந்த ஆட்சியில் ஊழல் அதிகமாகக் காணப்பட்டதால் சிறுபான்மை யினரின் மூலமாக இந்த ஆட்சி கொண்டு வரப்பட்டது. ஆனால் சிறு பான்மையினர் பெரும்பான்மையாகக் காணப்படும் வடக்கு மாகாணசபை யில் ஊழல் என்றால் என்ன செய்வதென்று வடக்கு மாகாண மக்களே முடிவெடுக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (4)

இரசாயனமருந்துத்தடையால் காடாகும் பெருந்தோட்டங்கள்

பெருந்தோட்ட நிறுவனங்கள் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 15

இலங்கை அரசு இரசாயன மருந்துகளைத் தடைசெய்துள்ளதால், பெருந்தோட்டங்களில் மருந்துகளின் பாவனை தவிர்க்கப்பட்டுள்ளது. பெருந்தோட்டங்கள் காடுகளாக மாறிவருகின்றன என்றுபெருந்தோட்ட நிறுவனங்கள் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளன.

இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவர் எஸ். அருள்சாமி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது

தோட்டத் தொழிலாளர்கள் தொழில்புரிவதற்கு ஏற்றவகையில், தேயிலைத் தோட்ட நிர்வாகங்கள் காணிகளை துப்பரவாக வைத்திருக்க வேண்டுமென்று கூட்டொப்பந்தத்தில் சரத்து ஒன்று உள்ளது. பெருந்தோட்ட நிறுவனங்கள் இந்தச் சரத்தை மீறிச் செயற்படுகின்றன என்று நாங்கள் நிறுவனங்களுக்குச் சுட்டிக் காட்டியிருந்தோம்.

பெருந்தோட்டங்கள் காடுகளாக மாறும் வகையில் தோட்ட நிர்வாகங்கள் செயற்பட்டு வருமேயானால், கூட்டொப்பந்தத்துக்கு அமைவாக, இவர்களை நீதிமன்றத்துக்கு முன்பாக நிறுத்த வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படும்.

இதனை ஏற்றுக்கொண்டுள்ள பெருந்தோட்ட நிறுவனங்கள், அரசுடன் பேச்சு நடத்தி, தடைசெய்யப்பட்டுள்ள இரசாயன மருந்துகளை, பெருந்தோட்டங்களில் மீண்டும் பயன்படுத்துவதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளப்படும். அதுவரை, பெருந்தோட்டங்கள் தொடர்ந்தும் காடாகாமல் இருப்பதற்கு, ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களை பணிக்கு அமர்த்துவதற்கும் இணக்கம் தெரிவித்துள்ளன.

பெருந்தோட்டங்களில் தேயிலை பயிரிடப்படாத நிலங்களை, தோட்ட இளைஞர், யுவதிகளுக்கு பிரித்துக் கொடுக்கப்படவுள்ளன. இந்தக் காணிகளுக்குள் மலர் வளர்ப்பு, விவசாயச் செய்கையை ஊக்குவிப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்ளப்படும். விளைச்சலில் பயனை சந்தைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் தோட்ட நிறுவனங்கள் தெரிவித்தன" - என்றார்.

(ற-10)



மருத்துவப் புறக்கணிப்பே சிசுவின் இறப்புக்குக் காரணம்

நீதிமன்றுக்கு அறிக்கை முன்வைப்பு

யாழ்ப்பாணம் யூன் 15

யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் பிரசவத்தின் போது உயிரிழந்த சிசுவின் இறப்புக்கு மருத்துவர்களின் மருத்துவப் புறக்கணிப்பே காரணம் என்று திடீர் இறப்பு விசாரணை அதிகாரியால் நீதிமன்றுக்கு முடிவுரை வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் கடந்த மே மாதம் 16ஆம் திகதி பிரசவத்துக்காக சுதுமலை தெற்கு மானிப்பாயைச் சேர்ந்த 30 வயதுடைய குடும்பப் பெண்ணொருவர் 22ஆம் இலக்க விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

பின்னர் அவர் மறுநாள் காலை ஆறு மணிக்கு பிரசவ விடுதிக்கு அனுமதிக்கப்பட்டதுடன் குழந்தையை பிறப்பிப்ப தற்காக அவருக்கு ஊசி மருந்தும் ஏற்றப்பட்டுள்ளது. எனினும் அவருக்கு உரிய நேரத்தில் சிசு பிறக்கவில்லை. இதன் பின்னர் அங்கிருந்த மருத்துவரால் ஒரு சில சிகிச்சை முறைகளுக்கு பின்னர் கிடுக்கியை பயன்படுத்தி குழந்தை வெளியே எடுக்கப்பட்டதாக தெரிய வருகின்றது.

இதன் பின்னர் 18ஆம் திகதி குழந்தை இறந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டுமானிப்பாய் பொலிஸாரால் யாழ்ப்பாண நீதிவான் மன்றில் சிசுவின் இறப்புத் தொடர்பாக இறப்பு விசாரணை நடத்துமாறு கோரப்பட்டது. அதன் அடிப்படையில் சிசுவின் உயிரிழப்புத் தொடர்பில் விசாரணையை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாண நீதிவான் மன்றால் திடீர் இறப்பு விசாரணை அதிகாரிக்கு பணிக்கப்பட்டிருந்தது.

திடீர் இறப்பு விசாரணை அதிகாரி தன்னுடைய அறிக்கையில், 'மருத்துவ புறக்கணிப்பு காரணமாகவும் உரிய சிகிச்சை அளிக்காததன் காரணமாகவும் குழந்தையின் மண்டையோடு சிதைவடைந்து கழுத்து எலும்புகள் உடைந்துள்ளன' என்று குறிப்பிட்டுள்ளார்.

குழந்தையின் இறப்புத் தொடர்பான மேலதிக விசாரணைகளுக்காக இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் மன்றிலிருந்து மல்லாகம் நீதிவான் மன்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட தம்பதியினருக்கு நீண்ட காலமாக குழந்தைப்பேறு கிடைத்திருக்க வில்லை யெனவும் இறந்த குழந்தையே அவர்களது முதலாவது குழந்தையெனவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

(வ-103)

அன்னதான சமையலாளருக்கு மருத்துவச் சான்றிதழ் கட்டாயம்

ஒட்டுசுட்டான் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் அறிவுறுத்து

முல்லைத்தீவு, ஜூன் 15

மருத்துவச் சான்றிதழ் உள்ளவர்களே அன்னதானத்துக்கான சமையல் வேலை களில் ஈடுபட முடியும். திருவிழாக் காலத்தில் போடப்படும் உணவகங்களிலும் மருத்துவச் சான்றிதழ் உள்ளவர்களே கடமையாற்ற முடியும்.

இவ்வாறு ஒட்டுசுட்டான் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் தெரிவித்தார்.

ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரன் ஆலயத்தின் வருடாந்த திருவிழா எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து 15 நாள்களுக்கு நடைபெறவுள்ளது. முல்லைத் தீவு மாவட்ட மேலதிக செயலர் பிரணவநாதன் தலைமையில் திருவிழாவுக்கான முன் ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அதில் சுகாதாரப் பணிப்பாளர் தெரிவித்ததாவது: ஆலயத்துக்கு வருகை தரும் அடியவர்களின் சுகாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கு அன்னதான சமையலில் ஈடுபடுபவர்கள் மருத்துவப் பரிசோதனையை மேற்கொண்டு மருத்துவச் சான்றிதழ் வைத்திருத்தல் வேண்டும். திருவிழா உபயகாரர்கள் சமையலுக்கு உதவிகள் செய்ய முடியாது. அவர்கள் அன்னதான சமையலுக்கு உதவிகள் செய்வதாயின் அவர்களும் மருத்துவச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

ஆலயச்சூழலில் பச்சை குத்துவதற்கு அனுமதி வழங்கப்படாது. தொற்று நோய்க்கு ஆளானவர்கள் ஆலயத்துக்கு வருதைத் தவிர்த்துக் கொள்வதன் ஊடாக நோய் மேலும் பரவாது தடுத்துக்கொள்ள முடியும். பாலூட்டும் தாய்மார்களின் நன்மை கருதி அவர்களுக்காக ஆலயச் சூழலில் சிறப்பு அறைகள் செய்து கொடுக்கப்படும். ஆலயத்தின் திருவிழாக்காலங்களில் சுகாதாரத்தை முழுமையாக உறுதிப்படுத்துவதற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க முன்வர வேண்டும்" -என்றார்.

(ற-ஐ-7)

கசிப்பு, கோடா வகைகள் இரசாயன பகுப்பாய்வுக்கு

தென்மராட்சி, ஜூன் 15

சாவகச்சேரி மதுவரி நிலையத்தினரால் பிடிக்கப்பட்ட கசிப்பு மற்றும் கோடா வகைகளை இரசாயனப்பகுப்பாய்வுக்கு அனுப்பிஅறிக்கை பெறுமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று உத்தரவிடப்பட்டது.

கடந்த பெப்பரவரி மாதம் 20 ஆம் திகதி மதுவரி நிலையத்தினர் கெற்பேலி காட்டுப் பகுதியில் திடீர் பரிசோதனை நடத்தியபோது அங்கு கசிப்பு உற்பத்தி செய்வது கண்டுபிடிக்கப்பட்டது. மதுவரி நிலையத்தினரைக் கண்ட உற்பத்தியாளர்கள் தப்பியோட அங்கிருந்த கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் கோடா மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றைக் கைப்பற்றியிருந்தனர்.

இது தொடர்பாகமதுவரி நிலையத்தினரால் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்குத் தொடர்பான விசாரணை நீதிமன்றத்தில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிவான் கைப்பற்றப்பட்ட கசிப்பு மற்றும் கோடாவை கொழும்பு இரசாயனப்பகுப்பாய்வுத்திணைக்களத்திற்கு அனுப்பி அறிக்கை பெறுமாறு மதுவரி நிலையத்தினருக்கு உத்தரவிட்டார்.

(ற-10, 9)

பொலிஸாருக்கு டிமிக்கிவிட்டவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 14

துவிச்சக்கர வண்டிகளைத் திருடிய குற்றச்சாட்டில் பொலிஸாரால் ஒரு மாதகாலமாகத தேடப்பட்டு வந்தவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். "கடந்த மாதம் பருத்தித்துறை நகரப் பகுதியில் வெவ்வேறு நாட்களில் இரண்டு துவிச்சக்கர வண்டிகள் காணாமற்போயுள்ளன. திருட்டுக்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் நகரப்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவிகமராவின் உதவியை நாடினர். அதில் திருடன் துவிச்சக்கர வண்டிகளைத் திருடிச் செல்லும் காட்சி பதிவாகியிருந்தது. அதனை ஆதாரமாக வைத்து பொலிஸார் சந்தேகநபரை அடையாளப்படுத்தினர். அவரைக் கைது செய்யப் பொலிஸார் பல முயற்சிகள் எடுத்தனர். எனினும் சந்தேகநபர் அகப்படவில்லை. நாகர் கோவில் பகுதியில் உள்ள சந்தேகநபரின் வீட்டுக்கு நேற்று விரைந்த பொலிஸார் அவரை மடக்கிப் பிடித்தனர்" என்று பருத்தித்துறைப் பொலிஸார் கூறினர்.

(வ-21,26)

ரம்ழான் பண்டிகையை ஒட்டி புதிய வரவாக ஆண்களுக்கான ரீசேட்கள் தற்போது சந்தைக்கு வந்துள்ளன. இவை 900 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

அரசியல் நிகழ்ச்சி நிரலிலேயே செயற்பட்டது விசாரணைக் குழு

அமைச்சர் ஐங்கரநேசன் சபையில் தன்னிலை விளக்கம்

வடக்கு மாகாண சபையின் 2016ஆம் ஆண்டு பெப்ரவரி மாத அமர்வுகளில் என் மீதான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டபோது நான் அவை ஆதாரம் இல்லாத, அபாண்டமான திட்டமிட்ட குற்றச்சாட்டுகள் என்றும், நான்கு கோடி ரூபா அல்ல, நானூறு ரூபா தன்னும் நான் நிதி மோசடியில் ஈடுபட்டிருந்தால் அதை நிரூபியுங்கள் என்றும் தெரிவித்திருந்தேன். குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக என்னுடைய நிலைப்பாடு இப்போதும் அதுவாகவே இருக்கிறது.

அரசியல் அரங்கிலிருந்து அகற்ற எடுத்த முயற்சிகள்

மக்கள் என்மீது கொண்டிருந்த நல்லபிப்பிராயம் காரணமாகவே, வடக்கு மாகாண சபைக்கான தேர்தலில் கணிசமான வாக்குகளைப் பெற்று என்னால் வெற்றி பெற முடிந்தது. வாக்குகளைப் பணம் மூலம் வாங்குவதற்கு நான் பணம் படைத்தவன் அல்ல. தேர்தல் காலத்தில் எனக்கு நானே ஒளிவட்டம் போட்டு, கீரீடம் சூட்டி மக்களை வசீகரிக்கும் விளம்பரங்களைச் செய்வதற்கு நான் ஊடகப் பலம் கொண்டவனும் அல்ல. என் வாழ்வு முறையினூடாக, ஒரு ஆசிரியனாக நான் சிறுகச் சிறுகச் சம்பாதித்து வைத்த நற்பெயர்தான் எனது மூலதனம். ஆனால், எனது பெயருக்குக் களங்கம் கற்பித்து, எனது ஆளுமையைப் படுகொலை செய்து, அரசியல் அரங்கில் இருந்தும் பொதுவாழ்க்கையில் இருந்தும் என்னை அகற்றும் நோக்குடன் பொய்யான குற்றச்சாட்டுகள் என்மீது சுமத்தப்பட்டு வந்துள்ளன.

எந்தகையநிலைஏற்படினும் நிதி மோசடியில் ஈடுபடேன்

இப்போது, என்மீது மட்டுமல்ல, சுகல அமைச்சர்கள்மீதும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரிக்கவென முதலமைச்சரால் நியமிக்கப்பட்ட மூவரடங்கிய குழுவின் விசாரணை அறிக்கை வெளியாகியுள்ளது. இந்த அறிக்கையில் நான் கையூட்டுப் பெற்றதாகவோ ஊழல் புரிந்ததாகவோ, நிதி மோசடிகளில் ஈடுபட்டதாகவோ விசாரணைக்குழுவினர்எங்கும்குறிப்பிடவில்லை. அவர்கள் மட்டுமல்ல, எவர்களாலுமே அவ்வாறு குறிப்பிட முடியாது. இந்த இழிசெயலில், அமைச்சராகப் பணிபுரியும் இந்தக்காலப்பகுதியிலோ அல்லது அரசியலுக்கு வர முன்னரோகூட நான் ஈடுபட்டதில்லை. வருங்காலத்தில் சோற்றுக்கு வழியின்றித் தவிக்கும் ஒரு நிலை வந்தாலும்கூட, இந்த ஈனச்செயலில் நான் ஈடுபடப்போவதில்லை. ஆனால், நான் இத்தகையவன் என்ற ஒரு மாயத்தோற்றத்தை, என்னைப் பற்றிய தவறான ஒரு விம்பத்தைப் பொதுமக்களிடையே ஏற்படுத்தி எனது அரசியல் வாழ்க்கையை முடிவுறுத்தும் விதமாக இந்த அறிக்கைஅமைந்துள்ளதென்பதை வருத்தத்தோடு பதிவு செய்கிறேன்.

என்னைக் குற்றவாளியாக்கிவிட விசாரணைக் குழு முன்கூட்டியே திட்டமிட்டு விட்டமை தெரிகிறது

இந்த அறிக்கையில், விசாரணையின்போது நானும் திணைக்கள அதிகாரிகள் பலரும் தெரிவித்த பல விடயங்கள் கருத்தில் எடுக்கப்படவில்லை. நான் தெரிவித்ததாக என்னால் தெரிவிக்கப்படாத, விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. பிழையான விடயங்கள் இடம்பெற்றிருக்கின்றன. மோசடி, ஊழல், கையூட்டு, நிதி விரயம் போன்ற சொற்களுக்கான அர்த்தச் செறிவுகள்வெவ்வேறானவை. ஆனால், இந்த அறிக்கையை மேலோட்டமாகப் படிப்பவர்கள் தவறான முடிவுக்கு வரும் விதமாக இந்தச் சொற்களை மனம்போன போக்கில் பயன்படுத்திவிட்டு, என்னைப் பதவிவிலகவேண்டும்என்று பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இவற்றின்மூலம் விசாரணைக்குழுவில் உள்ள சிலர் எப்படியாவது என்னைக் குற்றவாளியாக்கிவிட வேண்டும் என்றமுன்கூட்டிய முடிவுடன், ஏதோ ஒரு சூழ்ச்சி நிரலில் செயற்பட்டுள்ளார்கள் என்றே நான் கருதுகின்றேன்.

முதலமைச்சரின் உத்தரவை ஏற்பேன்

பணிசெய்வதற்குப்பதவிஅவசியம் இல்லை. முதலமைச்சர் இடும் உத்தரவு எதுவோ அதனை நான் சிரந்தாழ்த்தி ஏற்றுக்கொள்வேன். ஆனால், பொய்யான, நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டுகளுடன் செல்வதற்கு மனம் ஒப்பவில்லை. அவ்வாறு செய்தால் செய்யாத குற்றங்களை எல்லாம் நான் ஏற்றுக்கொண்டதாகிவிடும். இதனால் ஏற்படும் அவப்பெயர்தலைமுறைகளுக்கும்நீளும். அந்த வகையில் எனது தன்னிலை விளக்கத்தைக் கருத்தூன்றிக் கவனத்தில்கொள்ளுமாறுகேட்டுக்கொள்கிறேன். விசாரணை அறிக்கையில் குற்றச்சாட்டுக்கள் ஒவ்வொன்றுக்கும் விசாரணைக்குழு தெரிவித்திருக்கும் அவதானங்கள் மற்றும் முடிவுகள் தொடர்பாக நான் விளக்கம் அளிக்க விரும்புகிறேன். அதற்கு முன்பாக, ஒட்டுமொத்த விசாரணை அறிக்கையிலும் மேலோங்கி நிற்கும் மூன்று விடயங்கள் தொடர்பாக நான் விளக்கம் அளிப்பது அவசியமாகும்.

விசாரணைக் குழுவின் விதப்புரைகளில் முரண்

1. என்மீதான இலஞ்சம், ஊழல், நிதிமோசடிக் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை என்பதை உய்த்தறிவுகளாக வெளிப்படுத்திய விசாரணைக்குழு, தனது முடிவில் சந்தேகத்துக்கு அப்பாற்பட்டு குற்றங்கள் நிரூபிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளது.

பொ.ஐங்கரநேசன்

எனக்கு எதிராகப் 10 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவை தொடர்பிலான விசாரணைக்குழுவின் அவதானிப்புகளும் முடிவுகளும் அறிக்கையின் 4.1 முதல் 4.10 வரையான பந்திகளில் காணப்படுகின்றன. இவற்றில் இலஞ்சம், நிதி விரயம், மோசடி தொடர்பான குற்றச்சாட்டுகள் 4.1, 4.2, 4.4, 4.5 மற்றும் 4.7 ஆகிய பந்திகளில் பரிசீலிக்கப்பட்டுள்ளன. இந்தக் குற்றச்சாட்டுகளில் இலஞ்சம், ஊழல், நிதிமோசடி இடம்பெற்றிருப்பதாக நிரூபிக்கப்படவில்லை என விசாரணைக்குழு தெரிவித்துள்ளது. இது விசாரணைக்குழுவின் உய்த்தறிவுகளாக இருக்க, அவர்களின் முடிவுகள் மற்றும் விதந்துரைப்புகள் குழுவின் உய்த்தறிதலுக்கு முற்றிலும் முரணானவையாக உள்ளன.

என்னைப்பதவி நீக்கும் வகையில் காரணங்களைத் தேடி எடுத்து பரிந்துரைகளை வழங்கியது குழு

ஊழல் மற்றும் நிதி மோசடியை நிரூபிக்க ஆதாரம் இல்லை என உய்த்தறிந்த விசாரணைக்குழுவினர், எவ்வாறு பக்கம் 79இல் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் ஊழல் செய்துள்ளதாக முடிவுறுத்துகிறார்கள்? குற்றம் எண்பிக்கப்படவில்லை எனக் கூறும் விசாரணைக் குழுவினர் எவ்வாறு குற்றம் நிரூபிக்கப்பட்டதாக முடிவுறுத்துகிறார்கள்? ஆகவே, ஏற்கனவே என்னைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று முடிவை எடுத்துவிட்டு அதற்கான சாட்சியங்களை 'முடிவெடுத்ததன் பின் முடிவுக்கான காரணங்களைத் தேடும்' வகையில் தேடி, அவை கிடைக்கப்பெறாத போது, தாம் முன்கூட்டி எடுத்த முடிவுகளையே பரிந்துரைகளாக முன்வைத்துள்ளார்கள்.

விசாரணைக் குழு சட்டத் தவறிழைத்தது

மேல் நீதிமன்ற நீதிபதிகளாக கடமையாற்றிய இருவர் உறுப்பினர்களாக அமையப் பெற்ற இந்தக் குழு, ஆதாரங்கள் இல்லை எனக் கண்டதன் பின்னரும் 'சந்தேகத்துக்கு அப்பாற்பட்டு குற்றங்கள்' நிரூபிக்கப்பட்டுள்ளன எனக் கூறுவது மிகவும் அடிப்படையான குற்றவியல் கோட்பாடுகளை மீறுவதாகவே அமைந்துள்ளது. மேலும், ஒரு பூர்வாங்க அறிக்கை, ஒரு குற்றவியல் விசாரணையாக இருக்கமுடியாது என்று தெரிந்திருந்தும், குற்றவியல் சட்டத்திலும் எண்பியல் சட்டத்திலும் அதிஉச்ச எண்பிக்கும் பொறுப்பைக் கோரும் 'சந்தேகத்துக்கு அப்பாற்பட்ட வகையில்நிரூபிக்கப்பட்டுள்ளதாகக் கூறுவது மிகவும் அடிப்படையிலான சட்டத்தவறென்றே எண்ணுகின்றேன்.

மக்களின் நிலையறியாமல் குழு செயற்பட்டுவிட்டது

அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளவற்றை வாசிக்க பொது மக்களுக்கு நேரம் கிடைக்காது. அவை தொடர்பிலான உண்மை நிலையை விளங்கிக் கொள்ள அவர்களுக்கு அவகாசம் கிடைக்காது. அவர்கள் முடிவுகளிலேயே கவனம் செலுத்துவார்கள். அவையே ஊடகங்களில் பரபரப்பான தலைப்புச் செய்திகளாகவும் வரும் என்ற துணிவில்தமது உய்த்தறிவுகளும், பரிந்துரைகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவையாக இருக்க வேண்டும் என்பது தொடர்பில் விசாரணைக்குழு கவனம் செலுத்தாமல் விட்டுள்ளது. இந்தக்காரணங்களினாலேயே விசாரணைக்குழு என்னைக் குற்றவாளியாக்கிவிட வேண்டும் என்ற முன்கூட்டிய முடிவுடன் ஏதோ ஒரு நிகழ்ச்சி நிரலில் செயற்பட்டுள்ளது என்று குறிப்பிட வேண்டிய தவிர்க்க முடியாத நிலை எனக்கு ஏற்பட்டுள்ளது.

கொழும்பு அரசை மையப்படுத்தி முடிவெடுத்துள்ளது விசாரணைக் குழு

2. 13ஆவது திருத்தச் சட்டத்தின்படி மாகாண அமைச்சர் ஒருவர் சுற்றுச்சூழல் சார்ந்த விடயங்களில் தலையிடுவதை விசாரணைக் குழு சட்டபூர்வமற்றதென நிறுவ முயன்றுள்ளது.

குற்றச்சாட்டுகள் 4.1 மற்றும் 4.6 பகுதியளவில் அமைச்சரின் சட்ட அதிகார எல்லைகளுடன் சம்பந்தப்பட்டவை ஆகும். மாகாண அமைச்சர் ஒருவருக்கு ஒருங்கிய நிரலின் கீழ் உள்ள விடயம் ஒன்று தொடர்பில் (கொழும்பு, மாகாண அரசுகள் இரண்டுக்கும் பொதுவான விடயங்கள் தொடர்பில்) நிறைவேற்று அதிகாரம் உண்டா? என்பது தொடர்பிலானதாகும். குறிப்பாக ஒருங்கிய நிரலில் இடம்பெறும் விடயம் ஒன்று தொடர்பில் மாகாண சபையால் ஆக்கப்பட்ட சட்டம் ஒன்று இல்லாதபோதும், அந்த விடயம் தொடர்பில் மாகாண அமைச்சர் நிறைவேற்று அதிகாரம் உள்ளவரா? என்பது தொடர்பிலான கேள்வி ஆகும்.

இந்தக் கேள்விக்கு தற்போதைய அரசமைப்பின் கீழோ, ஆக்கப்பட்ட சட்டங்களின் கீழோ நேரடியாகப் பதில் வழங்கப்படவில்லை. ஆனாலும், தற்போது நிலவும் சட்டங்களின் அடிப்படையில் அதிகாரப் பகிர்வை மேலும் வலுப்படுத்தும் ஓர் விடை ஒன்று பெறப்பட முடியும். அவ்வாறான ஓர் விடையை உய்த்தறிந்து அதற்கு முக்கியத்துவம் அளிப்பது அதிகாரப் பகிர்வைக் கோரி நிற்கும் தமிழ்மக்களின் அரசியலுக்கு வலுச்சேர்ப்பதாக அமையும். மாகாணசபைகள் (பின்விளைவுகள்) சட்டத்தின் 1989ஆம் ஆண்டு பிரிவு 2இன் பிரகாரம் மாகாண சபை ஒன்று, தனக்கு ஒதுக்கப்பட்ட நிரலில் உள்ள விடயம் ஒன்று தொடர்பில் சட்டம் ஒன்று இயற்றாத போதிலும், நாடாளுமன்றில் ஆக்கப்பட்ட சட்டம் தொடர்பிலான நிறைவேற்று அதிகாரம் கொண்டது எனக் கூறுகின்றது. எனினும், ஒருங்கிய நிரலில் உள்ள விடயம் தொடர்பில் நாடாளுமன்றால் ஆக்கப்பட்ட சட்டம் ஒன்று தொடர்பில் மாகாண அமைச்சருக்கு அதிகாரம் உண்டா? என்பது தொடர்பில் இந்தச் சட்டம் அமைதியாகவே உள்ளது.

இந்த விடயத்தில் சட்டம் அமைதியாக இருக்க, இச்சட்ட இடைவெளி தொடர்பில் அதிகாரப் பகிர்வுக்குச் சார்பாகவே ஓர் சட்ட வாசிப்பு எமக்கு அவசியமாகின்றது. அந்த முடிவானது மாகாண சபையால் ஒருங்கிய நிரலில் உள்ள விடயம் ஒன்று தொடர்பில் சட்டம் இயற்றாதபோது, நாடாளுமன்றால் ஆக்கப்பட்ட சட்டம் ஒன்றின் கீழான நிறைவேற்று அதிகாரம் மாகாண அமைச்சருக்கும் கொழும்பு அமைச்சருக்கும் ஒருங்கிய நிலையில் இருக்க வேண்டியது என்றே இருக்க முடியும். விசாரணைக்குழு இம் முடிவுக்கு வராமல் அதிகாரங்களை கொழும்பு அரசின் மயப்படுத்தும் வகையில் நிலைப்பாடு எடுத்துள்ளமையும், அதன் அடிப்படையில் மாகாண அமைச்சர் தனது அதிகார எல்லையை மீறி இருக்கின்றார் என்ற முடிவுக்கு வந்துள்ளமையும் சட்டத்தின் பாற்பட்டதும் அல்ல. அதிகாரப் பகிர்வைப் பலப்படுத்தும் நோக்கில் சொல்லப்பட்டதும் அல்ல என்பதுவே எனது கருத்தாக அமைந்துள்ளது.

அமைச்சின் கொள்கை செயற்திட்டங்களை கேள்விக்குள்ளாயுள்ளது குழு

3. அமைச்சின் செயற்திட்டங்களின் கொள்கைப் பெறுமதிகளை விசாரணைக்குழு தனது செயற்பாட்டு எல்லைக்கு அப்பால் சென்று கேள்விக்கு உட்படுத்தியுள்ளது.

அறிக்கையின் 4.2, 4.5, 4.7, 4.8 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் மாகாண அமைச்சு கொள்கை ரீதியாக முன்னிலைப்படுத்தியுள்ள செயற்றிட்டங்களுடன் தொடர்புடையவை உழவர்விழா, விவசாயக் கண்காட்சி, பார்த்தீனியம் அழித்தல், கார்த்திகை மாத மரநடுகைத் திட்டம், ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் ஆகிய கொள்கை ரீதியாக முக்கியப்படுத்தப்பட்ட செயற்றிட்டங்களின் கொள்கைப் பெறுமதிகளை விசாரணைக் குழு கேள்விக்கு உட்படுத்தியுள்ளது. இது விசாரணைக் குழுவின் செயற்பாட்டு எல்லைக்கு அப்பாற்பட்டதாகும். அமைச்சர் எந்தச் செயற்றிட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பது கொள்கை முடிவுகளாகும். கொள்கை முடிவுகள் சட்டம் கொண்டு துணிய முடியாதவை. செயற்றிட்டங்கள் நிறைவேற்றப்பட்ட விதத்தில் நிதி மோசடி தொடர்பில் தமக்கு எந்தச் சாட்சியமும் கிடைக்கப்பெறவில்லை என விசாரணைக் குழு முடிவுறுத்தியுள்ள நிலையில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வேண்டுமா? என்பது தொடர்பில் விசாரணைக்குழு தமது தனிப்பட்ட அபிப்பிராயங்களையும் கருத்து வேறுபாடுகளையும் அமைச்சரின் தவறுகளாகக் காட்டுவது என்பது ஓர் விசாரணைக் குழு பின்பற்ற வேண்டிய மிக அடிப்படையான முறைசார் சட்டத் தத்துவங்களை மீறுவதாகும் என்றே கருதுகிறேன்.

என்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணைக்குழுவின் அறிக்கையில் மேலோங்கி உள்ள மூன்று விடயங்கள் தொடர்பாக எனது விளக்கங்களைப் பதிவு செய்த நான், ஒவ்வொரு குற்றச்சாட்டிலும் உள்ள விடயங்கள் தொடர்பாகவும் சில விளக்கங்களைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

(நாளை தொடரும்)

முதன்மை ஆதாரச் சான்றுகளின்படி அமைச்சர்கள் பதவி விலக வேண்டும்

வடக்கு எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

வடக்கு மகாண சபையின் இன்றைய அமர்வில் அமைச்சர்களுக்கு எதிரான விசாரணைக் குழு அறிக்கை தொடர்பில் ஒருதலைப்பட்சமாக ஒரு அமைச்சருக்கு மட்டும் தன்னிலை விளக்கமளிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டு, எதிர்க்கட்சிக்கு அது தொடர்பான கருத்துகளைக் கூறுவதற்குச் சந்தர்ப்பம் மறுக்கப்பட்ட நிலையில் வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்.

சபையில் எதிர்க்கட்சித் தலைவரால் கூறப்படவிருந்த விடயங்கள் அறிக்கையாகக் கீழே தரப்படுகின்றன.

விளக்கமற்ற பரப்புரை

வட மாகாண அமைச்சர்களுக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுகள் தொடர்பான வடக்கு முதலமைச்சரால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கை வெளியானதிலிருந்து ஊடகங்கள்வாயிலாகவும், சமூக வலைத்தளங்களூடாகவும் அந்த அறிக்கையைக் கொச்சைப்படுத்தும் முறையிலான பல கருத்துகள் வெளியாகிய வண்ணம் உள்ளன. இது தொடர்பான எனது நிலைப்பாட்டை முதலில் பதிவுசெய்துகொண்டு அறிக்கையின் விதப்புரையில் கூறியவை தொடர்பான எனது கருத்தைக் கூற விரும்புகின்றேன்.

விசாரணைக் குழுவின் உறுப்பினர்கள் பக்க சார்பானவர்கள், ஒவ்வோர் கட்சியைச் சார்ந்தவர்கள், விசாரணையை நடாத்துவதற்குத் தகுதியுடையவர்களல்லர் என்ற கருத்து சில ஊடகங்களிலும் சமூக வலைத் தளங்களிலும் வேண்டுமென்றே விசமத்தனமாகப் பரப்பப்பட்டு வருகின்றது. ஓர் அமைச்சரின் தூண்டுதலாலேயே இவ்வாறான பரப்புரை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று எனக்கு அறியக் கிடைக்கின்றது. விசாரணைக் குழு அங்கத்தவர்கள் விசாரணையை நடத்துவதற்குப் பொருத்தமற்றவர்கள் என்று கருதியிருந்தால் விசாரணைக் குழு உறுப்பினர்களின் பெயர்கள் சபைக்கு முதலமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்டபோது தங்கள் ஆட்சேபனையைத் தெரிவித்திருக்க வேண்டும். விசாரணைக்கு முகவெற்றுக்கொண்டுமுன்னிலையாகிவிளக்கங்கள்கொடுத்து விட்டு இன்று அந்த உறுப்பினர்கள் மீது குறைகூறுவது மிகவும் கீழ்த்தரமான ஓர் பண்பற்ற செயலென்பதனை நான் முதலில் பதிவு செய்து கொள்ள விரும்புகின்றேன்.

முதலமைச்சர் விசாரணைக் குழு உறுப்பினர்களுக்கான விதிமுறைக் குறிப்பில் குழுவின் தீர்மானங்கள் ஏகமனதாகவோ, அப்படியொருமித்த தீர்மான மெடுக்கப்படாதவிடத்துப் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஒருமைப்பாட்டுடன்நிறைவேற்றப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தும் குழுவின் தீர்மானங்கள், விதப்புரைகள் யாவும் ஏகமனதாகவே காணப்படுகின்றது என்பதை நான் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

கணக்கில் வந்தாலே கணக்காய்வு

கணக்காய்வில் குறிப்பிட்ட ஓர் அமைச்சு தொடர்பாக எவ்வித குற்றச்சாட்டுகளும் தெரிவிக்கப்படவில்லை. அமைச்சின் கணக்காய்வறிக்கையில் எவ்வித குற்றங்களும் காணப்படாத நிலையில் விசாரணைக் குழுவின் அறிக்கையில் குற்றங்களிருக்கின்றது என்று கூறப்பட்டுள்ளது என்று பகிரங்கமாகச் சிலர் கூறுவதை அறியக் கூடியதாக இருக்கின்றது. முதலில் ஒன்றை விளங்கிக் கொள்ள வேண்டும், கணக்குக்கு வந்தவைகள் தான் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும். கணக்குக்கு வராதவை கணக்காய்வுக்கு உட்படுத்தப்படமாட்டாது. உதாரணமாக கையூட்டு நடைபெற்றிருந்தால் அது கணக்காய்வுக்கு உட்படுத்தப் படமாட்டாது. இன்னுமொரு விடயம் தெரிந்து கொள்ள வேண்டும், கணக்காய்வென்பது சகல நிதிக் கொடுக்கல் வாங்கல்களையும் பரிசோதிப்பது அல்ல. ஒரு சில மாதிரிகளைக் கணக்காய்வுக் உட்படுத்தி அதிலிருந்து கணக்கு சம்பந்தமான அபிப்பிராயத்தைக் கொடுப்பதே கணக்காய்வு.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற பொதுகணக்குக் குழுக் கூட்டத்தின் போது கூட சகல பாடசாலைகளிலும் மாணவர் அனுமதிக்காகப் பணம் பெறுகின்றார்கள். ஏன் இரண்டு பாடசாலைகளை மட்டும் சுட்டிக்காட்டியிருக்கின்றீர்கள்? என உறுப்பினர்களால் வினவப்பட்டபோது, பிரதிக் கணக்காய்வாளர் நாயகம் அவர்கள் இதே பதிலைத்தான் கூறியிருந்தார். கணக்காய்வு என்பது என்ன என்று புரியாமல் கணக்காய்வில் கூறவில்லையே, விசாரணைக்குழு அறிக்கையில் கூறப்பட்டுள்ளதே என்று கூறுபவர்களின் அறியாமையையிட்டுக் கவலைப்படுவதைத் தவிர வேறெதுவும் என்னால் கூற முடியாது.

அக்கறை முரண்பாடு இல்லை

மருதங்கேணி கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் தமது கடிதத் தலைப்பைத் தவறாகப் பயன்படுத்தியமைக்காக அவரைப் பதவி நீக்கம் செய்தது தவறு என இந்தச் சபையில் நானும், உறுப்பினர் சுகிர்தனும் விவாதித்திருந்தோம். எங்கள் விவாதம் சரியென்பதை விசாரணைக் குழு அறிக்கை நிரூபித்துள்ளது. இந்தப் பதவி நீக்கம் தொடர்பாகக்கூட்டுறவுஆணையாளருக்கு எதிராக சமாசத் தலைவரால் தொடரப்பட்ட வழக்கில் அந்தக் குழுவின் அங்கத்தவரொருவர் சட்டத்தரணியாகச் செயற்பட்டுள்ளார். ஆதலால் இங்கு அக்கறை முரண்பாடொன்றுள்ளது என சிலரால் எடுத்துக் கூறப்படுகின்றது. முதலில் வழக்கு கூட்டுறவு ஆணையாளருக்கும், பிரதேச செயலருக்கும் எதிரானதேயன்றி அமைச்சருக்கு எதிரானதன்று. அந்த வழக்கில் முன்னிலையான ஒருவர் இந்த விசாரணைக் குழுவில் அங்கத்தவராக இருப்பது எவ் வகையிலும் 'அக்கறை முரண்பாடாக' அமையாது.

மூன்று குழு அங்கத்தவர்களில் ஒருவர் மேல்தான் இந்தக் குற்றச்சாட்டு கூறப்பட்டுள்ளது. மூவரடங்கிய விசாரணைக் குழுவில் மற்றைய இருவரும் இதே முடிவைத்தான் எடுத்துள்ளார்கள். முதலமைச்சரின் விதிமுறைக் குறிப்பில் 'ஒருமித்த தீர்மானமெடுக்கப்படாதவிடத்து பெரும்பான்மை உறுப்பினர்களின் ஒருமைப்பாட்டுடன் நிறைவேற்றப்படும்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அக்கறை முரண்பாடு உள்ளவர் எனக் கூறப்படும் விசாரணைக் குழு உறுப்பினரைத் தவிர்த்தாலும் ஏனைய இரு பெரும்பான்மை உறுப்பினர்களின் முடிவும் இவ்வாறானதாகவே காணப்படுகின்றது. அதைக் கூடப் புரிந்து கொள்ள முடியாதவர்களாக சமூக வலைத் தளங்களிலும், ஊடகங்கள் வாயிலாகவும் கருத்துகளைவெளியிட்டுக்கொண்டிருக்கின்றனர்.

அதிகார வரைமுறை மீறல்

பீற்றா பவர், யூல் பவர் ஆகிய நிறுவனங்களுடன் பிழையான முறையில் ஒப்பந்தம் செய்தது தொடர்பாக சபைக்கு முதன்முதல் தெரியப்படுத்தியவன்நான். 2014ஆம் ஆண்டு அந்த நிறுவனத்திடமிருந்து 19.5மில்லியன்ரூபாவுக்கான 6 பவுசர்களைப் பெற்றுக் கொண்டமை, அதனைக் கணக்கிலிடாமல் நேரடியாகப்பொருள்கொள்வனவுக்குப் பயன்படுத்தியமை தொடர்பாகநான்அன்றேசுட்டிக்காட்டியிருந்தேன். விவசாய அமைச்சரிடமிருந்து கிடைத்த பதில்கள் ஏற்றுக்கொள்ளமுடியாத காரணத்தால் கணக்காய்வாளர் நாயகத்துக்கும் கடிதம் எழுதியிருந்தேன். இன்று நான் கூறியது சரியென்று விசாரணைக் குழு அறிக்கை நிரூபித்துள்ளது.

வவுனியா மாவட்டத்தில் மூங்கில், மல்லிகை வளர்ப்புத் திட்டங்கள், எள் விநியோகித்து சுயதொழிலை முன்னெடுக்கும் திட்டங்கள் தொடர்பாக குழுவின் அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. "அனுமதி பெறத் தேவையற்றவிடயங்களுக்கெல்லாம் அனுமதிபெறவேண்டும்என்று வலியுறுத்துவது அமைச்சரின் அதிகார முறைகேடு என்று விசாரணைக் குழு அபிப்பிராயப்படுகின்றது' மற்றும் "மூங்கில் நடுகைத் திட்டத்தை நிராகரித்தமை சட்டபூர்வமற்றது, முதலீட்டாளரைத் தன்னை வந்து சந்திக்கும்படி கேட்டுக்கொண்டதால் அவர் (அமைச்சர்) நடத்தை மீது சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது என்று விசாரணைக் குழு கருதுகின்றது." என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

திரு. நந்தகுமாரின் விடயத்தில் மட்டுமல்ல, வலி. வடக்குக் கல்விப்பணிப்பாளர் சந்திரராஜா விடயத்திலும் அமைச்சர் வாரியம் இதேதவறையே விட்டுள்ளது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. விசாரணைக்குழுவின் அறிக்கை அதில் தெளிவாக உள்ளதென்பதையே சந்திரராஜா தொடர்பான உச்ச நீதிமன்றத் தீர்ப்பு உறுதிப்படுத்துகின்றது.

நியமனத்தில் அழுத்தம்

கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் பாடசாலையின் அதிபர் கல்வி அமைச்சரின் அழுத்தம் காரணமாகவே நியமிக்கப்பட்டார் என்ற செயலாளரின் வாக்குமூலத்தை வைத்துக் கொண்டு விசாரணைக் குழு முடிவுக்கு வந்துள்ளது. அமைச்சரின் அழுத்தத்தில் நியமிக்கப்பட்ட இந்த அதிபரைப்பற்றி சில விடயங்களை நான் குறிப்பிட வேண்டும். இந்த அதிபர் தொடர்பாகக் கணக்காய்வு அறிக்கையில் கூறப்பட்டதன்படி யுனிசெப் உதவியுடனான வகுப்பறைக் கட்டடஅமைப்பின்போது இந்த அதிபரால் மேலதிக கொடுப்பனவாக 2 லட்சத்து 10 ஆயிரத்து 240 ரூபா வழங்கப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டை அவர் ஏற்றுக் கொண்டு மாதாந்தம் 25 ஆயிரம் ரூபா செலுத்துவதற்கு சம்மதித்துள்ளார். இவ்வாறு குற்றம் செய்தவர் ஆயிரத்துக்குட்பட்ட மாணவர்களைக் கொண்ட சென். திரேசா பாடசாலையிலிருந்து 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும் கிளிநொச்சி மகாவித்தியாலயத்துக்கு அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் அங்கும் தனது கைவரிசையைக் காட்டியுள்ளார். உலக உணவுத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மகாவித்தியாலயத்துக்கு கொடுக்கப்பட்ட உலர் உணவுப் பொருள்களின் கையாளுகை தொடர்பாக இந்த அதிபர் மீது மாவட்டச் செயலகக் கண்காணிப்பு அலகால் பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. உலர் உணவு விடயம் தொடர்பாகத் தகவல் கொடுத்த ஆசிரியை பழிவாங்கப்பட்டு வலயக் கல்வி அலுவலகத்தால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இதே அதிபர்தான் அண்மையில் விளையாட்டாகத் தேங்காய் பிடுங்கிய மாணவர்களைப் பொலிஸாரிடம் கையளித்ததார். இந்தப் பிரச்சினையைப் பாடசாலை மட்டத்திலேயேதீர்த்துக்கொள்ளுமாறு பொலிஸார் கேட்டிருந்தும் அந்த மாணவர்களைப் பொலிஸ் மூலம் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தியவரென்பதும் கவனிக்கப்படவேண்டியதாகும். இவ்வாறானவர்களைத்தான் கல்வி அமைச்சர் காப்பாற்றிக் கொண்டிருக்கின்றார்.

ஆதாரங்கள் ஏராளம்

கல்வி அமைச்சரின் அதிகார வரைமுறைமீறல் தொடர்பாக விசாரணைக் குழுவால் கூறப்பட்டவற்றுக்கு மேலாகவும் என்னால் ஆதாரங்கள் சமர்ப்பிக்க முடியும். கிளிநொச்சியில் வலயக் கல்விப் பணிமனைக்கு கையளிப்புச் செய்யப்பட்ட 6 ஏக்கர் காணியில் ஒரு ஏக்கரை ஜெயராஜா என்பவருக்கு வழங்கும்படி கரைச்சி பிரதேச செயலாளருக்குக் கல்வி அமைச்சரால் கடிதம் எழுதப்பட்டிருக்கின்றது. அதன் பின்பு அதே ஜெயராஜ்க்கு அரை ஏக்கரைக் வழங்கக் கூறி இன்னொரு கடிதம் எழுதப்பட்டிருக்கின்றது. அதன் பின்பு ஜெயராஜ்க்கு அரை ஏக்கரும், கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயக் காணியில் அத்து மீறியிருக்கும் குடியிருப்பாளர்களுக்கு 2 பரப்பு வீதம் வழங்கி மீதிக் காணியைக் கல்வி வலயத்துக்கு வழங்குமாறும் கல்வி அமைச்சரால் கோரப்பட்டிருக்கின்றது. கல்வி அமைச்சருக்குக் காணி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதா?. வலயக் கல்விப் பணிமனைக்கு வழங்கிய காணியை பொதுமக்களுக்கு வழங்குமாறு பிரதேச செயலாளரைக்கோருவதற்குகல்வி அமைச்சருக்கு என்ன அதிகாரம் உண்டு. இதுவும் ஓர் அதிகார வரைமுறைமீறலே.

காணிவிடயத்தில்தலையிட யார்கொடுத்தது அதிகாரம்?

கண்டாவளை வைத்தியசாலைக்குரிய காணியென நீதிமன்றத்தால் உறுதிப்படுத்தப்பட்ட நிலையிலும் அதில் 3 ஏக்கரை 4 நபர்களுக்கு, அதுவும் அந்தக் காணியின் முன்பக்கமாக வழங்கும் வண்ணம் பிரதேச செயலருக்குக் கல்வி அமைச்சரால் கடிதம் எழுதப்பட்டுள்ளது. நான் முன்பு கேட்டதையே இங்கும் கேட்க விரும்புகின்றேன். காணி தொடர்பான விடயங்களை நீதிமன்றம் கையாளுகின்ற நிலையில் இது தொடர்பாக பிரதேச செயலாளரிற்கு எழுதுவதற்கு கல்வி அமைச்சருக்கு என்ன அதிகாரம் உண்டு?. இது அதிகார வரைமுறை மீறல் இல்லையா?

(தொடர்ச்சி 9ஆம் பக்கத்தில்)

கட்டார் நெருக்கடி நிலை இலங்கைக்கும் பாதிப்பு

சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 15

மத்திய கிழக்கின் சில நாடுகளுக்கும் கட்டாருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள மோதல் எதிர்காலத்தில் மேலும் மோசமடைந்து இந்து சமுத்திரத்துக்கும் இலங்கைக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் அபாயம் உள்ளதாக மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக ரணவக்க தெரிவித்தார். சன்னி முஸ்லிம்வாதத் திட்டத்தின் ஊடாகக் கட்டார் இராச்சியத்தை தனிமைப்படுத்தும் நடவடிக்கையின் ஆரம்ப கட்டமோ இந்த முறுகல் எனவும் அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கட்டார் உதவியளிப்பதாகக் குற்றம் சாட்டும் தீவிரவாத அமைப்புகள் அனைத்தும் சன்னி மதப் பிரிவுக்கு ரியது. கட்டார் அரசு தமது தலைநகரான டோஹாவை அரேபியாவின் பிரதான வணிக மத்திய நிலையமாக மாற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.



கட்டார் வானூர்திச் சேவை, அல்ஜஸீரா தொலைக்காட்சி மற்றும் டோஹா நகரை வணிக மத்திய நிலையமாக மாறுவது ஆகியவற்றை தோல்வியடையச் செய்யும் நோக்கங்களுக்காக, ஐக்கிய அரபு இராச்சியமும் டுபாயும் இணைந்து பணியாற்றுகின்றன.

ஒஸாமா பின் லேடன் உள்ளிட்ட, இஸ்லாமிய ஆயுததாரிகள், அல்கெய்தா மற்றும் அல் நுஸ்ரா போன்ற தீவிரவாத அமைப்புகளின் தலைவர்கள் அனைவரும் சவூதியைச் சேர்ந்தவர்கள். அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதல்களில் ஈடுபட்ட 19 பேரில் 15 பேர் சவூதி அரேபியர்கள்.

எமது நாட்டவர்கள் கட்டார், சவூதி அரேபியா, அரேபியாவின் ஏனைய நாடுகளிலும் இலட்சக் கணக்கில் பணியாற்றுகின்றார்கள். அவர்களின் தொழிலுக்கு மாத்திரமல்ல அதற்கும் அப்பால் இலங்கையின் அரசியல் மோதலுக்கும் ஆரம்பமாக இந்த விடயம் அமையக்கூடும்.

சவூதி, கட்டார் மோதல் வெறும் தீவிரவாதத்திற்கு நிதி உதவி வழங்குவதற்கு அப்பால் சென்று இயற்கை அரசியல் மற்றும் இயற்கை எரிபொருள் தொடர்பான மோதல் என்பது தெளிவாகிறது. அந்த மோதலின் அதிர்வலைகள் இந்து சமுத்திரத்துக்கு மாலைதீவினூடாக எதிர்காலத்தில் வர வாய்ப்புள்ளது என்பதை நாம் அனைவரும் சிந்திக்க வேண்டும்என்றார். (த)

முதன்மை ஆதாரச் சான்றுகளின்படி அமைச்சர்கள் பதவி விலக வேண்டும்

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

முதலமைச்சர் விசாரணைக் குழுவின் அறிக்கையை சபைக்குச் சமர்ப்பித்துக் கடந்த அமர்வின் போது உரையாற்றும் போது விசாரணைக்குழு அறிக்கையில் வவுனியா சேமமடு வீதியில் தான் சமூகமளிக்காத நிகழ்வொன்றில் சமூகமளித்ததேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று கூறியிருந்தார். அறிக்கையை நான் பரிசீலித்தபோது அதில் கூறப்பட்டிருப்பதாவது 'கௌரவ முதலமைச்சரும் இந்த நிகழ்வுக்கு சமுகமளித்துள்ளார் என்று பொதுமக்கள் விசாரணைக்குழு விடம் நேரிற் தெரிவித்துள்ளனர்' என்பதாகும். ஆதலால் விசாரணைக் குழு தவறாகக் கூறியுள்ளதென்று கருதமுடியாதுஎன்பது எனது கருத்தாகும்.

பலவீட்டு பயிர்களை ஆடு தின்றதால் ஓநாய் அழுதது

கடந்த அமர்வின் போது உரையாற்றிய கௌரவ உறுப்பினரொருவர் என்னை நோக்கி 'ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுவதாக' குறிப்பிட்டிருந்தார். அவர் இந்த வறிக்கையை முழுமையாக வாசித்த பின்னராவது 'ஆடு பல வீட்டுப் பயிர்களை உண்டதால்தான் இந்த ஓநாய் அழுதது' என்பதனைப் புரிந்திருப்பாரென நினைக்கின்றேன்.

பதவி விலக வேண்டும்

முதலமைச்சர் விசாரணைக் குழு அறிக்கை ஓர் முதன்மை ஆதாரச் சான்றுகள்தான். ஒரு நிறுவனத்தில் பணியாற்றும் உத்தியோகத்தருக்கெதிராக ஏதாவது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு ஆரம்ப விசாரணையில் முதன்மை ஆதாரச் சான்றுகள் காணப்படின் முதலில் செய்வது அந்த உத்தியோகத்தரை இடைநிறுத்தம் செய்வது. அதன் பின்புதான் ஏனைய விசாரணைகள் நடைபெறும். இந்த விசாரணைக் குழுவின் அறிக்கையில் விதந்துரைக்கப்பட்ட தற்கமைவாக அதில் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ள இரு அமைச்சரகளும் முதலில் பதவி விலக்கப்படல் வேண்டும். அவர்களாகவே பதவி விலகுவார்களேயாளால் அது கௌரவமான பதவி நீக்கம். அப்படியில்லையேல் முதலமைச்சர், அவர்களைப் பதவிநீக்கம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். இங்கே கவனிக்க வேண்டிய இன்னொரு விடயமுள்ளது. அதிகார வரைமுறை மீறலால் சிலர் பாதிக்கப்பட்டுள்ளதை இந்த அறிக்கையிலிருந்து அவதானிக்கக் கூடியதாக வுள்ளது. அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கச் செய்யவேண்டியது முதலமைச்சரின் பொறுப்பு என்பதனையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

மரண அறிவித்தல்கள்



இளையதம்பி சாந்தசொரூபன்

தோற்றம் 07 . 05 . 1966

மறைவு 13 . 06 . 2017

(முன்னாள் உபதவிசாளர் - கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேசசபை, கட்டட பொறியலாளர் - கொழும்பு, தலைவர் - தழிழர் விடுதலை கூட்டணி)

கரணவாய் குருக்கள் பகுதியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி சாந்தசொரூபன் 13.06.2017 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகனும் கயல்விழியின் (கொழும்பு D.S.சேனநாயக்கா கல்லூரி - ஆசிரியர்) அன்புக் கணவரும் நித்திலன் (கொ/றோயல் கல்லூரி), பிரணவி(கொ/பம்பலப்பிட்டி இராமநாதன் இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சத்திய சொரூபன்(சுவிஸ்), அனந்தசொரூபன்(லண்டன்),சாமினி (யா/கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சுப்பிரமணியம் - பொன்னம்மா தம்பதிகளின் மருமகனும் முரளீதரன்(பிரான்ஸ்), இரமணீதரன் (மின் அத்தியட்சகர் வட்டுக்கோட்டை), மலர்விழி (யா/வதிரி திரு இருதயக்கல்லூரி), சுதர்சன் (யா/தொண்டைமானாறு வீரகத்தி வித்தியாலயம்), புனித (சுவிஸ்), ஸ்ரீதேவி(லண்டன்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2017) வியாழக்கிழமை பி.ப 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மணகாவத்தை, நெல்லியடி வடக்கு, கரவெட்டி. **தகவல்: குடும்பத்தினர்.**

மரண அறிவித்தல்

உருத்திரசிகாமணி வேலுப்பிள்ளை



அன்னை மடியில் : 21.09.1938
ஆண்டவன் அடியில் : 13.06.2017

யாழ். வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட உருத்திரசிகாமணி வேலுப்பிள்ளை 13.06.2017 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பார்வதா வார்த்தினி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரரும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு - தங்கமணிஅம்மா தம்பதிகளின் மூத்த மருமகனும், ஞான ஈஸ்வரியின் அன்புக் கணவரும், யசோதரா(கனடா), வரதராஜன்(பிரித்தானியா), வாசுகி(கொழும்பு), அருந்ததி(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பத்மலோஜனி(கனடா), கமலலோஜனி(நியூசிலாந்து), சங்கரசிகாமணி (வல்வெட்டித்துறை), சுந்தரசிகாமணி(கொழும்பு), புவனலோஜனி (கொழும்பு), பரமசிகாமணி(கனடா), இந்திரசிகாமணி(கனடா), ராஜசிகாமணி (பிரித்தானியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜெயமோகன் (கனடா), துஷிதா (லண்டன்), குமாரலிங்கம் (கொழும்பு), சேகர் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஞானசம்பந்தபிள்ளை (வல்வெட்டித்துறை), ராஜேஸ்வரி (கனடா), மங்கையற்கரசி (கனடா), குமரேசன்(நியூசிலாந்து), சரவணப்பெருமாள் (நியூசிலாந்து), சௌந்தரி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், விஜயவர்மன், விஷ்ணுவர்த்தன், பிரியங்கா, சஞ்சிதா, தரணிகா, பிரசாந்தன், ரிஷிகேஷ், வானதி, வினுஷ்கா ஆகியோரின் பாசமிகு பேரனும் மாயாவின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (15.06.2017) வியாழக்கிழமை பி.ப 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பொரளை கனத்தை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பாக்வீதி, அண்டசன் தொடர்மாடி, நாரஹன்பிட்டி, கொழும்பு. **தகவல்: குடும்பத்தினர்.**

தொடர்பு: 011 258 5164

மதியாபரணம் சத்தியானந்தன் (ஆனந்தன்)

புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மதியாபரணம் சத்தியானந்தன் (ஆனந்தன் - வர்த்தகர் மடத்துவெளி புங்குடுதீவு) 13.06.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் மதியாபரணம் (முன்னாள் வர்த்தகர் சுன்னாகம்) அன்னலெட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிவபாலன் மற்றும் நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெயந்தினியின் பாசமிகு கணவரும் விதுர்ஷன், கனிஸ்ரன், சரணிகா ஆகியோரின் அன்புத்தந்தையும் வரதலெட்சுமி (சுவிஸ்), சிவானந்தன் (பிரான்ஸ்), சர்வானந்தன்(புங்குடுதீவு) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பாலசுந்தரம் (சுவிஸ்), விஜிதா (பிரான்ஸ்) காலஞ்சென்ற விசியராணி மற்றும் சுகந்தினி, காலஞ்சென்ற சிவசங்கர் மற்றும் சிறிசங்கர், ரவிசங்கர்(பிரான்ஸ்), கமலபவானி (யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2017) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் கேரதீவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

7 ஆம் வட்டாரம், புங்குடுதீவு, ஊரைதீவு. **தகவல்: குடும்பத்தினர்.**

077 755 7097

தமிழ் மன்னர்கள் வழிபட்ட வண்ணை வீரமாகாளிக்கு இன்று கொடியேற்றம்

மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்



யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை அருள்மிகு வீரமாகாளி அம்மன் ஆலயம் சரித்திரப் பிரசித்தி பெற்ற திருத்தலமாகும். நாற்றிசையும் புகழோங்கத் தமிழையும், சைவத்தையும் ஒருங்கே வளர்த்து ஆட்சி செய்து வந்த சக்கரவர்த்திகளால் நிறுவப்பட்ட இந்த ஆலயம் நல்லூர் இராசதானியின் எல்லைக்கு அண்மையில் இருந்ததால் நல்லூருக்கு நுழைய முயன்ற அந்நியருடன் நடைபெற்ற போர்கள் பலவும் இந்தப்பகுதியில் நிகழ்ந்தது எனத் தெரிகிறது. இதுபற்றி 'யாழ்ப்பாண வைபவமாலை'யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

போர்த் தெய்வம்

யாழ்ப்பாண மன்னர்களின் போர்த் தெய்வமாக வீரமாகாளி அம்மன் விளங்கியதால் அந்தக் காலத்திலிருந்தே இந்த ஆலயம் சிறப்புப் பெற்று விளங்கி வருகின்றது. மன்னர்கள் வீரத்தை வேண்டிப் படைக்கலங்களைக் கோவிலில் வைத்து வழிபட்டு அம்பாளின் அருட்கடாட்சம் பெற்று வெற்றிகளைக் குவித்து வந்தார்கள். இலங்கையில் முதன் முதலில் மகிசாசூரசங்காரம் நடைபெற்ற அம்மன் ஆலயம் என்ற சிறப்பும் இந்த ஆலயத்திற்கு உண்டு. வடக்கு நோக்கி அமைந்துள்ள வீரமாகாளியம்மன் ஆலயம். யாழ்.நகரிலிருந்து பருத்தித்துறை வீதியை மையமாகக் கொண்டு அமைந்துள்ளது.

கோயிலின் உள்ளே புகுந்ததும் கண்ணைக் கவர்வது அங்குள்ள கொடித்தம்பமாகும். ஆலயஉட்பிரகாரத்தில் கிழக்கு வீதியில் யாகசாலை மற்றும் வாகனசாலையம் தெற்குப் பிரகாரத்தில் வடக்கு நோக்கி எழுந்தருளிய மூர்த்திகளான விநாயகர், நாகதம்பிரான், மகாவல்லி, கஜாவல்லி சமேத சுப்பிரமணியரும், மேற்குப்பிரகார்த்தில் கிழக்கு நோக்கிய வாறு சனீஸ்வரன் ஆலயமும் புதிதாக அமைக்கப்பட்ட வாசலில் சப்த தளங்களைக் கொண்ட வானளவாக உயர்ந்த இராஜகோபுரமும், மணிமண்டபமும் கம்பீரமாகக் காட்சியளிக்கும் தேர்முட்டி புதிதாக நிர்மானிக்கப்பட்ட அழகுறு தீர்த்தத் தடாகம் என்பன ஆலயத்துக்கு மேலும் அழகு சேர்க்கின்றன. வைரவப் பெருமானின் ஆலயம் அன்னபூரண்மடாலயம் தொண்டர்சபைபோன்ற சிறப்பு அமைப்புக்களையும் இங்கு காணலாம்.

ஆதி மூலம் என்னும் கருவறை

ஆதி மூலம் என்னும் கருவறையில் கர்ப்பக்கிரகத்தினுள் எழுந்தருளியுள்ள கிலா விக்கிரகம் கருணாம்பிகை வடிவமாயுள்ளது. மூர்த்திகரமான வடிவத்தில் மகிடாசுர மர்த்தினி எனவும் கூறப்படுகிறாள். இந்த ஆலயத்தில் காணப்படும் தேர் வரலாற்றுச் சிறப்பினைக் கொண்டு விளங்குகின்றது. 1941ஆம் ஆண்டு இந்தத்தேரானது அமைக்கப்பட்டது. இலங்கையில் யாழ்ப்பாணத்தமிழ் சிற்பாசாரியார்களால் உருவாக்கப்பட்ட முதல் தேர் இதுவாகும். விநாயகர் ஆறுமுகம் என்ற சிற்பாசாரியாரால் இது உருவாக்கப்பட்டது. இந்தத் தேர் வெள்ளோட்டம் விடப்பட்ட வேளை தேர் அசைய முடியாமல் தத்தளித்தபோது வெண்ணிற ஆடையுடன் அங்கு ஒரு வயதான மூதாட்டி அந்தச் சிற்பாசாரியாரிடம் ஐந்து ரூபா காசு கொடுத்துவிட்டு மறைந்தபின் அந்தத்தேர் அசைந்தது என்று கூறப்படுகின்றது. அவர் கொடுத்த ஐந்து ரூபா தற்பொழுதும் அந்தச் சிற்பாசாரியாரின் பட்டறையில் கண்ணாடி பொருத்தி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த ஆலயத்தில் அழகிய திருமஞ்சம், புஸ்பரைதம் கண்ணைக்கவரும் பல வாகனங்கள் எல்லாம் அம்பிகையின் ஆலயத்தின் சிறப்பினைப் பெருக்கி நிற்கின்றன.

இத்தகு சிறப்புக்களோடு விளங்கும் அன்னை வீரமாகாளி அம்பாளுக்கு இன்று கொடியேற்றப் பெருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றது.

கண்ணீர் அஞ்சலி

திருமதி றொஜிலா செல்வன் றாஜதாஸ்

றாஜதாஸ் றோசான்

இனிய மொழி பேசி இல்லறத்தை இனிதாக நடத்தி
திடமாக வாழ்வதற்கு முன் எம்மைக் கண்ணீர்ப்
பிரளயத்தில் தவிக்கவிட்டு திசைமாறிப் போனதென்ன.....

உங்கள் பிரிவால் துயருறும்:

மாமா - மாமி
பேரன் பேர்த்தி } கணேஸ் - ஜெயமணி

மைத்துனர்கள்
பெரியதந்தை
சிறியதந்தை } விமலதாஸ் (கனடா), அமலதாஸ் (மன்னார்), சத்தியதாஸ் (இந்தியா), விஜயதாஸ், கபில்தாஸ்

சகோதரர்கள் (அண்ணிமார்)
பெரியதாயார் } மரியராணி, சிந்துஜா, வசந்தா, இமல்டா

பெறாமக்கள்
சகோதரர்கள் } நிரோஜன் (கனடா), நித்தியா (இந்தியா), தர்சன், கயந்தினி, அலன்ரினா, காலஞ்சென்றவர்களான - குஜிபா, ஜனிக்கா, திவராஜ்

கடற்கரை வீதி, தாளையடி.

மரண அறிவித்தல்கள்

திருமதி றொஜிலா செல்வன் றாஜதாஸ்

றாஜதாஸ் றோசான்

அல்லப்பிட்டி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றொஜிலா றாஜதாஸ் 13.06.2017 செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

அன்னார் அருமைநாயகம் - வவா தம்பதியரின் மகளும், கணேஸ் - ஜெயமணி தம்பதியரின் மருமகளும், றாஜதாஸின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற றோசானின் அன்புத் தாயும், விஜி (வளம்புரம், பாசையூர்), யக்சன் (பிரான்ஸ்), கமல் (பிரான்ஸ்), கொலின் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும், பிரபா (வளம்புரம், பாசையூர்), ஜெறினா (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும், பிரிலா, பிருஷா, பிரவின் ஆகியோரின் சிறியதாயும், யுலக்சினி, யதுசன், யஸ்மினா, ஜெனிபர் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக அவர்களது இல்லத்திலிருந்து அல்லப்பிட்டி பிலிப்பு நேரியார் ஆலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு பிற்பகல் 3.00 மணியளவில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் நல்லடக்கத்துக்காக அல்லப்பிட்டி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

றோசான்

அல்லப்பிட்டி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் றாஜதாஸ் றோசான் 13.06.2017 செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

அன்னார் றாஜதாஸ் காலஞ்சென்ற றொஜிலா தம்பதியரின் அன்பு மகனும், அருமைநாயகம் - வவா, கணேஸ் - ஜெயமணி தம்பதிகளின் அன்புப் பேரனும், திருமதி விஜி - பிரபா தம்பதியரின் பெறா மகனும், யக்சன் - ஜெறினா, கமல், கொலின் ஆகியோரின் மருமகனும் ஆவார்.

இன்று (15.06.2017) வியாழக்கிழமை

தகவல்:

2 ஆம் வட்டாரம், அல்லப்பிட்டி.

குடும்பத்தினர்.

பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படின் பொலிசாருக்கு முப்படையினர் உதவுவர்

பாதுகாப்புச் செயலர் கூறுகிறார்

கொழும்பு. ஜூன் 15

தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் விடயங்களில் முப்படையினர் பொலிஸாருக்கு உதவுவார்கள் எனப் பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

எனினும் இதுவரை அவ்வாறு பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டிய அவசியம் எதுவும் ஏற்படவில்லை எனக் குறிப்பிட்ட அவர், நாட்டு மக்கள் மத்தியில் நல்லிணக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறினார்.

சில ஊடகங்கள் இனவாத அடிப்படையில் செய்தித் தலைப்புக்களை இட்டு வருவதாகவும், செய்திகளுக்கு அது பொருத்தமாக இருந்தாலும், நாட்டுக்கு அது நன்மையை ஏற்படுத்தாது எனவும் அவர் குறிப் பிட்டார்.

சில கடும்போக்குவாதிகள் இனவாத அடிப்படையில் செயற்பட்டுவருவதாகவும், சின்னச் சின்னப் பிரச்சினைகளைப் பூதாகாரமாக்க முயற்சிப்பதாகவும் அவர் குற்றம்சாட்டினார். (த)

பொருத்தமற்ற காலப் பகுதியில் வருடாந்த ஆசிரியர் இடமாற்றம்

ஆட்சேபிக்கிறது தமிழாசிரியர் சங்கம்

மட்டக்களப்பு, ஜூன்15

கிழக்கு மாகாணத்தில் பொருத்தமில்லாத காலப்பகுதியில் வருடாந்த ஆசிரியர் இடமாற்றம் இடம்பெறுவதை தமது சங்கம் ஆட்சேபிப்பதாக கிழக்கு மாகாணத் தமிழாசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

சங்கத்தின் பொதுச் செயலாளர் எஸ்.ஜெயராஜா இது குறித்து நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது.

ஆசிரியர் இடமாற்றத்துக்கான தேசியக் கொள்கை ஒன்றுள்ளது.

அந்தக் கொள்கையைப் பிற்பற்றியோ அல்லது மாகாணத்திற்குப் பொருத்தமான ஒரு கொள்கை வகுப்பின் அடிப்படையிலோ இடமாற்றம் இடம்பெற வேண்டும்.

ஆனால் இந்த இரண்டு கொள்கைகளும் இல்லாது கிழக்கு மாகாணத்தில் வருடாந்த ஆசிரியர் இடமாற்றம் இடம்பெற்று வருவது குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

வருடத்தின் நடுப்பகுதியில் இடமாற்றம் இடம்பெறுவதில்லை.

தேசிய இடமாற்றக் கொள்கையின்படி ஆசிரியர்கள் தமக்கான இடமாற்றத்தை வேண்டி வலயக் கல்விப் பணிப்பாளர்களுடாகச் நடப்பு வருடத்தின் மே. ஜூன் மாதங்களில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவேண்டும்.

அந்த விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் ஒகஸ்ட் மாதத்தில் வலயங்களுக்கு அனுப்பவேண்டும்.

ஆட்சேபனைகள் இருப்பின் அவற்றினையும் உள்வாங்கி இறுதிப்பட்டியல் நவம்பர் மாதம் அனுப்பிவைக்கப்பட்டு ஆசிரியர்களுக்கு அந்த ஆண்டிறுதி விடுமுறைக்கு முன் வழங்கப்படல் வேண்டும்.

ஆனால், இந்தவித ஒழுங்குகள் எதுவுமே இல்லாமல் முறையற்ற விதத்தில் ஆண்டின் நடுப்பகுதியில் வழங்கப்படும் இடமாற்றங்களால் மாணவர்களின் கல்வி உட்பட நிர்வாகச் செயற்பாடுகள் குழம்பும்.

முறையற்ற விதத்தில் மேற்கொள்ளப்படுகின்ற ஆசிரியர் இடமாற்றங்களால் ஆசிரியர்கள் நீதிமன்றம் செல்லவேண்டியுமுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் ஆசிரியர் குழாம் ஒன்று இவ்வாறு தமக்கு நீதிவேண்டி நீதி மன்றத்தை நாடியுள்ளது.

அவர்களது இடமாற்றங்களை நிறுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஆகவே இத்தகைய குழப்பகரமான நிலைமைகளைத் தவிர்த்துக் கொள்வதற்காகக் கிழக்கு மாகாணத்தில் முறையான ஆசிரியர் இடமாற்றக் கொள்கை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதை கிழக்கு மாகாணத் தமிழாசிரியர் சங்கம் வலியுறுத்தி நிற்கின்றது எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. (த-ய-46)

மகிந்த வெளியிட்ட கருத்து தவறானது

சாடுகிறார் மங்கள

கொழும்பு. ஜூன் 15

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச. ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகைதொடர்பில்வெளியிட்ட கருத்து பிழையானது என நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ச. பிழையான தகவல்களை வழங்கிமக்களைத்திசைதிருப்பும் முனைப்புக்களில் ஈடுபட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள அவர், நல்லாட்சி அரசு பொருளாதாரத்தை வலுவடையச் செய்துள்ளது என்பதை மகிந்த ஏற்றுக் கொள்ள மறுத்து வருவதாகவும் கூறினார்.

மஹிந்த ராஜபக்ச அரசு ஜி.எஸ்.பி. வரிச் சலுகையைப் பெற்றுக் கொள்ளப் பல்வேறு வழிகளில் போராடித்தோற்றது எனவும் அவர் சுட்டிக் காட்டினார். இந்த அரசு சர்வதேச சமூகத்துடன் சுமுகமான உறவைப் பேணி ஜி.எஸ்.பி. வரிச் சலுகையை மீளப் பெற்றுக் கொண்டுள்ளதாகவும், அந்த வெற்றியை மலினப்படுத்தும் முயற்சியில் மகிந்த ஈடுபட்டுள்ளதாகவும் மங்கள மேலும் குறிப்பிட்டார். (த)

வேலையாள்கள் தேவை

பின்வரும் தொழிலாளர்கள் நமது நிறுவனத்தில் வேலை செய்வதற்கு உடனடியாக தேவைப்படுகின்றார்கள்

- மேசன்
- மேசன் உதவியாளர் (கூலியாள்கள்)
- மின் ஒட்டுநர் (Welder)
- மாபிள் வேலை தெரிந்தவர்கள்
- கம்பி வேலை தெரிந்தவர்கள் (Barbender)
- Painter

தகுதி நிற்பவர்களும் வரலாம்

உடனடியாக யாழ்ப்பாணத்தில் வேலை செய்வதற்கு தேவை.

தொடர்புகளுக்கு:
கோப்பாய் மத்தி, கோப்பாய்.
075 919 9759

தவறிவிட்டது

கடவுச்சீட்டு, நகை அடகுச்சீட்டை, ATM Card உட்பட பெண்களின் சிறு கைப்பை 13.05.2017 அன்று வவுனியாவுக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்காணப்படும் தொலைபேசி இலக்கத்துக்கு அறியதரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

077 355 0675

வீடு வாடகைக்கு உண்டு

பழைய தபால்கந்தோர் வீதி, சங்கானையில் நவீன வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. (C 4881) (14)

077 138 9551/ 077 853 4291

சந்தையாளர்கள் - யாழ்ப்பாணம்

நீங்கள் விற்பதற்கு மற்றும் ஆர்வமாக இருந்தால்.... நீங்கள் எங்களுக்கு தேவை.

எங்களுடைய தயாரிப்புகளாவன,

- சீசீ டீவி
- அழைபாது நுழைபவர் அலாரம் அமைப்புகள்
- தீ தடுப்பு அமைப்புகள்
- தீ கண்டறியும் அமைப்புகள்
- தீ அணைப்பவர்

எங்களுடைய சேவைகளாவன,

- மனித பாதுகாப்பளித்தல்
- விசாரணைகள்
- பாதுகாப்பு பயிற்சி

சம்பளம் - பேசி தீர்மானிக்க முடியும்
தொடர்புகளுக்கு அழையுங்கள் டெரிக் - 0771 096 649

Email – careers@watchguard.lk

கட்டடம் வாடகைக்கு

கஸ்தூரியார் வீதி, இலக்கம் 307 இல் அலுவலகத்திற்கு உகந்த இருமாடிகளைக் கொண்ட கட்டடம் வாகனத் தரிப்பிட வசதிகளுடன் வாடகைக்கு உண்டு.

071 898 0422

வேலையாள்கள் தேவை

சாவகச்சேரியில் இயங்கும் பேக்கரி ஒன்றுக்கு பேக்கரி வேலை தெரிந்தவர்கள் தேவை. (ACH 00142) (14)

077 224 7583/076 862 1238

கூறு விலை

எமது சங்கத்தின் அலுவலகப்பகுதியின் கட்டடத்திற்கு வளிச்சீராக்கி பொருத்துவதற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன. எனவே கூறுவிலை சமர்ப்பிப்பவர்கள் சங்கத்திற்கு வருகை தந்து பார்வையிட்டு உரிய படிவங்களைப் பெற்று தங்களது மூடிய கூறுவிலையை 30.06.2017 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவும்.

பொதுமுகாமையாளர்
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.
தொலைபேசி இலக்கம்: 021 321 2926

கூறு விலை

எமது சங்கத்தின் கால்நடைத்தீவன ஆலை இயந்திரங்கள் மீளஇயக்கக் கூடிய முறையில் புனரமைப்பதற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன. எனவே கூறுவிலை சமர்ப்பிப்பவர்கள் சங்கத்துக்கு வருகை தந்து கால்நடைத் தீவன ஆலையைப் பார்வையிட்டு தங்களது மூடிய கூறுவிலையை 30.06.2017 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவும்.

பொதுமுகாமையாளர்
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.
தொலைபேசி இலக்கம்: 021 321 2926

University of Jaffna

Sivayogar Swami Memorial Lecture-2017

On

"சைவசித்தாந்த மெய்யியல் நோக்கில் யோகர் சுவாமிகள்"

Speaker : Prof. (Mrs.) A. N. Krishnaverey
Former Head / Fine Arts,
Faculty of Arts,
University of Jaffna.

Place : Kailasapathy Auditorium,
University of Jaffna.

Date : 16.06.2017

Time : 3.00p.m

All are cordially invited.

Registrar.

பெறுகை அறிவித்தல்

காரைநகர் பிரதேசசபை, காரைநகர் சபைநிதி வேலைகள் - 2017 திருத்தம்

மேற்படி 14.06.2017 ஆம் திகதிய பெறுகை அறிவித்தலானது பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது என்பதை அறியத்தருகின்றேன்.

இல	வேலை விவரம்	மதிப்பீட்டு தொகை மில்லியனில் (VAT நீங்கலாக)	ஒப்பந்த காலம்	வேண்டப்படும் தரம்	கேள்வி பிணை வைப்பு (ரூபா)
1	மருதடி கோயில் வீதி புனரமைப்பு (தார்)	0.982	02 மாதம்	C9	9,000.00
2	சிவகாமி அம்மன் கோயில் - அல்வின் வீதி 3ஆம் இடது இணைப்பு வீதி (மெய்கண்டான் பாடசாலை வீதி) புனரமைப்பு	2.056	02 மாதம்	C8	20,000.00

தலைவர்
பிரதேசசபை பெறுகைக்குழு
காரைநகர் பிரதேசசபை,
காரைநகர்.
14.06.2017

கிருஸ்ணா அடகுசேவை

பதிவு இல J/Ds/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 15.12.2016 இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆம் திகதி (15.07.2017) இற்கு முன்னர் மீட்கவும் மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தை கட்டி புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்க தவறின் 15.07.2017 ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம்.

உரிமையாளர் A.S.Surendran

இல.370, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 490 0311

இல.09, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5046

நேபாளம் இலங்கை இடையே வானூர்திச் சேவை விரைவில்

கொழும்பு, ஜூன் 15

இலங்கை நேபாளம் இடையிலான வானூர்திச் சேவையை ஆரம்பிப்பதற்கு இரு நாடுகளும் கவனம் செலுத்தியுள்ளன.

நேபாளத்துக்கான தூதுவர் மற்றும் அயலுறவு அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோருக்கு இடையில் நேற்று முன் தினம் மாலை சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளதாக அயலுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

நேபாளம்இலங்கை இடையிலான வர்த்தக உறவுகளை மேலும் விரிவு படுத்துவது தொடர்பிலும் இதன் போது கலந்துரையாடப்பட்டதாகக் கூறப்பட்டது. (த)

வரலாற்றில் அதிகூடிய நட்டஈடு பெறும் இலங்கைப் பணிப்பெண்

கொழும்பு, ஜூன் 15

கடந்த 15 வருடங்களாகச் சவூதி அரேபியாவில் சம்பளமே இல்லாமல் பணிபுரிந்துவிட்டு வெறும் கையுடன் நாடு திரும்பியுள்ள பணிப்பெண் ஒருவருக்கு 49 இலட்சம் ரூபா நட்டஈடாக வழங்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, ஏறாவூர் பிரதேசவாசியான ஞானப்பிரகாசம் நிஷாந்தினி எனும் இந்தத் தமிழ்ப் பெண் 2000ஆம் ஆண்டு தனது 14ஆவது வயதில் சவூதி அரேபியாவுக்குப் பணிப் பெண்ணாகச் சென்றுள்ளார்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்துகொள்ளாமலே சென்ற இவர், அங்கு தொடர்ந்து 15 வருடங்களாகச் சம்பளம் எதுவும் பெறாமல் ஒரே வீட்டில் பணிபுரிந்துவிட்டு வெறும் கையுடன் நாடு திரும்பியுள்ளார். வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் திருமதி தலதா அத்துக்கோரள அவருக்கு 49 இலட்சம் ரூபாவை நட்டஈடாக வழங்கியுள்ளார்.

அத்துடன், இந்தப் பெண்ணுக்கு 15 வருடங்களாகச் சம்பளம் வழங்காமல் வேலை வாங்கிய சவூதி தொழில் தருநருக்கு எதிராக இராஜதந்திர மட்டத்தில் விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் அமைச்சர் தலதா அத்துக்கோரள தெரிவித்தார். (த)

அமெ. நிபுணர்களுடன் கொழும்பு வருகின்றது இராணுவ விமானம்

இடர் உதவிப் பணிகளில் ஈடுபடுவதற்காக

கொழும்பு, ஜூன் 15

இலங்கை வெள்ள இடரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மனிதாபிமான உதவிச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அமெரிக்காவின் பசுபிக் கட்டளைப் பீடத்தின் இராணுவ விமானம் ஒன்று நிபுணர்களுடன் கொழும்பு வரவுள்ளது.

கடந்த மாதம் இலங்கையின் தென்பகுதியில் ஏற்பட்ட பெருவெள்ளம் மற்றும் நிலச்சரிவினால், 300 பேர் வரை உயிரிழந்தனர்.

பெருமளவில் அழிவுகளை ஏற்படுத்திய இந்த இடரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உதவிப்பணிகளை மேற்கொள்வதற்காக அமெரிக்கக் கடற்படையின் ஏவுகணைப் போர்க்கப்பலான யு.எஸ்.எஸ். லேக் எரி கடந்த 11ஆம் திகதிகொழும்புத் துறைமுகத்துக்கு வந்துள்ளது.

இந்தக் கப்பலில் வந்துள்ள அமெரிக்கக் கடற்படையினர், இலங்கைக் கடற்படையின் மரைன் படைப்பிரிவினருடன் இணைந்து, காலி, மாத்தறை, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் உதவிப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இரண்டு வாரங்கள் இலங்கையில் தங்கியிருந்து இவர்கள் இந்தப் பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

இந்த நிலையில், பசுபிக் கட்டளைப் பீடம் இடர் உதவிப் பணிகளுக்காக இராணுவ விமானம் ஒன்றையும், நிபுணர்களையும் விரைவில் கொழும்புக்கு அனுப்பவுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த நெருக்கடியான தருணத்தில் இலங்கையுடன் அமெரிக்கா இணைந்து நிற்கிறது என்று அமெரிக்காவின் பசுபிக் கட்டளைத் தளபதி அட்மிரல் ஹரி ஹாரிஸ் தெரிவித்தார்.

மீட்பு முயற்சிகளில் ஈடுபட்டுள்ள இலங்கைப் படையினருடன் அமெரிக்கப் படைகள் ஒருங்கிணைந்து ஆதரவளிக்கும். அமெரிக்காவின் ஏனைய அமைப்புகளுடன் இணைந்து நாம் செயற்படுவோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (த)

(கோப்புப்படம்)

Centre for Open and Distance Learning (CODL), University of Jaffna, Sri Lanka
(திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை)

வணிகமாணி பட்டப்படிப்பு 2015/2016 (வெளிவாரி) (அரையாண்டு அடிப்படையிலானது)
Bachelor of Commerce Degree Programme – 2015/2016 (External) (New Syllabus)
(Semester Based Course Unit system and Grade Point Average Evaluation)

புதிய அனுமதிக்கான தெரிவுப் பரீட்சை – 2015

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்படும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் அமைந்த நான்கு வருட கால வணிகமாணிக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

அனுமதிக்கான தகைமைகள்:

- க.பொ.த. (உ/த) பரீட்சை (வணிகப்பிரிவு) – 2015 அல்லது அதற்கு முன்னர் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியானவர்கள்

அல்லது

- பல்கலைக்கழக முதலையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு சமமான வேறு தகைமையைக் கொண்டவர்கள்.

வணிக முதற்தேர்வில் இருந்து விலக்களிப்பு கோருதல்:

- ஏற்கனவே வணிக முதற்தேர்வு அல்லது அதற்கு சமனான கற்கை நெறிகளில் சித்தியடைந்து விலக்களிப்பு கோருவோர், உரிய தகமைகளை குறிப்பிட்டு விண்ணப்பிக்க முடியும்

முக்கிய குறிப்பு :- இலங்கைப் பல்கலைக்கழகமொன்றில் பட்டப்படிப்பொன்றுக்காக பதிவு செய்தவர்கள் விண்ணப்பிக்கலாகாது.

மாணவர் தெரிவு:

விண்ணப்பதாரிகள் பொது உளச்சார்புப்பரீட்சை அல்லது நேர்முகப் பரீட்சை அல்லது இரண்டின் மூலமும் தெரிவு செய்யப்படுவர்.

பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

விண்ணப்பப்படிவங்களைப் பெறுதல்:

1. விண்ணப்பப்படிவத்தினை நேரடியாக பெற விரும்புவோர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில், விண்ணப்ப மற்றும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 500 ஐ செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டை சமர்ப்பித்து யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் இருந்த அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் பெற விரும்புவோர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளருக்கு எழுதப்பட்ட, ரூபா 500 க்கான காசுக்கட்டளை/தபாற்கட்டளையை, சுய முகவரியிடப்பட்ட ரூபா 40.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 25 x 20 செமீ அளவுடைய தபால் உறையுடன், சிரேஷ்ட உதவிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்தல்:

விண்ணப்பங்கள் யாவும் சிரேஷ்ட உதவிப்பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "வணிகமாணி பட்டப்படிப்புக்கான விண்ணப்பம்- 2015/2016" என தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத்திகதி : 14.07.2017 (வெள்ளிக்கிழமை). (விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

மேலதிக விபரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
14.06.2017

(C30119(10)

இலங்கையில் முதன் முதலாக குறிஞ்சாவில் இருந்து

Multigrains 15 தானியம் சத்தும் Nutrition of Life

மென்பானம் (D-Cola), குறிஞ்சா தேயிலை, கோப்பி

யுத்த கால சூழ்நிலையில் தயாரித்த பெருமை

BIO TEC International Ltd Thirunelvely Company பெற்று கொண்டுள்ளது.

இந்த கொம்பனி தயாரித்த பொருள்களுக்குக் கீழ் கண்ட விருதுகள் பெற்று கௌரவிக்கப்பட்டது.

Entrepreneur of the year 2006. Awarded Trophy at Provincial Level and Merit Award at National Level by Sri Lanka Chambers of Commerce and Industries on 27th Nov 2001 Awarded 2nd Prize All Ceylon Presidential Exhibition at BMICH Colombo on 30th Nov. 2006 and 1st Prize at Provincial Level.

தற்போது 15 வகை தானியங்களையும் சேர்த்து மிகச்சிறந்த சத்துமா தயாரித்து மக்கள் மனதில் நீங்காத இடம் பிடித்துள்ளது. நீங்களும் இதை உபயோகப்படுத்தி பயன்பெறுங்கள்.

சிவப்பு உடையல் பச்சை அரிசி, சிவப்பு கைக்குத்தரிசி, கோதுமை (உடையல்), சோளம், ஓட்ஸ், பார்லி அரிசி, குரக்கன், வரகு அரிசி, தினை, பயறு, உழுந்து, பொட்டுக்கடலை, கச்சான், கடலை, இத்துடன் சிறிதளவு தானியங்கள், பாதாம் பருப்பு, கயு, மசாலா

இப்பொழுது குறுகிய காலத்தில் 15.06.2017 முதல் கிடைக்கக்கூடிய இடம்:

யாழ். சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் மண்டபம்.
இல.161, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

நிரந்தரமாக கிடைக்கக்கூடிய இடம்:

BIO - TECH International Ltd
131/2, Palaly Road, Thirunelvely, Jaffna.
T.P : 021 459 0907, 021 222 0156
Mobile : 077 7048 181

விநியோகஸ்தர்கள் :

★ குறிஞ்சி பார்மஸி
பலாலி வீதி, திருநெல்வேலி.

★ தியாகி அரக்கொடை நிலையம்
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

★ ஜீவன் மெடிக்கல் நிலையம்
52, புது Dr.சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

★ அம்பிகைபாகன் மல்ரி சொப்
பண்டத்தரிப்பு வீதி, தெல்லிப்பழை.
077 0059 741/ 071 3080 947

(சந்தைப்படுத்த விரும்பிய விநியோகஸ்தர்கள் தயவு செய்து கொம்பனியுடன் தொடர்பு கொள்ளவும்)

கெஹலியவுக்கு எதிராக வழக்கு

கொழும்பு, ஜூன் 15
பொது எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புவெலவுக்கு எதிராக இலஞ்சம் மற்றும்ஊழல்ஆணைக்குழு கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன் தினம் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.
கடந்த அரசில் ஊடக அமைச்சராக அவர் இருந்தபோது இரண்டு இலட்சத்து 30 ஆயிரம் ரூபா தனிப்பட்ட தொலைபேசிக் கட்டணத்தை அரச அச்சகக் கூட்டுத்தாபன நிதியிலிருந்து செலுத்தியமை தொடர்பிலேயே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
2012 ஆம் ஆண்டு மார்ச் முதல் ஏப்ரல் மாதம் வரையான காலப்பகுதிக்குரிய தொலைபேசிக் கட்டணமே இவ்வாறு செலுத்தப்பட்டுள்ளது.
இதேவேளை, அரச அச்சகக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் ஜயம்பதி பண்டாரவுக்கு எதிராகவும் இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழு வழக்கு தொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

மோசடி விசாரணைகள் விரைவுபடுத்தப்படும்

அரச தலைவர் ஆணைக்குழுவின் செயலாளர் குணதாச தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 15
அரச தலைவர் ஆணைக்குழுவுக்குக் கிடைத்துள்ள பெரும்மோசடிகள் தொடர்பான முறைப்பாடுகளின் விசாரணைகள் விரைவு படுத்தப்பட்டுள்ளதாக அரச தலைவர் ஆணைக்குழுவின் செயலாளர் எச். டபிள்யூ. குணதாச தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஆணைக்குழுவில் சாட்சி விசாரணைகளை மேற்கொள்ளாமல் சட்டத்தரணியூடாகச் சத்தியக் கடதாசி பெற்று விசாரணை நடவடிக்கைகளை விரைவு படுத்தத் தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது,
பெரும் மோசடிகள் தொடர்பில் விசாரிக்கும் அரச தலைவர் ஆணைக்குழுவினால் விசாரணைகள் நிறைவடைந்துள்ள 12 முறைப்பாடுகளின் இறுதி அறிக்கைகள் அரச தலைவரிடம் சமர்பிக்கப்பட்டுள்ளன.
ஆணைக்குழுவின் காலம் இந்த ஆண்டு செப்ரெம்பர் மாதத்துடன் நிறைவடையவுள்ள நிலையில் எதிர்வரும் 15ஆம் திகதி ஆணைக்குழு மீண்டும் கூடவுள்ளது- என்றார். (த)

> ஆணைக்குழுவில் சாட்சி விசாரணைகளை மேற்கொள்ளாமல் சட்டத்தரணியூடாகச் சத்தியக் கடதாசி பெற்று விசாரணை நடவடிக்கைகளை விரைவு படுத்தத் தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ஹக்கீமுக்கு எதிராக முறைப்பாடு

கொழும்பு, ஜூன் 15
நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு எதிராகக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
வியாபார நடவடிக்கைகளுக்கு அமைச்சர் ஹக்கீம் இடையூறு விளைவித்ததாகத் தெரிவித்து நேற்று முன் தினம் இந்த முறைப்பாடு செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது.
இதேவேளை, கட்டாரிலுள்ள அடிப்படைவாதக் குழுவொன்றுடன் அமைச்சர் ஹக்கீமுக்குத் தொடர்புள்ளதெனக் கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பொது பல சேனாவின் நிறைவேற்று அதிகாரி டிலந்த விதானகே குற்றஞ்சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

அரசுக்கு எதிராக சதியில் ஈடுபடும் எதிரணியினர் மீது விசாரணை தேவை

லக்ஸ்மன் கிரியெல்ல அரசுக்கு அழுத்தம்

கொழும்பு, ஜூன்
பொது எதிரணியினர் அரசுக்கு எதிராக சமூக வலைத்தளங்களில் மேற்கொண்டுவரும் சதித் திட்டங்கள் பற்றிய விரிவான விசாரணையொன்று நடத்தப்படவேண்டுமென உயர்கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
பொது எதிரணியைச் சேர்ந்த சுமார் 40 உறுப்பினர்கள் பல்வேறு சமூக வலைத்தளங்கள் மூலம் அரசின் மீது சேறு பூசி வருகின்றனர். இது நன்றாகத் திட்டமிடப்பட்டுச் செய்யப்படும் ஒரு சதிவேலையாகும். இந்தச் சதியின் மூலம் இன்றைய அரசின் இரு பிரதான கட்சிகளுக் குமிடையில் முறுகலை ஏற்படுத்திக் குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க அவர்கள் முயற்சி செய்து வருகிறார்கள்.
அண்மையில்நடந்த இயற்கை இடரின் பின்பும் அரசின் மீது சேறு பூசும் எதிரணியினரின் சதிகள் அதிகரித்துள்ளன. இவர்களது மறைமுகமான சதித்திட்டங்கள் பற்றி மக்கள் நன்கு புரிந்து வைத்துள்ளார்கள்.
கடந்த ஞாயிற்றுக்கிழமை பேராதனை ரஜவத்தையில் நடந்த வைபவமொன்றில் கலந்துகொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (த)

நல்லிணக்கச் செயற்பாடுகள் குறித்து தென்னாபிரிக்காவுக்கு எடுத்துரைப்பு

தூதுவரைச் சந்தித்தார் அமைச்சர் மனோ

கொழும்பு, ஜூன் 15
நாட்டில் நல்லிணக்கத்தை மேம்படுத்துவது உள்ளிட்ட அரசின் தற்போதைய செயற்பாடுகள் தொடர்பாக, தென்னாபிரிக்கத் தூதுவருடன் தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கருமமொழிகள் அமைச்சர் மனோ கணேசன் கலந்துரையாடியுள்ளார்.
தென்னாபிரிக்கத் தூதுவர் உள்ளிட்ட பிரதிநிதிகள் குழுவுக்கும் அமைச்சர் மனோ கணேசனுக்கும் இடையிலான இந்தச் சந்திப்பு அமைச்சரின் அலுவலகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது.
இந்தச் சந்திப்பின்போதே மேற்குறித்த விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளது.
இந்தச் சந்திப்பில், அமைச்சின் செயலாளர் ரஞ்சித் உயன்கொட, அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் பிரியானீ குணரத்ன, தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத் தலைவர் சந்தன அருண தேவ உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (த)

ஆறாம் மாத நினைவஞ்சலியும்
அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
01 . 05 . 1953

மறைவு
19 . 12 . 2016

திருமதி பரமேஸ்வரி தங்கவேலாயுதம்

"ஆசைதனைச் சுருக்கி அன்பினாற் பிணைத்து
அறநெறி புகட்டிய அம்மா நினைவெல்லாம் நீயே"

கடந்த 19.12.2016 அகாலமரணமடைந்த எமது குடும்பத் தலைவியின் மறைவின் போது பங்கு கொண்டு உதவி நல்கியவர்கள். நேரிலும் தொலைபேசியிலும் ஆறுதல் கூறியவர்கள், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டவர்கள். மலர்வளையங்கள் செலுத்தியவர்கள், இறுதி ஊர்வலயத்தில் பங்கு கொண்டவர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (15.06.2017) வியாழக்கிழமை காலை 7 மணியளவில் அந்தியேட்டிக் கிரியைகள் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் இடம்பெறும். நாளை (16.06.2017) வெள்ளிக்கிழமை வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் அத்தருணம் தாங்களும் வருகைதந்து, ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

பொற்பதி குடத்தனை. குடும்பத்தினர்.

கைபேசியால் 5 மாதங்களில் 20 ரயில்பாதைச் சாவுகள்

கொழும்பு, ஜூன் 15
கைபேசியில் உரையாடிக்கொண்டே தொடருந்துப் பாதைகளில் நடந்ததாலும், தொடருந்துப் பாதைகளில் நின்றவாறே செல்பி எடுக்க முனைந்ததாலும் கடந்த ஐந்து மாதங்களில் 20 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தொடருந்துத் திணைக்கள நிர்வாகம் தெரிவித்துள்ளது.
ஹெட்போன்களைக் காதுகளில் மாட்டிக் கொண்டு தொடருந்துப் பாதைகளில் நடப்பதும், அந்தப் பாதைகளில் நின்றுகொண்டே செல்பிகள் எடுக்க முனைவதுமே இந்த விபத்துகளுக்குக் காரணம் எனவும், கடந்த ஐந்து மாதங்களில் கொள்ளுப்பிட்டிக்கும் கல்கிசைக்கும் இடையிலேயே அதிக விபத்துகள் நடந்திருப்பதாகவும், வார இறுதி விடுமுறை நாள்களில் இது சகஜமாகியுள்ளதாகவும் தொடருந்துப் பாதுகாப்பு அத்தியட்சகர் அநுர பிரேமரத்ன தெரிவித்தார்.
அண்மையில் அளுத்கம தொடருந்து மிதிபலகையில் நின்றவாறே செல்பி எடுக்க முயன்ற சீன்ப பெண் ஒருவர் தவறி வீழ்ந்து உயிரிழந்தார் எனவும், மக்களின் கவனக்குறைவாலேயே இத்தகைய இடர்கள் நடப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (த)

ஈராக்கின் மேற்கு மோசூலில் பரிதவிக்கின்றனர் சிறுவர்கள்

மோசமான ஆண்டாகப் பதிவாகும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் கவலை

பக்தாத், ஜூன் 15

ஈராக்கின் மேற்கு மோசூல் நகரில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போர் தற்போது உச்சம் தொட்டுள்ள நிலையில் அங்குள்ள சிறுவர்கள் மிகுந்த துயரத்தை அனுபவிக்கின்றனர் என்றும் அவர்கள் வாழ்வதற்காக அனுதினமும் போராடிக் கொண்டிருக்கின்றனர் என்றும் ஈராக்கில் செயற்படும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் கவலை தெரிவித்தது.

ஈராக், சிரிய நாடுகளைக் கைப்பற்றி அவற்றை ஓர் தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரும், பிரபல வர்த்தக நகருமான மோசூல் இருந்தது. இதன் கிழக்குப் பகுதி நீண்ட போராட்டத்தின் பின்னர் கடந்த ஜனவரியில் கைப்பற்றப்பட்டது. மேற்குப் பகுதிக்கான போரே தற்போது நடைபெற்றுவிட்டது. அதிலும் தற்போது நடைபெறுவது இறுதிக்கட்டப் போர். இதன்பின்னர் அங்கிருந்து ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புவிரட்டியடிக்கப்படும் என்று ஈராக் இராணுவம் ஏற்கனவே தெரிவித்திருந்தது.

மேற்கு மோசூல் மீட்புப் போரில் சிறுவர்கள் மற்றும் குழந்தைகள் மிகப் பெரிய பாதிப்புக்கு உள்ளாகுகின்றனர். சிறுவர் உயிரிழப்புக்கள், அவர்கள் தமது அவயங்களை இழத்தல் தற்போது அதிகரித்துக் கொண்டு வருகிறது. இதேநிலை நீடித்தால் மேற்கு மோசூல் மீட்கப்படுவது ஒருபுறம் இருக்க, ஈராக் சிறுவர்களின் குறிப்பாக மேற்கு மோசூல் நகரச் சிறுவர்களின் மோசமான ஆண்டாக இந்த ஆண்டு பதிவாகும் என்று பிரிட்டனைத் தலைமையகமாகக் கொண்டு மோசூலில் செயற்படும் மனித உரிமைகள் கண்காணிப் பகம் கவலை தெரிவித்தது.

ஈராக்கின் அயல்நாடான சிரியாவும் ஆயுததாரிகளின் பிடியில் இருந்தது. கடந்த வருடம் இறுதிப்பகுதியில் அது மீட்கப்பட்டது. ஏராளமான சிறுவர்கள் உயிரிழந்தனர். பலர் அவயங்களை இழந்தனர். இதனால் சிரியக் குழந்தைகள் மற்றும் சிறுவர்களின் மோசமான ஆண்டாகக் கடந்த வருடம் பதிவாகியமை குறிப்பிடத் தக்கது. (ம)

ஈராக்கின் அயல் நாடான சிரியாவும் ஆயுததாரிகளின் பிடியில் இருந்தது. கடந்த வருடம் இறுதிப்பகுதியில் அது மீட்கப்பட்டது. ஏராளமான சிறுவர்கள் உயிரிழந்தனர். பலர் அவயங்களை இழந்தனர்.

நடுங்கியது துருக்கி ஒருவர் உயிரிழப்பு

இஸ்தான்புல், ஜூன் 15

துருக்கியின் கிரீக் தீவுகளில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட நில அதிர்வை அடுத்து ஒருவர் உயிரிழந்தார். மேலும் பலர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

துருக்கியின் மேற்கு பகுதியில் உள்ள கிரீக், லெஸ்போஸ், சியாஸ் மற்றும் ஏஜியன் உள்ளிட்ட பகுதிகளில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 6.3 அலகுகளாகப் பதிவானது. நில நடுக்கத்தால் அதிக பாதிப்புக்குள்ளான வரிசா மாவட்டத்தில் உள்ள பல வீடுகள் இடிந்து சேதமடைந்துள்ளன. இடிபாடுகளில் பலர் சிக்கி யிருக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது. ஒருவர் உயிரிழந்தார். பத்துப் பேர் காயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். மீட்புப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. (ம)

தமிழக சட்டசபையில் நேற்று அமளிதுமளி

சென்னை, ஜூன் 15

தமிழக சட்டசபை நேற்றுக் காலை கூடியது. எனினும் சிறிது நேரத்திலேயே பெரும் அமளிதுமளி ஏற்பட்டதை அடுத்து தி.மு. கழகத்தினர் வெளியேற்றப்பட்டனர்.

"தமிழக முதல்வர் எடப்பாடிக்கு ஆதரவு தெரிவிப்பதற்காக சென்னை கூவத்தூர் விடுதியில் பேரம் பேசப்பட்டது. என்பது தொடர்பான ஓர் காணொலி அண்மையில் வெளியானது. இந்தக் காணொலி தொடர்பில் விவாதிக்க வேண்டும்" என்று தி.மு. கழகத்தின் செயல் தலைவரும், தமிழக எதிர்கட்சித் தலைவருமான ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்தார். ஆனால் சபாநாயகர் தனபால் அனுமதி கொடுக்கவில்லை. தொடர்ந்து சபையை நடத்த தி.மு. கழகத்தினர் ஒத்துழைக்கவில்லை. இதனால் தி.மு. கழகத்தினர் வெளியேற்றப்பட்டனர் வீதியில் சாலை மறியலில் ஈடுபட்டதை அடுத்து அவர்கள் அனைவரும் உடனடியாகக் கைதுசெய்யப்பட்டனர். (ம)

நியூயோர்க் நகரில் அணுகுண்டு வீசும் திறன் வடகொரியாவிடம்

அந்நாட்டு ஊடகம் பரபரப்பு

பியாங்யாங், ஜூன் 15

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் அணுகுண்டு வீசித் தாக்குதல் நடத்தும் திறமை வடகொரியாவிடம்ஏராளமாகவேஉள்ளது என்று வடகொரியாவின் அரசு ஊடகமொன்றுசெய்திவெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கொரியத் தீபகற்பத்தில் ஏற்பட்டுள்ள போர்ப் பதற்றம் இன்னும் ஓய்ந்தபாடில்லை. இந்த நிலையில் வடகொரியா அரச ஊடகமொன்று தனது செய்திக் குறிப்பில், ட்ரம்ப் இந்த ஆண்டு தொடக்கத்தில், வட கொரியா என்னதான் அணு ஆயுதச் சோதனை நடத்தினாலும், அணு குண்டை அமெரிக்காவுக்கு எதிராகப் பயன்படுத்தாது என்று அலட்சியமாகத் தெரிவித்துள்ளார். ஆனால், வடகொரியாவிலிருந்து நியூயோர்க் நகரத்துக்கு அணு ஆயுதம்மூலம் தாக்குதல் நடத்துவது ஒன்றும் சாத்தியமில்லாத காரியம் இல்லை என்று அந்த ஊடகத்தின் செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

பங்களாதேஷ் நிலச்சரிவில் உயிரிழப்பு 130ஆக உயர்வு

பங்களாதேஷில் சமீபத்தில் பெய்த கனமழையால் பல்வேறு இடங்களில் ஏற்பட்ட நிலச்சரிவு மற்றும் வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 130 ஆக அதிகரித்தது. வங்கக்கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் காரணமாக வங்காள தேசத்தின் பல இடங்களில் நேற்றுமுன்தினம் முதல் கனமழை பெய்து வருகின்றது. இதனால், டாக்கா மற்றும் சிட்டகொங் நகரங்கள் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கின்றன. கனமழை காரணமாக ரங்கமாதி மற்றும் பந்தர்பான் ஆகிய மாவட்டங்களில் கடும் நிலச்சரிவு ஏற்பட்டது. ஏனைய பல இடங்களிலும் நிலச் சரிவுகள் ஏற்பட்டன என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இந்த நிலச்சரிவில் சிக்கி 53 பேர் உயிரிழந்தனர் என்று நேற்றுமுன்தினம் இரவு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. எனினும் மீட்புப் பணிகள் தொடர்ந்ததால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. மேலும் பல சடலங்கள் கிடைக்கப்பெற்றதை அடுத்து உயிரிழப்பு எண்ணிக்கை 130ஆக அதிகரித்தது. எனினும் மீட்புப் பணிகள் தொடர்ந்து வருகின்றன. மீட்கப்பட்டோரின் நிலமையும் கவலைக்கிடமாக உள்ளது. இதனால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று கருதப்படுகிறது. சில பன்னாட்டு ஊடகங்கள் 200 பேர் வரை உயிரிழந்திருக்கலாம் என்று செய்தி வெளியிட்டுள்ளன. (ம)

வளமான வாழ்விற்கு
சுபிருத்தி லொத்தர்
வேலைநாட்டு அலுவல்கள் அமைச்சு

ராசி அதிர்ஷ்டம்

உங்களை வெற்றியாளராக்கும் தனயோகம்

ලග්න වාසනාව

வடக்கு கிழக்கு மண்ணில் ராசி அதிர்ஷ்டம்



1 ஆம் பரிசு மோட்டார் வாகனம்

2272963 கே.குகதாசன்-யாழ்ப்பாணம்

2 ஆம் பரிசு 2 ஸ்கூட்டர்கள்

1793159 ஏ.ஆர்.எம்.நஸார்-அம்பாறை
6205883 கே.சோமன்-மட்டக்களப்பு

3 ஆம் பரிசு 3 தங்க ஆபரணங்கள்

6571269 என்.மகேந்திரன்-மன்னார்
5319302 டி.டி.சாந்தி-அம்பாறை
6774106 ஏ.சுப்பிரமணியம்-வவுனியா

4 ஆம் பரிசு 4 Apple i Phone

1859368 எஸ்.ஞானச்சந்திரன்-கிளிநொச்சி
9289985 எச்.ஏ.பி.யு.பி.நளிந்த-திருகோணமலை
5032596 கே.திலகவதி-யாழ்ப்பாணம்
5578186 என்.மகேந்திரன்-மன்னார்

5 ஆம் பரிசு 40 தங்க நாணயங்கள்

1962058	எஸ்.அழகையா-திருகோணமலை	6693226	எஸ்.சர்வேஸ்வரன்-அம்பாறை
8070765	எஸ்.சர்வேஸ்வரன்-அம்பாறை	8646813	எஸ்.ஞானச்சந்திரன்-கிளிநொச்சி
2756232	கே.திலகவதி-யாழ்ப்பாணம்	8866422	அ.லொ.ச.விற்பனை மேம்படுத்தல் வாகனம்-யாழ்ப்பாணம்
8154752	என். ருக்மாதவன்-மட்டக்களப்பு	5422153	கே.ஜீவகன்-யாழ்ப்பாணம்
6037314	கே.திலகவதி-யாழ்ப்பாணம்	2334870	பி.பிரதீபன்-மட்டக்களப்பு
3707809	அ.லொ.ச.விற்பனை மேம்படுத்தல் வாகனம்-யாழ்ப்பாணம்	6258414	ஏ.எல்.நளீம்-அம்பாறை
8384024	அ.லொ.ச.விற்பனை அலுவலகம்-யாழ்ப்பாணம்	2285879	டி.பி.வி.வீரசிங்க-திருகோணமலை
4835889	வி.முத்துக்குமார்-மட்டக்களப்பு	9446302	ஆர்.விஜயகுமார்-யாழ்ப்பாணம்
1538518	அ.லொ.ச.விற்பனை மேம்படுத்தல் வாகனம்-யாழ்ப்பாணம்	6710388	வி.நடராஜா-யாழ்ப்பாணம்
7474691	வி.முத்துக்குமார்-மட்டக்களப்பு	8890972	என்.மகேந்திரன்-மன்னார்
9242951	எஸ்.கிஷோகுமார்-யாழ்ப்பாணம்	6109165	வி.நடராஜா-யாழ்ப்பாணம்
1679804	அ.லொ.ச.விற்பனை மேம்படுத்தல் வாகனம்-யாழ்ப்பாணம்	4701684	எஸ்.சர்வேஸ்வரன்-அம்பாறை
4586739	வி.தேவராச-அம்பாறை	5253449	பி.பிரதீபன்-மட்டக்களப்பு
7499436	எஸ்.ஞானச்சந்திரன்-கிளிநொச்சி	1934205	எஸ்.ஞானச்சந்திரன்-கிளிநொச்சி
8845891	எஸ்.குமரகுரு-யாழ்ப்பாணம்	2967169	கே.ஜீவகன்-யாழ்ப்பாணம்
8355653	ஈ.ஏ.பி.உபாலி தர்மரட்ண-திருகோணமலை	1959882	டி.ரத்தீஷ்-யாழ்ப்பாணம்
8769958	அ.லொ.ச.விற்பனை அலுவலகம்-யாழ்ப்பாணம்	4673616	எஸ்.சர்வேஸ்வரன்-அம்பாறை
6905466	அ.லொ.ச.விற்பனை மேம்படுத்தல் வாகனம்-யாழ்ப்பாணம்	9488795	பி.பிரதீபன்-மட்டக்களப்பு
9170966	ஏ.சி.அலிபுள்ள-திருகோணமலை	8613395	கே.ஞானரத்தினம்-மட்டக்களப்பு
6715358	எஸ்.செல்வராஜா-அம்பாறை	7335313	எஸ்.குமரகுரு-யாழ்ப்பாணம்

வளமான வாழ்விற்கு
சுபிருத்தி லொத்தர்

உங்களை வெற்றியாளராக்கும் தனயோகம் ராசி அதிர்ஷ்டம்

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

மகிந்தவின் நீலிக்கண்ணீர்

மக்களது மனதில் சந்தேகங்களையும் அவநம்பிக்கையையும் விதைக்க முயலும் ஓர் அரசியல்வாதிக்கான அனைத்து தகுதியையும் தான் கொண்டிருப்பதை மகிந்த ராஜபக்ச மீண்டும் நிரூபித்துள்ளார்.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியின் சமீபத்தைய ஜி.எஸ்.பி. தொடர்பான அறிக்கை இதனையே புலப்படுத்தி நிற்கின்றது.

இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை வழங்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் சம்மதம் தெரிவித்து ஒரு வாரத்துக்கு மேல் கடந்துவிட்ட நிலையில், திடீரென உறக்கம் கலைந்து எழுந்தவர் போன்று முன்னாள் ஜனாதிபதி இந்த அறிக்கையை விடுத்துள்ளார்.

அறிக்கையின் முழு நோக்கமும் பொய்கள் மூலம் மக்களின் நம்பிக்கையைச் சிதைப்பதாக காணப்படுகின்றது. சில புள்ளிவிவரங்களை வைத்துக்கொண்டு முன்னாள் ஜனாதிபதி இந்த முயற்சியை மேற்கொண்டுள்ளார்.

ஜி.எஸ்.பி. வரிச்சலுகையைப் பெறுவதென்றால் பல நிபந்தனைகளுக்கு அடிபணியவேண்டும். நாட்டுக்குப் பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய அத்தகைய நிபந்தனைகளை நிறைவேற்றுவதைத் தவிர்ப்பதற்காகவே எனது அரசு வரிச்சலுகையை மீளப்பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவில்லை என்ற கருத்தையும் மகிந்த ராஜபக்ச வெளியிட்டுள்ளார்.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையைப் பெறுவதற்காக, நாடுகள், மனித உரிமைகள் தொடர்பான பல கடப்பாடுகளை நிறைவேற்றவேண்டும் என்பது உண்மை. அவை அந்தந்த தேசமக்களின் மனித உரிமைகளுக்கு மிக அவசியமானவை. உதாரணத்துக்கு தொழிலாளர் நலன், சிறுவர் நலன் சார்ந்த சட்டங்களைக் குறிப்பிடலாம்.

மனித உரிமை குறித்து அக்கறை கொண்டுள்ள தேசங்களுக்கு அவை ஒரு பிரச்சினையாகக் காணப்படுவதில்லை.

மாறாக, கறைபடிந்த கரங்களைக்கொண்ட மனித உரிமைகள் குறித்த சிறிதளவு பற்றுறுதியத்தானும் கொண்டிராத மகிந்த ராஜபக்ச போன்ற ஆட்சியாளர்களாலேயே அவற்றை ஏற்கமுடிவதில்லை.

மேலும் போருக்குப் பின்னைய அன்றைய சூழலில், இலங்கை அரசின் போர்க்குற்றங்கள் குறித்த தகவல்கள் வெளியாகிக்கொண்டிருந்த நேரத்தில், மகிந்த ராஜபக்ச அரசால் மீண்டும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையைப் பெறுவது என்பது நினைத்துகூட பார்க்கமுடியாத விடயமாகக் காணப்பட்டது

ஆனாலும் அந்த அரசு அதற்கான பல முயற்சிகளைத் திரைமறைவில் மேற்கொண்டிருந்தது. அதில் தோற்றது என்பது உண்மை. முன்னாள் ஜனாதிபதி தனது சமீபத்தைய அறிக்கையில் இந்த உண்மைகளை மறுத்துள்ளார்.

தனது ஆட்சிக்காலத்தில் இடம்பெற்றதவறுகளே, மனித உரிமை மீறல்களே ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை பறிபோவதற்கும், பல ஆடைத்தொழிற்சாலைகள் மூடப்படுவதற்கும், இலங்கை பொருளாதாரரீதியில் பின்னடைவை எதிர்கொள்வதற்கும் காரணமாகின என்ற உண்மையை அவர் மூடிமறைக்க முயன்றுள்ளார். மொத்தத்தில் இலங்கை மக்கள் மீது அதிக அக்கறை கொண்டவர் போன்று அவர் நீலிக்கண்ணீர் வடித்துள்ளார்.

நாட்டில் நல்லிணக்கம் உருவாக்கப்படல் இன்றைய காலத்தின் அவசியத் தேவை

சிங்கள மூலம்- காசியப்ப பண்டார
தமிழில் வீ.எஸ்.ரி

ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் பயங்கரவாதச் செயற்பாடுகள் இன்று உலகளாவிய ரீதியில் பரவியுள்ளன. அந்த அமைப்பின் செயற்பாடுகள் குறித்த தகவல்கள் பெரும்பாலும் நாளாந்தம் வெளியாகி வருகின்றன. பயங்கரவாதம் பல தரப்பட்ட பெயர்களில் செயற்பட்டு வருகின்றது. அது பயங்கரவாதத்தின் இயற்கையான சுபாவம். இனவாதம் என்ற பெயரில் அல்லது மதவாதம் என்ற பெயரில் அதுவுமன்றேல், உரிமைக் கோரிக்கைகள் என்ற பெயரில் இல்லையேல், இனரீதியாக ஒடுக்கப்படல் என்பதன் பெயரில் அது முன்னெடுக்கப்படக் கூடும். அது எவ்வாறான போதிலும், எதிர்ப்புச் செயற்பாடுகள் என்ற விதத்தில் தோற்றம் பெறும் அது, பின்னர் ஒழுங்கமைக்கப்பட்டதொரு அமைப்பு என்ற ரீதியில் ஆயுதம் தாங்கிப் போராடும் பயங்கரவாத குழுவாகி மாற்றம் பெறுகிறது.

ஆனால் பயங்கரவாதத்தின் மறுபக்கத்தில் சமாதானம் அல்லது நல்லிணக்கம் என்ற விடயம் அமைந்து காணப்படுகிறது. சமாதானம் என்ற வார்த்தை பழசாகிப்போய், நல்லிணக்கம் என்ற வார்த்தை அந்த இடத்தைப் பிடித்துள்ளது. ஆனால் நல்லிணக்கம் எனக் குறிப்பிடுவதன் மூலம் அது இரு அர்த்தங்களைப் பிரதிபலித்து நிற்கிறது. ஒரு நாட்டிலோ அல்லது நாடுகள் சிலவற்றுக்கு மத்தியிலோ நிலவிய போர்ச்சூழல் முடிவடைந்து போனதன் பின்னரே இந்த நல்லிணக்க முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டாக வேண்டும். இலங்கையைப் பொறுத்தவரை இது மிக அண்மைக் கால வரலாற்றுடன் பொருந்துகிறது.

உலக நாடுகளை அச்சுறுத்தும் பயங்கரவாதம்

இன்றைய காலகட்டத்தில் பயங்கரவாதம் உலகில் மீண்டும் தலைதூக்கி வருவதைக் காண்கிறோம். இரண்டாம் உலகப் போர்க் காலத்தின் பின்னர் அண்மைக்காலம் வரை நாம் கேள்விப்படாத, பிரிட்டனின் மீதான ஒரு சில பயங்கரவாதத் தாக்குதல் சம்பவங்கள் அண்மைக்காலமாக இடம்பெற்றுள்ளன. பிரிட்டனின் இங்கிலாந்தின் பாதுகாப்புத் தரப்பினர்களது முறைப்படியான பாதுகாப்பு ஏற்பாடுகள் காரணமாக அண்மைய தாக்குதல்களின் சேதம் குறைக்கப்பட்டிருப்பினும், அவை பயங்கரவாதச் செயற்பாடுகளின் ஒரு அங்கமே.

அதேபோன்று மிக அண்மையில் கேள்விப்பட நேர்ந்த மற்றொரு முக்கிய விடயம் ஈரான் நாட்டு நாடாளுமன்றக் கட்டடத்துக்கு உள்ளே மேற்கொள்ளப்பட்ட தாக்குதலாகும். குறித்த தாக்குதல் ஈரானின் வேறெந்தப் பகுதியிலாவது இடம்பெற்றிருந்தால் அது முக்கிய சம்பவமாகக் கருதப்பட்டிருக்கமாட்டாது. ஆனால் எந்தவொரு நாட்டிலும், குறித்த நாட்டின் நாடாளுமன்றம் கடும் பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் நிர்வகிக்கப்படுமொன்றாகும். அந்த விதம் ஈரான் நாடாளுமன்ற வளாகத்து கடும் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் புறம்தள்ளிவிட்டு ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகள் ஈரான் நாடாளுமன்றத்தின் மீது தாக்குதல் மேற்கொண்டதன் மூலம், அந்த அமைப்பினரது செயற்பாட்டுத் திறன் எந்த அளவுக்கு சக்தி மிக்கதாக இருந்திருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது.

பயங்கரவாதத்தை ஒழிக்க ஒன்றிணையும் உலக நாடுகள்

பயங்கரவாதத்தை உலகிலிருந்து ஒழித்துவிடும் செயற்பாடுக்குத் தேவையான உலக நாடுகளின் தலைவர்களது ஒன்றிணைவைக் கடந்த காலத்தில் காணமுடிந்தது. ஆனால் இவற்றையெல்லாம் தாண்டி பயங்கரவாதத் தரப்பினர்களது செயற்பாடுகள் எந்த அளவுக்குத் தீவிரம் மிக்கவையாக அமைந்தன என்பதையும் கடந்த காலத்தில் எம்மால் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிந்தது. கடந்த மூன்று தசாப்த காலமாக இலங்கையும் பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டது என்பது தெளிவாகத் தெரிந்ததொன்று. அந்த வகையில் குறித்த அந்தக் காலகட்டத்தில் அங்கங்கெல்லாம் குண்டு வெடிப்புக்கள் குறித்த செய்திகள் நாளாந்தம் வெளிவந்ததுடன், தனிப்பட்ட பொது மக்களது சாவுகள் குறித்த விவரங்கள் வெளிவந்த வண்ணமிருந்த கால கட்டம் அது. இதனால் சாதாரண பொது மக்கள் குழப்பமும் அச்சமும் கொள்ள நேரிட்டது. பல ஆண்டுகள் இடைவெளியின் பின்னர் தற்போது நாட்டில் பொதுமக்கள் வாழ்க்கையில் இயல்பு நிலை நிலவுகிறது. அரசியல் சுதந்திரம் மற்றும் சமூக இருப்பு என்பவை கட்டியெழுப்பப்பட்டு வருகின்றன. அத்தகைய நிலையொன்று இலங்கையில் உருவாகியுள்ள நிலையில், ஈரான் நாடாளுமன்றத்தில் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

குறித்த தாக்குதலில் 12 பேர் உயிரிழந்துள்ளனர். அரசியல் மற்றும் சமூக பொருளாதார ரீதியில் நன்னிலையில் உள்ள ஈரானின் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள இத்தகைய பயங்கரவாதத் தாக்குதல் வெளியிடும் யதார்த்தச் செய்தி, உலகின் எந்தவொரு நாட்டின் மீதும் இத்தகைய தாக்குதல் மேற்கொள்ளப்படலாம் என்பதை வெளிப்படுத்துமொன்றாக அமைகிறது. இங்கிலாந்தில் அண்மைக் காலமாக இடம்பெற்ற இத்தகைய பயங்கரவாதத் தாக்குதல்கள் காரணமாக இங்கிலாந்து நாட்டின் பாதுகாப்

புத் தொடர்பாக தேசிய சிக்கலுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது.

வெளிநாடுகள் பல எதிர்நோக்கும் சிக்கல்கள் சொற்பமே

இத்தகைய நாடுகளது பாதுகாப்புத் தொடர்பாக விமர்சனங்கள் மேற் கொள்ள வேண்டி இருக்கவில்லை. ஏனெனில், இத்தகைய நாடுகள் ஏனைய பல துறைகளில் எதிர்நோக் கும் சிக்கல்கள் மிகமிகக் குறைவே. எனவே அத்தகைய நாடுகள் தமது நாடுகளது பாதுகாப்பைப் பலப்படுத்து வது தொடர்பாக முக்கிய கவனம் செலுத்திச் செயற்படும் வாய்ப்பைக் கொண்டுள்ளன. ஆனாலும்கூட பயங்கரவாதத் தரப்புக்களால் குறிப் பிட்ட அந்த நாடுகள் மீதே தாக்குதல் கள் தொடுக்கப்படுகின்றன.

இத்தகைய நிலை குறித்த யதார்த் தத்தை எமது நாட்டின் அரசியல் தலை வர்கள் புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். குறிப்பாக அரசுத் தலைவரும், தலைமை அமைச்ச ரும் இது விடயத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

அந்த வகையில் அரசியல் தரப்புக்கள் தற்போது அரசியல் ரீதியிலான நல்லி ணக்கம் குறித்து அக்கறை செலுத்தத் தொடங்கியுள்ளன. அது இன்றைய காலத்தின் தேவையொன்றாகும். மிக அத்தியாவசியமானதும் கூட. போர் முடிவுக்குப் பின்னர் நாடொன் றுக்கு அவசிய தேவையாவது அதுவே. இதன் மூலம் சமூக இணக்கப்பாட்டைக் கட்டியெழுப்ப இயலும். அத்தகைய சமூகங்கள் மத்தியிலான இணக்கப் பாடு உருவாக்கப்படுமானால், நாட் டின் பிரச்சினைகள் பலவற்றுக்குத் தீர்வு ஏற்படும். அவ்விதம் சமூக இணக்கப்பாடு உருவாக்கப்பட வேண் டுமானால், நாட்டின் ஒருமைப்பாடு அவ சியம். அத்தகைய ஒருமைப்பாட்டை ஏற்படுத்த இடையூறாக அமை யும் இரு காரணங்கள் உள்ளன.

நாட்டின் இனங்கள் மத்தியில் ஒரு மைப்பாடு குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பழகவேண்டியதுஅவசி யமாகிறது. இலங்கை அரசு, அத்த கைய எதிர்பார்ப்புடன் செயற்படுமா னால் அத்தகைய தேசிய ஒருமைப் பாட்டை உருவாக்கிட இயலும். நாட் டில் நல்லிணக்கப் போக்கு உருவாகு மானால், அதன் மூலம் இனவாத, மதவாத நிலைப்பாடுகளைப் புறமொ துக்கி இணக்கப்பாட்டுடன் நாட்டு மக்களை முன்னேற்றப் பாதையில் இட்டுச்செல்ல அரசுக்கு வாய்ப்பு அமை யும். சகலருக்கும் சம நீதியுடனான சட்ட ஒழுங்கை அரசு நடைமுறைப்படுத் துமானால் சகல விடயங்களிலும் சமத் துவநிலையை உருவாக்கிட இயலும்.

ஞானசார தேரரைப் பொலிஸார் கைது செய்யாதமை விவாதத்துக்கு உரியதென்றே

அரசு பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேர ரைக் கைது செய்ய நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. ஆனால் இதுவரை பொலிஸாரால் அவரைக் கைது செய்ய முடியவில்லை. அது விவாதத்துக்குரிய ஒன்றாகும். சட்டம் சகலருக்கும் பொதுவான ஒன்று என் பதை நிலைநிறுத்தும் வகையில் பொலிஸார் செயற்பட வேண்டியது அவசியம். பொதுபலசேன அமைப் பின் செயற்பாடுகள் காரணமாக முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பின ரொருவரும், மாகாணசபை உறுப்பி னரொருவரும் இனவாதக் கருத்துக் களை முஸ்லீம் மக்கள் மத்தியில் வெளிப்படுத்தி அவர்களைத் தூண்டி வருகின்றனர். தமது இனத்துக்கு எதி ராக மேற்கொள்ளப்படும் இனவாதச் செயற்பாடுகளை எதிர்த்து முஸ்லீம் மக்கள் ஆயுதத்தைக் கையிலேந்த முயன்றால் பெரும் இனமுறுகல்கள் உருவாகுமல்லவா?

அதேபோன்று தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களில் சிலர் அண்மைக்காலமாக இனவாதக் கடும்கோட்பாட்டுக் கருத்துக்களைத் தமிழ் மக்கள் மத்தியில் வெளிப்ப டுத்தி வருகின்றனர்.

இதன் மூலம் தெளிவாகப் புரிவது என்னவெனில், கடந்த மூன்று தசாப்த காலமாக பயங்கரவாத போர்ச்சூழலின் சாபத்தால் சிரமம் உற்ற இலங்கையினுள் நீறு பூத்த நெருப்பாகவிருந்து வந்த இனவாதத் தீ, தற்போது மீண்டும் தலைதூக்க முயல்கிறதா? என்ற சந்தேகம் எழ ஆரம்பித்துள்ளது. அத்தகைய தொரு நிலையில் நாட்டில் புரிந்துணர்வை யும், நல்லெண்ணத்தையும் இனங் கள் மத்தியில் கட்டியெழுப்ப இயலாத தொரு சிரமம் ஏற்படக்கூடும்.

எந்தவொரு நாட்டிலும் சிறுபான்மை இனங்கள் தமது உரிமைகளுக்காக திடீரென தமது நிலைப்பாட்டை மாற் றிக்கொள்வது சகஜமானதே. அதே வேளை அது பெரும்பான்மை இனத் தவர்கள் மீதான மோதலாகவோ, அச்சுறுத்தலாகவோ கணிக்கப்பட வும் வாய்ப்புண்டு. அது இயற்கையா னதொன்றே.

அத்தகையதொரு நிலையில், மீண் டும் பயங்கரவாதச் செயற்பாடுகள் பக்கம் கவனம் செலுத்துவதாகவோ, நாட்டின் உள்ளக ரீதியில் மோதல் களை ஆரம்பிப்பதாகவோ அமையக் கூடும்.

அத்தகையதொரு நிலை உருவா காது தடுக்க வேண்டுமானால், இனங் கள் மத்தியில் நல்லிணக்கத்தை உருவாக்கி நல்லாட்சித் தத்துவமான சட்டத்தின் ஆதிபத்தியம் மற்றும் சட் டத்தின் சமானத்துவம் என்பவற்றின் மூலம் அரசு தனது பொறுப்பை உரிய வகையில் நிறைவேற்ற வேண்டும். அந்த வகையில் ஈரான் மற்றும் இங் கிலாந்து நாடுகளின் அண்மைக்கால நிகழ்வுகளிலிருந்து பாடம்கற்றுக் கொள்ள இந்த நாட்டின் ஆட்சியாளர் கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

> நாட்டின் இனங்கள் மத்தியில் ஒருமைப்பாடு குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப் பழக வேண்டியது அவசியமாகிறது. இலங்கை அரசு, அத்தகைய எதிர்பார்ப்புடன் செயற்படு மானால் அத்தகைய தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்கிட இயலும். நாட்டில் நல்லிணக்கப் போக்கு உருவாகுமானால், அதன் மூலம் இனவாத, மதவாத நிலைப்பாடுகளைப் புற மொதுக்கி இணக்கப்பாட்டுடன் நாட்டு ம க்களை முன்னேற்றப் பாதையில் இட்டுச்செல்ல அரசுக்கு வாய்ப்பு அமையும். சகலருக்கும் சம நீதியுடனான சட்ட ஒழுங்கை அரசு நடைமுறைப்படுத்துமானால் சகல விடயங்களிலும் சமத்துவநிலையை உருவாக்கிட இயலும்.



ஆசிரியருக்கான கடிதம்

யாழ். பொதுசன நூலகமும் அதன் வாசகர் வட்டமும்

யாழ்.பொதுசன நூலகத்தில் வாசகர் தொகை மிகவும் குறைவு எனக் கவலைதரும் செய்தி ஒன்று இந்தவாரப் பத்திரிகைகளில் வெளியாகியிருந்தது. இதற்குக் காரணங்கள் பல இருப்பினும், முக்கியமானதொரு காரணம் அங்கு நூல்கள் ஒழுங்காகப் பேணப்படாமையாகும். இரவல், உசாத்துணைப் பகுதிகளில் என்றாலும் சரி, முக்கியமாக விசேட சேர்க்கைப் பகுதியில் என்றாலும்சரி தேவையான ஒருநூலைப் பெற்று விடலாம் என எவரும் கூறிவிடமுடியாது. இது ஒரு முக்கிய காரணம். இந்த விடயங்களில் "வாசகர் வட்டம்" நூலக நிர்வாகத்துக்கு உதவி செய்யலாம். இருபகுதியினரும் இணைந்து செயற்பட வேண்டும். தவிர நூலக வாசகர் வட்டம் என்பது நூலக வளர்ச்சிக்கும், வாசகர்களுக்கான உதவிக்கும் வாசிப்புப் பழக்கத்தைப் பரவலாக்குவதற்கும் முன்நின்று செயற்பட வேண்டும்.

ஆனால் துரதிஷ்டவசமாக யாழ். பொதுசன நூல்நிலைய வாசகர் வட்டத்தினரோ படக்காட்சிகளிலேயே அக்கறை காட்டி வருவது வேடிக்கையான விசயம்!

கடந்த வாரம் நூலக எரிப்பு நினைவுதினம் வந்தது. அதை முன்னின்று நடத்தியிருக்க வேண்டியவர்கள் வாசகர் வட்டத்தினரே.

பதிலாக அந்த நினைவு நிகழ்வை ஏற்பாடு செய்தோர் அந்த குறிப்பிட்ட நிகழ்வுக்கு முன்னிலை வகிக்குமாறு அங்கு வந்திருந்த வாசகர் வட்டத் தலைவராகச் செயற்படுபவரை அணுகியதாகக் கூறப்பட்டது. இத்தகைய பின்னணியில் நூலக வாசகர் வட்டம் என்பது படக் காட்சியை ஏற்பாடு செய்வதற்காக மட்டுமே செயற்படுவதாக இல்லாது, நூலகத்தின் வளர்ச்சிக்கும் வாசகர்களுக்கு உதவும் விதத்திலும் செயற்படமுனைதல் பயன்தரவல்லது.

சி.சிவதரன்
நல்லூர்

இலங்கை மருத்துவ சாதனத்துறை வர்த்தக சம்மேளனத்தின் புதிய குழுமம் நியமனம்

இலங்கை மருத்துவ சாதனத் துறை வர்த்தக சம்மேளனத் தின் 2017 ஆண்டுக்கான புதிய குழுமம் அண்மையில் நியமிக் கப்பட்டுள்ளதான தகவல் தெரி விக்கப்படுகின்றது.

இதன்படி இலங்கையின் மருத் துவ சாதனத்துறையை பிரதிநி தித்துவப்படுத்தும் 47 உறுப்பி னர்களைக் கொண்டுள்ள இக் குழுமமானது கொள்கைமுயற் சிகள் மற்றும் தொழிற்றுறை பங்குதாரார்கள், அரச சுகாதார அதிகாரிகள் மற்றும் பொது மக் களிடையேயான பேச்சு வார்த் தைகளிற்கு பொறுப்பாக செயற் படவுள்ளது.

இந்தப் புதிய குழுமத்தின் தலை வராக டிலிகென்ஸ் ஹெல்த் கெயார் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரான சமன் ஹ_லான் கமுவ செயற்படுவதுடன், டில்ரஞ்ஜன் ஜேக்கப் மற்றும் ஏ. ஆர். ஜேம்ஸ் ஆகியோர் உப தலை வர்களாகவும் செயற்படவுள்ள னர். இந்திக்க ராஜகருணா, மோகன் ராஜ், சமந்த செனவி ரத்ன, எரந்தஜித் ரணசிங்க, விஜித் மாதம்பே, மிலிந்த மல் லிகாராச்சி, டிலக் பெர்ணாந்து, டி. சயந்தன், நிரஞ்சன் செல்வ துரை, சிரான் டி மெல், சமன் பீரிஸ் மற்றும் சஞ்ஜீவ சமர சிங்க ஆகியோர் நிர்வாகக்குழு வில் உள்வாங்கப்பட்டுள்ளதா கக் கூறப்படுகிறது.

தவிர, இலங்கையில் மருத்துவ சாதனத்துறையை முன்னேற்ற வும், சுகாதார சேவைகள் மற் றும் பொது மக்களிற்கு விழிப்பு ணர்வூட்டவுமான விரிவான திட்டத்தின் ஒரு பகுதியாக, இலங்கை மருத்துவ சாதனத் துறை வர்த்தக சம்மேளனமா னது நிதி அமைச்சுடன் இணைந்து கொண்டு "தேசிய கொள்வனவு வழிகாட்டிகள் மற்றும் மருத்துவ சாதனத்து றையில் அதனது தாக்கங்கள்" எனும் தலைப்பிலான கருத்த ரங்கு நிகழ்வொன்றை இம்மா தம் நடத்தத் தீர்மானித்துள்ள தாகத் தெரியப்படுத்தப்பட்டுட் டுள்ளது.

இலங்கை மருத்துவ சாதனத் துறை வர்த்தக சம்மேளனமா னது (SLCMDI) 2015 ஆம் ஆண்டு நிறுவப்பட்டதுடன், மருத்துவசாதனங்கள் மற்றும் கருவிகள் என்பவற்றுக்கான மிக வேகமாக வளர்ந்து வரும் புதுமையான துறையை குறிப் ாக.

திநிதிப்படுத்துவதுடன் தங்க

> இந்தப் புதிய குழுமத் தின் தலைவராக டிலிகென்ஸ் ஹெல்த் கெயார் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரான சமன் ஹ_லான்கமுவ செயற்படுவதுடன், டில்ரஞ்ஜன் ஜேக்கப் மற்றும் ஏ. ஆர். ஜேம்ஸ் ஆகியோர் உப தலை வர்களாகவும் செயற்படவுள்ளனர்.

ளது பிரச்சினை களை முன் வைக்கும்நோக்கத்துடனேயே ஆரம்பித்துவைக்கப்பட்டது. தரம் வாய்ந்த மருத்துவக் கரு விகளை ஊக்குவிப்பது, சுகாதா ரத்துறையுடன் தொடர்புபட்ட சகல பங்குதாரர்களையும் இணைப்பது,

உறுப்பினர்களிடையே உறவு களை மேம்படுத்தல் மற்றும் ஊக்குவித்தல். உறுப்பினர்கள் மத்தியில் ஏற்படும் பிரச்சினை களுக்குத் தீர்வுகாண்பதில் மத் தியஸ்தராகச் செயற்படுதல், மருத்துவக்கருவிகளின் ஊக்கு விப்புமற்றும்விற்பனைக்கான ஒழுக்க நெறிமுறை வழிகாட் டல்களை அமைத்தல், கருவிக ளின் உள்நாட்டுத் தயாரிப்புக் களை ஊக்குவித்தல் மற்றும் மருத்துவசாதனங்கள் மற்றும் ஒப்பனைப்பொருள்களின் விதி முறைகளை முன்னிலைப்ப டுத்துவதில் தொழிற்றுறை மற் றும் அரச சுகாதார அதிகாரிகளி டையேமத்தியஸ்தராகச்செயற் படுதல் போன்றன இவர்களின் முக்கிய நோக்கங்களாக காணப்படுகின்றமைநோக்கத் தக்கது.

மேலும் இச்சம்மேளனமானது சுகாதார அமைச்சு, அரசமருந் துக் கூட்டுத்தாபனம் மற்றும் சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகபிரிவுமற்றும் உயிர் மருத்துவப் பொறியியல் பிரிவு என்பனவற்றுடன் இணைந்து மருத்துவ சாதனங்களிற்கான அர்ப்பணிப்புடனான ஒப்பந்த வழிகாட்டல்களை அறிமுகப்ப டுத்தும்பொருட்டுசெயற்படுவது டன், கோப்புக்களை கணினி மூலமாக சமர்ப்பித்தலை அறி முகப்படுத்தும்பொருட்டுதேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையத்துடனும்இணைந்து செயற்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

நடப்பாண்டில் அதிகளவு இலாபத்தைப் பதிவுசெய்தது பி.பி நிறுவனம்

மாற்றுச் செலவு நடவடிக்கை மீது 1.4 பில்லியன் இலாபம் பதிவாகியுள்ளது



எண்ணெய் விலைகளின் அண் மைய அதிகரிப்பானது நடப்பாண் டின் முதல் மூன்று மாத காலப்பகுதி யிலும் பெற்றோலிய தொழில் துறை நிறுவனமான பி.பி (BP) இற்கு அதிகளவிலான இலாபத்தை ப்பெற்றுக்கொடுத்துள்ளதாகத் தெரி விக்கப்படுகின்றது.

குறிப்பாக மாற்றுச் செலவு நடவ டிக்கை மீது 1.4 பில்லியன் லாபம் கிடைக்கப்பெற்றுள்ளதாகக்கூறப்ப டுகின்றது. கடந்த 2015 ஆம் ஆண் டுடன் ஒப்பிட்டு நோக்குகையில் 2017 ஆம் ஆண்டு முதல் மூன்று மாதங்களிலும் எண்ணெய்விலை நிர்ணயமானது 35 சதவீத அதிக ரிப்பைகாட்டியுள்ளதுடன் பெற்றோ லிய தொழில்துறை நிறுவ னத் திற்குஎண்ணெய்மற்றும்எரிவாயு உற்பத்தியின் வருமான உள்ளீடு கள் மீதான அதிகரித்த பதிவை வெளிக்காட்டியுள்ளது.

இது குறித்து கருத்துரைத்துள்ள நிறுவனத்தின் தலைமை நிர்வாகி பொப்டட்லி, "இந்தஆண்டுமிகவும் சிறப்பான ஆண்டாக ஆரம்பமாகி யுள்ளது. எங்களுடைய திட்டங்க ளுக்கு ஏற்ப ஒழுங்குபடுத்தப்பட்ட விநியோகங்க ளிலேயே பி.பி நிறு வனம் கவனம் செலுத்துகின்றது. நடப்பாண்டின் முதல்காலாண்டில் உள்ளீடான வருமானமும் பணப் புழக்கமும் வலுவானதாக உள் ளது" என்றார்.

கேள்விஅறிவித்தல்

குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம்-2017

மாந்தை மேற்கு பிரதேச சபை

வேலைவிவரம்	ஒப்பந்த இலக்கங்கள்
சின்னவலயன்கட்டு - முள்ளிக்குளம் உள்ளக வீதி திருத்தம்	NP/MN/MWPS/PSDG/2017/W/02
அடம்பன்தாழ்வு – பாலையடிப்புதுக்குளம் உள்ளக வீதி திருத்தம்	NP/MN/MWPS/PSDG/2017/W/03
உள்ளகவீதி புனரமைத்தல் - ஆட்காட்டிவெளி	NP/MN/MWPS/PSDG/2017/W/04
சின்னபண்டிவிரிச்சான் வயல்வீதி புனரமைத்தல்	NP/MN/MWPS/PSDG/2017/W/05

01. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசினது மாகாண சபை நிதியின் ஒருபகுதி இக்குறிப்பிட்ட திட்டத் திற்கு பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. தலைவர், பெறுகைக்குழு, மாந்தை மேற்கு பிரதேசசபை, அடம்பன். மன்னார். வடமாகாணம். தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.

03. வடமாகாணத்தில் நிர்வாக எல்லையில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்ததாரருக்கு மட்டுமே வரையறுக் கப்பட்டுள்ளது.

04. கேள்வி பெறதகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி அமைப்பு, கட்டட அமைப்புக்கான இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், மாந்தை மேற்கு பிரதேச சபை, அடம்பன். மன்னார். (தொலைபேசி: 023-2051853/ 023-2051854) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாள்களில் காலை 09.00 மணி முதல் மாலை 14.00 மணிவரை 06.07.2017 வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிட லாம்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் செயலாளர் மாந்தை மேற்கு பிரதேச சபை, அடம்பன், மன்னார். எனும் இடத்திலிருந்து 15.06.2017 ஆம் திகதியிலிருந்து 06.07.2017 வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2,000/-செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், பெறுகைக்குழு மாந்தை மேற்கு பிரதேச சபை, அடம்பன், மன்னார், எனும் முகவரிக்கு 06.07.2017 ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் பிரதி நிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித்திகதியிலிருந்து 63 (அறுபத்து மூன்று நாள்கள் 07.09.2017) வரையும் செல்லுபடியாகும்.

10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

கேள்வி எண்	வேலை விவரம்	மதிப்பீட்டு தொகை (ரூ) மில்லியன்	ஒப்பந்த காலம்	வேண்டப்படும் தரம்	வேண்டப்படும் கேள்விப் பிணை	
					பிணை வைப்பு	செல்லுபடியாகும் காலம்
NP/MN/MWPS/PSDG/2017/W/02	சின்னவலயன்கட்டு-முள்ளிக்குளம் உள்ளக வீதி திருத்தம்	1.64 Mn	03 மாதங்கள்	C8	17,000/-	05 ஒக்டோபர் 2017
NP/MN/MWPS/PSDG/2017/W/03	அடம்பன்தாழ்வு – பாலையடிப் புதுக்குளம் வீதி திருத்தியமைத்தல்	1.97 Mn	03 மாதங்கள்	C8	20,000/-	05 ஒக்டோபர் 2017
NP/MN/MWPS/PSDG/2017/W/04	உள்ளகவீதி புனரமைத்தல் - ஆட்காட்டிவெளி	1.64 Mn	03 மாதங்கள்	C8	17,000/-	05 ஒக்டோபர் 2017
NP/MN/MWPS/PSDG/2017/W/05	சின்னபண்டி விரிச்சான் வயல்வீதி புனரமைத்தல்	1.1 Mn	03 மாதங்கள்	C8	14,000/-	05 ஒக்டோபர் 2017

11. கேள்வியாளர்களுக்கான முன் கலந்துரையாடல் 29.06.2017 ஆம் திகதி (வியாழக்கிழமை) மாலை 14.30 மணிக்கு மாந்தை மேற்கு பிரதேசசபை பிரதான அலுவலகத்தில் நடைபெறும். இக்கலந்துரை யாடலில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளலாம்.

தலைவர்
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு
மாந்தை மேற்கு பிரதேச சபை, அடம்பன்,
வடக்கு மாகாணம்,
14.06.2017

யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை
அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தான மஹோற்சவ பெருவிழா சிறப்பிதழ்-2017

ஆசிச் செய்தி

வண்ணார்பண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் (கொடியேற்றம்) நடைபெறுகின்றதை யிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். மேலும் அன்னையின் 25 தினங்களும் உற்சவம் சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல வீரமாகாளி அம்பாளை பாதம் பணிந்து வேண்டுகின்றேன்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார்
ஆதீன குருமுதல்வர்- நல்லை ஆதீனம்.

குருக்களின் ஆசிச்செய்தி

வரலாற்றுப் புகழ் மிக்க வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்பாளின் பெருந்திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. எமது நாடும் எமது மண்ணும் வளம் பெற இந் நிகழ்வு கட்டியம் கூறட்டும்.

இப்பெருந்திருவிழாவை இவ்வாலய சிவாச்சாரியர்களி லொருவரான சிவஸ்ரீ நா. சிவதர்சக் குருக்கள் நடத்தி வைப்பது எமக்குப் பெருமகிழ்சியை ஏற்படுத்துகிறது இவர் இவ்வாலயத்தில் முதற் தடவையாக இந் நிகழ்சியை நடத்த அம்பிகையின் திருவருளும் கிடைக்கப்பெற் றுள்ளது. இப்பெருந்திருவிழா எம் பெருமாட்டியின் திருவருளால் சகல வித மாங்கலப் பொழிவுகளுடன் நிறைவேற எமது நல்லாசிகளை அம்பிகையைத் தியானித்துத் தெரிவிக்கின்றோம்

மூத்த சிவாச்சாரியார். சிவஸ்ரீ சி. செல்வராஜா குருக்கள்
ஆலய தர்மகத்தாவும்

வரலாற்றுப் புகழ் மிக்க மேற்படி ஆலயம்

1470 ஆம் ஆண்டளவில் நல்லூரை அழகுபடுத்திய பரராசசேகரன் என்ற மன்னனால் நாற் திசைகளிலும் நகர்காவலுக்கு அமைத்த கோயிலில் மேற்கு திசையில் அமைக்கப்பட்ட கோயிலே வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயில் பின்பு சங்கிலி மன்னனால் பூசிக்கப்பட்டு வந்த தென்பது வரலாறு கூறும் உண்மைகள்.

இவ்வாலயத்தின் பரம்பரையாக பூசை உரிமை கொண்ட வழித்தோன்றல் களில் சிவஸ்ரீ நா.சிவதர்சக்குருக்கள்-ஒருவராகவும் ஆலய பிரதம குருக்களில் ஒருவராகவும் 2017 ஆம் ஆண்டு வருடாந்த மஹோற்சவத்தில் உற்சவ குருக்களாகவும் அம்பாளுக்கு முதன்முதலாக கொடியேற்றி ஊழியம் செய்ய அம்பாள் அருள்பாலித்துள்ளார். எனவே அம்பாள் அருளோடு ஆலய மஹோற்சவத்தை திறம்பட நடாத்திட வாழ்த்தி நிற்கும்.

தொண்டர் சபையினர்
வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலயம்.

மஹோற்சவ பிரதம குருவின் ஆசிச் செய்தி

அண்ட சராசரங்களின் நாயகியாகவும் வேண்டுவோர்க்கு வேண்டுவன வரமாக அளிக்கும் வரலாற்று புகழ் பெற்றதும் சங்கிலிய மன்னன் ஆதரித்த ஆலயமுமான வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலயத்தின் இந்த வருட மஹோற்சவத்தில் இவ்வாலய பிரதம குருவாக கடமையாற்றிய இரத்தினக்குருக்கள் நாகராசா ஐயர் மகனாக பிறந்து உமக்கே ஆலய தொண்டையும் செய்து இவ் வருடம் மஹோற்ச வத்தில் கொடியேற்ற அருள் பாலித்த அன்னையே உன்பாத கமலம் போற்றி போற்றி.

மஹோற்சவம் என்கின்ற மாபெரும் ஆலயத் திருவிழா படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய ஐந்தொழில்களையும் குறித்து நிற்க அதிலும் இன்று படைத்தல் திருவிழாவாகிய கொடியேற்ற திருவிழாவினை அம்பாளின் அடியார்கள் அனைவரும் கண்டுகளித்து தரிசித்து அருள்பெற வீரமாகாளி அம்பாளை உளமார வேண்டி அவளது அருள் கிடைக்க ஆசி கூறுவதில் பெரு மகிழ் வடைகிறேன்.

மஹோற்சவ பிரதம குரு,
தேவிசாதகப்பிரியன்; சிவஸ்ரீ நா.சிவதர்சக்குருக்கள்
மற்றும் சகோதரனாகிய சிவஸ்ரீ நா.ஹரிதர்ச ஐயர்.

ஆசிச்செய்தி

தாயன்புக்கு ஈடாக உலகில் எந்த சக்தியும் இல்லை. அத்தகைய அன்புப் பொக்கிஷ மாக அகிலமெலாம் பரவி நிற்கும் சக்தியை , துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதி, அபிராமி, காளி எனப்பல ரூபங்களில் தொன்றுதொட்டு வழிபாடு செய்து வருகின் றோம். அந்த வகையில் நல்லூரில் வீரமாகாளியாக சக்தியை வழிபட்டு வருகின்றோம். இவ்வாலயம் அந்நாளில் யாழ்ப்பாணத்தை ஆண்ட அரசர்களால் உருவாக்கப்பட்டது.

அந்த அன்னையின் ஆலயத்தில் இன்று (16.06.2017) வியாழக்கிழமை காலை கொடியேற்றத்துடன் மஹோற்சவம் ஆரம்பமாகின்றது. மஹோற்சவமானது இறைவ னின் பஞ்ச கிருத்தியங்களைக் குறிப்பதாக அமைகின்றது. இதில் கொடியேற்றம் படைத்தல் தொழிலைக் குறிக்கின்றது. இந்நாள் எம்முள் நல்ல எண்ணத்தை, நல்ல பழக்க வழக்கத்தை கடைப் பிடிக்க ஆரம்பிக்கும் நாள் புதிய சிந்தனைகளை, புதிய வாழ்க்கையை ஆரம்பிக்கும் நாள் இவ்வுற்ச வத்தைத் தரிசிக்கும் நாம் அன்னையின் அருட்கடாட்சத்தை வேண்டி ஆலயத்திற்கு வந்து வழிபடும் நாள்களில் எம்மிடமுள்ள பல அநாவசிய பழக்க வழக்கங்களை விடுத்து ஆசார சீலர்களாக ஆலய தரிசனம் செய்வோம்.

ஆலய மஹோற்சவம் சிறப்பாக நடைபெறவும் அதனை முன்னிட்டு வெளிவரும் மலர் சிறப்பாக அமை யவும் ஆசிவேண்டி எல்லாம் வல்ல அன்னை வீரமாகாளி அம்பாளையும், பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரையும் பிரார்த்திக்கின்றோம்.

" மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெலாம்"

இறையணியில் பிரம்மாச்சாரி ஜாக்ரதசைதன்யா
வதிவிட ஆச்சார்யார் - சின்மயா மிஷன்
யாழ்ப்பாணம்.

விழா சிறப்புற வாழ்த்துவோர்

கிருஸ்ணா நகைமாளிகை

இல. 09, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5046

அம்பாள் வெதுப்பகம்
AMBAL
Bake House

இல.252,254,
பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

கிருபா லேனர்ஸ்
(அரச அங்கீகாரம் பெற்ற A தர சாரதி பயிற்சிப் பாடசாலை)

மும்மொழிகளிலும் வாகன பயிற்சி அளிக்கப்படும்.

தலைமைக் காரியாலயம்:
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4353/ 021 492 3200/
077 722 5292 / 071 454 6960

A9 வீதி, கிளிநொச்சி
(கச்சேரி முன்பாக)
021 228 5505, 071 454 695

216, A9 வீதி, வவுனியா
(வசந்தி திரையரங்கு முன்பாக)
024 222 7777, 077 710 0444

அம்பாள் மரக்காலை



இல.261, பருத்தித்துறை வீதி,
வீரமாகாளி அம்பாள் கோயிலடி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே: 0777111147 /
021 222 0045/ 077 889 4200/
077 007 6555

(CS/4889)(10)

2017 ஆனி மாத பலன்*

விருச்சிகம்

வாழ்க்கையில் முன்னேறுவதற்குத் திட்டமிட்டுச் செயற்படும் விருச்சிக ராசியினரே, இந்தக் காலகட்டத்தில் ராசியில் சனி இருந்தாலும், ராசியை சூரியன், செவ்வாய், புதன் பார்க்கிறார்கள். ஆகவே எதிலும் கவனமாக செயல்படுவதும் எச்சரிக்கையாக இருப்பதும் நல்லது. தாமதப்பட்ட காரியங்கள் அனைத்தும் வேகம் பெறும். பணவரத்து தாமதப்படும். கையிருப்பு கரையும். மற்றவர்களுக்காக உதவி செய்யும்போது வீண் பழிச் சொல் கேட்க நேரிடலாம். எச்சரிக்கையாக இருப்பது நல்லது. உடற் சோர்வும் ஏற்படலாம். தொழில் ஸ்தானத்தில் ராகு இருக்க, தொழில் ஸ்தானாதிபதி சூரியன் ராசியைப் பார்க்க, தொழில் ஸ்தானத்தை ராசிநாதன் செவ்வாய் பார்க்கிறார். தொழில், வியாபாரம் தொடர்பாக அலைச்சல் இருக்கும்.

பழைய மீதிகள் வசூலிப்பதில் இழுபறியான நிலை காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீணாக உழைக்க நேரிடும். எடுத்த காரியத்தை செய்து முடிப்பதற்குள் பல தடைகளைச் சந்திக்க வேண்டி இருக்கும். ராசியில் சனி இருந்தாலும் குடும்ப ஸ்தானத்தை ராசிநாதனான செவ்வாய் பார்க்கிறார். குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. கணவன், மனைவிக்கிடையே மனம் விட்டு பேசுவதன் மூலம் நன்மைகள் உண்டாகும். பிள்ளைகளிடம் அன்புடன் நடந்து கொள்வது நல்ல பலன் தரும். பெண்களுக்கு எதிலும் நல்லது கெட்டதை நிர்ணயிக்கும் திறமை குறையும். அடுத்தவர் பிரச்னை தீர்க்க உதவி செய்வதை தவிர்ப்பது நல்லது.

கலைத்துறையினருக்கு திடீர் கோபங்கள் உண்டாகலாம். நிதானமாக இருப்பது நல்லது. புத்திசாதுரியத்தால் எதையும் சமாளிப்பீர்கள். எந்த ஒரு விஷயத்தையும் தள்ளிப் போடாமல் உடனே முடிவு காண்பது நல்லது. தெளிவான சிந்தனை தோன்றும். எந்த காரியத்தையும் செய்யும் முன் ஆலோசனை செய்து அதில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். அரசியல் துறையினரின் சாமர்த்தியமான செயல் கண்டு மற்றவர்கள் ஆச்சரியப்படுவார்கள். முக்கிய நபர்கள், அந்தஸ்தில் உயர்ந்தவர்கள் ஆகியோரின் நட்புக் கிடைக்கும். அதனால் மதிப்பு அதிகரிக்கும். புதிய தொடர்புகள் மகிழ்ச்சி தரும். புதிய நபர்களின் அறிமுகத்தினால் நன்மை உண்டாகும்.

மாணவர்கள் மிகவும் கவனமாக பாடங்களைப் படிப்பது நல்லது. அடுத்தவரை நம்பி காரியங்களை செய்வதை தவிர்ப்பது நன்மை தரும்.

பரிகாரம்:
கந்த சஷ்டி கவசம் சொல்லி முருகனை வணங்கி வர பிரச்னைகள் தீரும். பொருள் சேர்க்கை ஏற்படும். மனஅமைதி கிடைக்கும்.

அதிர்ஷ்ட கிழமைகள்:
திங்கள், செவ்வாய், வெள்ளி.

வரலாற்றில் இன்றைய தினம்

844 - இத்தாலியின் உரோமில் இரண்டாம் லூயிஸ் முடிசூட்டப்பட்டார்.

1389 - கொசோவா போரில் சேபியர்களும் பொஸ்னியர்களும் ஒட்டமான் பேரரசால் தோற்கடிக்கப்பட்டனர்.

1502 - தனது நான்காவது கடற்பயணத்தின் போது கிறிஸ்தோபர் கொலம்பஸ் மார்டினிக் தீவுகளில் கால் பதித்தார்.

1667 - மனிதரில் முதலாவது குருதி மாற்றம் டாக்டர் ஜான் பப்ரிஸ் டெனிசால் மேற்கொள்ளப்பட்டது.

1752 - மின்னல் என்பது மின்சாரம் என பென் ஜமின் பிராங்ளினால் நிரூபிக்கப்பட்டது.

1808 - யோசப் பொனபாட் ஸ்பெய்ன் அரசரானார்.

1844 - இறப்பரைக் கெட்டிப்படுத்தும் வல்கனைசேசனுக்கான காப்புரிமத்தை சார்ள்ஸ் குட் இயர் பெற்றுக் கொண்டார்.

1896 - அதிபயங்கர சுனாமியால் ஜப்பானில் 22 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் சாவடைந்தனர்.

1936 - விக்கேர்ஸ் வெலிங்டன் குண்டு வீச்சு விமானம் முதற் பறப்பை மேற்கொண்டது.

1978 - ஜோர்தான் மன்னர் ஹுசைன் அமெரிக்க பெண்மணி லிசா ஹலாபியை மணம் புரிந்தார்.

1991 - பிலிப்பைன்ஸில் பினருபோ எரிமலை வெடித்ததில் 800 பேர் உயிரிழந்தனர். 20ஆம் நூற்றாண்டின் இரண்டாவது பெரிய எரிமலை வெடிப்பு இதுவாகும்.

1994 - இஸ்ரேலும் வத்திக்கான் நகரும் முழு அளவிலான இராஜரீக உறவை ஏற்படுத்திக் கொண்டன.

1990 - மாகாணசபைக் கலைப்புச் சட்டம் அரசமைப்புக்கு முரணானதல்ல என உயர் நீதிமன்றம் தீர்ப்பு.

1990 - கொழும்பில் பதற்றநிலை ஆயிரத்து 700 தமிழ் இளைஞர்கள் கைது.

1990 - தம்பலகாமத்தில் 13 தமிழர்கள் வெட்டிக்கொலை.

90 - வவுனியாவிலும் மோதல் 3000 பேர் இடம்பெயர்வு.

1992 - ஏழு தமிழக் கட்சிகள் தொண்டாவுடன் இணைந்து செயற்பட விருப்பம்.

2001 - சீனக் குடியரசு ரஷ்யா கஜகஸ்தான் கிரிகிஸ்தான் தாஜிகிஸ்தான் மற்றும் உஷ்பெகிஸ்தான் நாட்டின் தலைவர்கள் ஒன்று கூடி ஷங்காய் ஒத்துழைப்பு அமைப்பை உருவாக்கினர்.

2016 - உலகில் பேசப்படும் தலைவர்களில் வடக்கின் முதலமைச்சரும் ஒருவர் என கல்வி ராஜாங்க அமைச்சர் ராதா கிருஷ்ணன் தெரிவிப்பு.

நாலை

ஆனி 02
வெள்ளிக்கிழமை -16.06.2017
திதி: ஸப்தமி பி.இ.12.59
நட்சத்திரம்: சதயம் பி.ப. 02.53
சுபநேரம்:05.53-07.23 வரை
ராகுகாலம்:10.23-11.53 வரை

பகடைக்காயான ஒலிம்பிக் பதக்கம்

இலங்கை விளையாட்டுத்துறையில் சுசந்திகா வென்ற ஒலிம்பிக் பதக்கமும், அதன் பின்னரான சில விவகாரங்களும் தற்போது பேசு பொருள் ஆகியுள்ளன.

ஆஸ்திரேலியாவின் சிட்னியில் கடந்த 2000ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் தொடரில் சுசந்திகா வெள்ளிப் பதக்கம் வென்றார். ஆனால் இலங்கையை பன்னாட்டுத் தரப்படுத்தலில் பிரதிநிதித்துவம் செய்தவர் என்ற அங்கீகாரம் தனக்குக் கிடைக்கவில்லை என்பதே சுசந்திகாவின் வாதமாக அமைந்துள்ளது.

இந்த ஒலிம்பிக் பதக்கத்தை வென்றதையடுத்து விளையாட்டுத்துறை அமைச்சின் ஆலோசகர் என்ற நியமனம் சுசந்திகாவுக்கு வழங்கப்பட்டது. ஆனால் இந்தப் பதவியில் இருந்து தான் தற்போது விலக்கப்பட்டு விட்டார் எனவும், தனக்கு வழங்கப்பட்டு வந்த கொடுப்பனவுகள் இலங்கை அரசால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்றும் சுசந்திகா குற்றம் சாட்டுகிறார். அரசு கொடுப்பனவுகளை நிறுத்தியுள்ள நிலையில் பொருளாதார நெருக்கடி காரணமாகத் தனது ஒலிம்பிக் பதக்கத்தை ஏலம் விடவும் சுசந்திகா முடிவு செய்துள்ளார். விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர மீதும் சுசந்திகா கடும் விமர்சனங்களை முன்வைத்தார்.

ஆனால், சுசந்திகாவின் குற்றச்சாட்டுகளை அப்படியே மறுக்கிறார் அமைச்சர் தயாசிறி ஜயசேகர. "சுசந்திகாவுக்கு இதுவரை காலமும் மாதாந்தம் 80ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வந்தது. தற்போது அது 60ஆயிரமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்த ஆதங்கத்தில் அவர் இவ்வாறு தெரிவிக்கிறார். அவரின் கொடுப்பனவுகள் நிறுத்தப்படவில்லை. அவை வழங்கப்பட்டு வருகின்றன. அவர் தற்போது வேண்டுமென்றாலும் தமது பதவியைப் பொறுப்பேற்றுக் கொள்ளலாம். பன்னாட்டு அரங்கில் சுசந்திகாவைப் போன்று சாதித்த ஏராளமானவர்கள் உள்ளனர். ஆனால் எவரும் இவர் போன்று மமதையுடன் நடந்துகொள்ளவில்லை" என்பது தயாசிறியின் கருத்தாக உள்ளது.

இருவரும் இரு வேறு கருத்துக்களை முன்வைத்துள்ளனர். இருவரினதும் கருத்துக்கள் ஒன்றுக்கொன்று முரணாகவே அமைந்துள்ளன.

ஆனால் இரண்டு விதமாக கருத்துக்களையும் பார்க்கும்போது சுசந்திகா வுக்கும் தயாசிறிக்கும் அதாவது விளையாட்டுத்துறை அமைச்சுக்கும் இடையே கருத்த முரண்பாடு உள்ளது என்பது மட்டும் புலப்படுகிறது.

நிச்சயமாக இது ஆரோக்கியமானது அல்ல. இலங்கையின் விளையாட்டு வரலாற்றில் ஆகச் சிறந்த பதக்கத்தை வென்ற ஒருவரை, விளையாட் டுத்துறை அமைச்சு இப்படி நடத்துதல் என்பது ஏற்க இயலாது. இருவரினதும் கருத்துக்களும் எண்ணங்களும் இணைந்து விளையாட்டுத் துறையை மேம்படுத்த வேண்டுமே தவிர இவ்வாறு கருத்துக்களில் முரண்படுவதைத் தவிர்த்தல் வேண்டும். ஒலிம்பிக் தொடரை உலக தடகளம் என்றும் அழைப்பர்.

அதற்கு மேல் எந்தவொரு தொடரும் இல்லை. அத்தகைய ஒலிம்பிக் தொடரில் சாதித்த ஒரு வீராங்கனைக்கு சலுகை மறுகப்படுதல் என்பது விளையாட்டுலகைச் சார்ந்த ஒட்டுமொத்த வீரர்களுக்கும் மனதளவில் பின்னடைவைக் கொடுத்துவிடும். அந்த உயர்ந்த பதக்கத்தைப் பகடைக்காய் ஆக்காமல் ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு தயாசிறியும் சுசந்திகாவும் இறங்கி வருதல் அவசியமாகும். அதுவொரு கட்டாய தேவையும்கூட.

சுடோக்கு எண் விளையாட்டு

						2		4
9	3						5	
			3	7		1		
4		1				3		
			5	1	6			
		2				9		6
		7		6	8			
	5						8	3
8		9						

நேற்றைய சுடோக்கின் விடை

9	5	4	6	8	7	2	3	1
1	6	8	3	2	5	9	7	4
3	2	7	9	4	1	5	6	8
6	4	3	8	7	9	1	5	2
7	9	2	1	5	4	3	8	6
5	8	1	2	6	3	7	4	9
2	7	9	4	3	8	6	1	5
4	1	5	7	9	6	8	2	3
8	3	6	5	1	2	4	9	7

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபலமானது.

உதயநிதிக்கு ஜோடியாகும் நமீதா

பிரியதர்ஷன் இயக்கத்தில் உதயநிதி நடிக்க இருக்கும் புதிய படத்தில் அவருக்கு ஜோடியாக நமீதா நடிக்க உள்ளார் எனக் கூறப்படுகிறது. 'சரவணன் இருக்க பயமேன்' படத்தைத் தொடர்ந்து உதயநிதி ஸ்டாலின் தற்போது, 'பொதுவாக என் மனசு தங்கம்', 'இப்படை வெல்லும்' ஆகிய இரு படங்களில் நடித்து வருகிறார். இந்த இரு படங்களை முடித்த பிறகு அடுத்ததாக தேசிய விருது இயக்குநர் பிரியதர்ஷனுடன் இணையவுள்ளார் என உதயநிதி அவரது கீச்சகப் பக்கத்தில் தெரிவித்திருந்தார். மூன்ஷீட் எண்டர்டெயிண்மன்ட் நிறுவனம் சார்பில் சந்தோஷ் தயாரிக்க இருக்கும் இந்தப் படம் ஒரு மலையாள படத்தின் மறுஉருவாக்கம் என்றும் கூறப்படுகிறது. திலீஷ் போத்தன் இயக்கத்தில், பகத் பாஷில் நடிப்பில் கடந்த ஆண்டு மலையாளத்தில் வெளியாகி நல்ல வரவேற்பைபெற்ற படம் 'மகேஷின்டே பிரதிகாரம்'. இந்த படத்தின் தமிழ்மறு உருவாக்கத்தில் உதயநிதி நடிக்க உள்ளார் எனக் கூறப்படுகிறது. இப்படத்தில் உதயநிதி ஜோடியாக மலையாளத்தின் முன்னணி நடிகையாக வலம் வரும் நமீதா பிரமோத்திடம் படக்குழு பேசி வருகிறது என தகவல் வெளியாகி இருக்கிறது. ஏற்கனவே 'என் காதல் புதிது' என்ற தமிழ் படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நமீதா பிரமோத் நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

வாழ்க்கை அழுகையில் தொடங்கி அழுகையில் முடிகிறது.

முதல் அழுகை "எப்படி வாழப்போகிறோம்" என்பதையும் கடைசி அழுகை "எப்படி வாழ்ந்தோம்" என்பதையும் குறிக்கின்றது.

பாகுபலி படம் பார்த்ததில் புரிந்து கொண்ட விடயம்...

மண்ணுக்கு ஆசைப்பட்ட **பல்வாள்தேவனும்** பெண்ணுக்கு ஆசைப்பட்ட **பாகுபலியும்** இறந்தனர்.

ஆனால் எதற்கும் ஆசைப்படாத **கட்டப்பா** உயிருடன் இருந்தார்.

கதையின் நீதி: மண்ணுக்கும் பெண்ணுக்கும் அதிக ஆசைப்பட்டால் இறப்பே கிட்டும்.....

தைரியத்தை விட ஆர்வம் வென்று விடுகிறது பயங்களை....

Jino @Jino_Offl · 21 Jul 2015
அப்பிள் என்று ஆரம்பிக்கிறது 'ஆங்கிலம்' அம்மா என்று ஆரம்பிக்கிறது 'தமிழ்"

twitter

இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

மேடம்: மனதில் இருந்த குழப்பம் நீங்கும். தொழில், வியாபார வளர்ச்சிக்காக, கூடுதல் பணி மேற்கொள்வீர்கள். பணவரவு திருப்தியளிக்கும். பெண்கள் வீட்டுக்கு தேவையான பொருள்கள் வாங்குவர்.

இடபம்: மாறுபட்ட கருத்து கொண்டவரை சந்திக்க நேரிடலாம். பொறுமை காப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். வாகன போக்குவரத்தில் மிதவேகம் கடைபிடிக்கவும்.

மிதுனம்: பெற்றோரின் அறிவுரையை ஏற்பது நல்லது. பணியில் பொறுப்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் இருக்கிற அனுகூலம் பாதுகாப்பது நல்லது. பெண்களுக்கு செலவுக்கான பணத்தேவை அதிகரிக்கும்.

கடகம்: பெருந்தன்மை மிக்கவராக விளங்குவீர்கள். நற்செயலில் ஈடுபட்டு, சமூகத்தில் வரவேற்பு பெறுவீர்கள். தொழில் வியாபாரத்தில் சீரான வளர்ச்சி உண்டாகும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

சிங்கம்: செயலில் திறமை வெளிப்படும். அலைச்சல் தந்த வேலை ஆதாயம் தருவதாக மாறும். தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும்.

கன்னி: மாறுபட்ட சூழ்நிலையை சந்திக்க நேரிடலாம். நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு மன அமைதிக்கு வழி வகுக்கும்.

துலாம்: செயல் நிறைவேற தாமதம் ஆகலாம். தொழில், வியாபாரம் சிறக்க விடா முயற்சி அவசியம். இலாபம் சுமாராக இருக்கும். பெண்கள் நகை இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.

விருச்சிகம்: செயல்களில் அதிக நேர்த்தி நிறைந்திருக்கும். அரசு தொடர்பான உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.

தனுசு: சிலர் சுயநலத்துடன் அணுகலாம். விழிப்புடன் விலகுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் உழைப்பிற்கேற்ப ஆதாயம் கிடைக்கும். பெண்கள் ஆடம்பர எண்ணத்துடன் செயல்படுவர்.

மகரம்: இஷ்ட தெய்வ அருளால் நன்மை உருவாகும். அன்றாட வாழ்வில் புத்துணர்வுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி வியப்பூட்டும் விதத்தில் இருக்கும். நிலுவைப் பணம் வசூலாகும்.

கும்பம்: முக்கிய செயலை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உள்ள சிரமத்தை உடனடியாக சரி செய்வது நல்லது. லாபம் சுமாராக இருக்கும். உடல் நலனில் அக்கறை தேவை.

மீனம்: புதிய முயற்சி முழு அளவில் வெற்றியளிக்கும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். ஆதாயம் கூடும். குடும்பத் தேவைகளை தாராள செலவில் நிறைவேற்றுவீர்கள்.

சிகரம் தொடுவோம்

அரையாண்டுத் தேர்வு முடிந்து விடு முறைக்குப் பின் பாடசாலை இன்று ஆரம்பமாகி விட்டது. ஆசிரியர் ஒவ்வொருவருக்கும் தேர்ச்சி அறிக்கையை வழங்கிக் கொண்டிருந்தார். "எல்லாக் கணக்கும் சரியாகப் போட்டிருக்கிறேன். நிச்சயம் நூற்றுக்கு நூறு வாங்குவேன்" என பெருமையடித்துத் திரிந்த மாணவர்கள் சித்திக்கான புள்ளிகளைக் கூட வாங்கவில்லை.

"நான் நன்றாகத்தான் எழுதினேன். ஆசிரியர் தான் வேண்டுமென்று புள்ளியைக் குறைத்து விட்டார்" என்று ஆசிரியர் மேல் பழிபோட்டான் ஒருவன். சிலர் நிறையப் புள்ளிகள் வாங்க வில்லை என்று கவலைப்பட்டதாயும் இல்லை. அறிக்கை புத்தகம் கொடுப்பது முடிந்தது. சங்கர் கடைசி மாணவனாக வந்திருந்தான். எல்லோரும் சங்கரைப் பார்த்து கேலிச் சிரிப்புச் சிரித்தனர். ஆசிரியரோ மாணவர்கள் ஒருவரை ஒருவர் கேலி பேசுவதைக் கடுமையாக எச்சரித்து விட்டு "சங்கர் நீ மனது வைத்தால் எல்லாப் பாடங்களிலும் முதல் நிலைப் புள்ளிகள் வாங்க முடியும். எல்லோருக்கும் தான் கூறுகிறேன். நல்ல புள்ளிகளை வாங்க எல்லோரும் கடுமையாக உழைக்க வேண்டும். விளையாட்டைக் குறைக்க வேண்டும். சினிமா. தொலைக் காட்சியை அறவே விட வேண்டும். அன்றைக்கு வகுப்பில் படித்த பாடங்களை அன்றைக்கே வீட்டில் உட்காந்து படிக்க வேண்டும். சக மாணவரிடம் பேசும் பேச்சுக்கள் பாட விடயங்களாகவே இருக்க வேண்டும் மேலதிக தனியார் வகுப்புக்கள் தேவை இல்லை.

முதலிலே மாணவர் அதிகாலையில் ஐந்து மணிக்கே எழுந்திடனும். அதிகாலைப் பாடம் நன்கு மனதில் பதியும். பாடங்களை மனப்பாடம் செய்வதை விட. கருத்தை மனதில் வாங்கிக் கொண்டு சொந்தமாக எழுதப் பழகவேண்டும். வகுப்பறைப் பாடத் தோடு நூலகம் சென்று பாடம் தொடர்பான புத்தகங்களையும் படிக்க வேண்டும். எழுத்துக்களையும் உறுப்பமைய ஒழுங்காக எழுத வேண்டும். இரவில் சீக்கிரம் படுத்து அதிகாலையில் எழுந்திருத்தல் வேண்டும். இப்படிச் செய்தால் வகுப்பில் என்ன மாகாணத்தில் கூட முதல் மாணவனாகலாம்" என படிப்பில் வெற்றிக்கான வழி வகைகளை ஆசிரியர் விவரமாக விளக்கினார்.

அன்றிலிருந்து சங்கர் முற்றாகவே மாறிவிட்டான். அதிகாலையில் எழுவான். ஒழுங்காக பல் விலக்கிய பின் காலைக் கடன்கள் முடித்து படிக்கும் மேசையில் உட்காந்து விடுவான். வழக்கமாக 7 மணிக்கு தாய் படுக்கையில் வைத்தே அவனுக்கு தேநீர் வழங்குவார். இப் போது அவன் படிக்கும் மேசைக்கே சுடச்சுட பால் கோப்பி வந்து சேரும். முன்பெல்லாம் சங்கர் தம்பி தங்கையுடன் அடிதடி சண்டை போட்டி பொறாமை என்று வீடே அல்லோல கல்லோலப்படும் வகையில் சண்டை போடுவான். ஆனால் இப்போதோ" தானுண்டு தன் படிப்பு உண்டென்று ஒதுங்கி இருக்கிறான். தொலைக் காட்சி முன்னால் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டே நடக்கும் எல்லா நிகழ்ச்சி களையும் பார்த்து ரசிப்பவன். இப்போது தொலைக் காட்சியை திரும்பியும் பார்ப்பதில்லை. சங்கர் பட்ட சிரமங்களுக்கு பலன் கிடைத்துக் கொண்டிருந்தது. கடைசி மாணவனாக இருந்தவன் வகுப்பறையில் கால். அரையாண்டு பரீட்சைகளில் முதலில் 50, 60 என புள்ளிகள் பெற்று 80 புள்ளிகள் பெறும் அளவுக்கு முன்னேறி விட்டான். அரையாண்டுத் தேர்வில்வகுப்பில்முதல் மாணவனும் ஆனான் ஆசிரியர் முதல் மாணவர் வரை அனை வரும் அவனைப் பாராட்டினர். இப்போது மாகாணத்திலேயே முதல் மாணவனாக வரவேண்டும் என்பது அவன் இலட்சியம்.

அந்த நிலையை அவன் அடையும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

பெற்றோரும் மகனின் உயர்ச்சி கண்டு மகிழ்ச்சியில் திளைத்தனர்.

முயற்சி திருவினையாக்கும். முயற்றின்மை இன்மை புகுத்தி விடும். (குறள் – 616)

பொருள்: தொடர்ந்து முயற்சி செய்தால் நல்ல பயன் கிடைக்கும். முயலாது சோம்பேறியாக இருந்தால். அது தீமையை விளைவிக்கும்.

புதிய ஆத்தி சூடி

ஔவையார் பாடிய ஆத்தி சூடியே முதலில் தோன்றியது. புதிய ஆத்தி சூடியை பாரதியார் பாடியுள்ளார். ஔவையாரைப் பின்பற்றி பாரதியார் காலத்துக்கு பொருந்தும் வகையாகவே புதிய ஆத்திசூடியைப் பாடியுள்ளார்.

1. அச்சந்தவிர் – முதாயத்தில் பல்வேறு நிலைகளிலும் ஏற்படும் அர்த்தமற்ற பயங்களை நீக்க வேண்டும்.
2. ஆண்மை தவறேல் – ஆண் பாலாருக்குரிய தன்மைகளில் இருந்து அவர்கள் உடலாலும் மனத்தாலும் தவறக் கூடாது.
3. இளைத்தல் இகழ்ச்சி – உடலாலும் மனதாலும் தளர்வுறுதல் மிகவும் இழிவானதாகும்.
4. ஈகை திறன் – பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கு உதவுதல். திறனுடைய அறிவுபூர்வமான செயல்
5. உடலினை உறுதி செய் – நமது உடம்பைத் திடமுள்ளதாக வைத்திருத்தல் வேண்டும்
6. ஊண் மிக விரும்பு – உணவு வகைகளை உண்ண அதிகமாக விரும்ப வேண்டும்.
7. எண்ணுவது உயர்வு – உயர்ந்த சிந்தனைகள் பற்றி நினைப்பதே உயர்வானது.
8. ஏறு போல் நட – காளையினைப் போல தன்நம்பிக்கையோடு நடக்கவும்.
9. ஐம்பொறி ஆட்சிகொள் – ஐவகையான உணர்ச்சி உறுப்புக்களின் செயற்பாட்டை உன் கட்டுப்பாட்டுள்வை.
10. ஒற்றுமை வரிமையாம் – அனைவரும் ஒன்று பட்டு செயற்படுதல் வலிமையானதாக கருதப்படும்.
11. ஓய்தலொழி – எல்லாம் முடிந்ததாக நினைத்து நீடித்த ஓய்வில் இருப்பதைத் தவிர்.
12. ஔடதங் குறை – உடல் உளா நோய்களுக்காகஇயற்கை செயற்கைமருந்துகள் எடுப்பதைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.
13. கற்ற தொழுகு – எட்டுக் கல்வியாலும், அனுபவக் கல்வியாலும் நாம் பெற்றுக் கொண்ட, அறிந்து கொண்ட படிப்பினைகள் படி நடக்க வேண்டும்.
14. காலம் அழியேல் – வினாடி, நிமிடம், மணி என்பன உள்ளடக்கிய நாள், வாரம், மாதம் ஆண்டுகளை வீணே அழிய விடாதே.
15. கிளை பல தாங்கேல் – உறவினர் பலரதுபொறுப்புக்களையும் தனியொருவனாகச் சுமக்கும் வேலையை ஏற்காதே.
16. கீழோர்க்கு அஞ்சேல் – மனத்தாலும் செயலாலும் குற்றம் செய்தவர்களுக்கு பயப்படக்கூடாது.
17. குன்றென நிமிர்ந்து நில் – சிறிய மலையைப் போன்ற திண்மையுடனும் உறுதியுடனும் தன்னம்பிக்கையுடனும் தலை நிமிர்த்தி நெஞ்சுயர்த்தி நிற்க வேண்டும்.
18. கூடித் தொழில் செய் – உழைப்பில் உறுதியும் விடாமுயற்சியுமுடையோர் அனைவரும் ஒற்றுமையால் ஒன்றுபட்டு தொழில் செய்தல் நன்று.
19. கெடுப்பது சோர்வு – ஒன்றைக் கெடுத்து அழிப்பது தீயதான சோர்வான செயல்.
20. கேட்டிலும் துணிந்து நில் – கெடுதல்கள் வந்த போதும் மனத் தளராமல் துணிந்து நின்று அவற்றை எதிர் கொள்ள வேண்டும்

(தொடரும்)

இலங்கையில் பயன்படுத்தப்படும் நாணய வகைகள்

ஒரு சதம் | இரண்டு சதம் | ஐந்து சதம் | பத்துச் சதம் | இருபத்தைந்து சதம்

ஐம்பது சதம் | ஒரு ரூபாய் | இரண்டு ரூபாய் | ஐந்து ரூபாய் | பத்து ரூபாய்

இலங்கையில் பயன்படுத்தப்படும் நாணயத் தாள் வகைகள்

இருபது ரூபாய் | ஐம்பது ரூபாய் | நூறு ரூபாய்

ஐநூறு ரூபாய் | ஆயிரம் ரூபாய் | ஐயாயிரம் ரூபாய்

ஒத்த கருத்துச் சொற்கள்

1. பொறாமை - அழுக்காறு
2. வேறுபாடு - பாரபட்சம்
3. உத்தரவு - கட்டளை
4. திண்ணம் - நிச்சயம்
5. வருவாய் - வருமானம்
6. மேதை - அறிவாளி
7. ஈகை - கொடை
8. வழிபாடு - ஆராதனை
9. நிதானம் - பொறுமை
10. பாதுகை - செருப்பு
11. சாந்தம் - அமைதி
12. மாட்சி - சிறப்பு
13. சிங்கம் - அரி
14. அடைக்கலம் - தஞ்சம்
15. வயல் - கழனி
16. விலாசம் - முகவரி
17. நெருப்பு - தழல்
18. புத்தகம் - பனுவல்
19. வேடிக்கை - வினோதம்
20. அதிகாலை -வைகறை

தரப்பட்டுள்ள கூற்றுகளின் விடைகளை வைத்து சொற்கோபுரத்தைப் பூர்த்தி செய்வோம்

1. மிகவும் இனிப்பானது
2. மருட்சியான மிருகம்
3. உள்ளம் என்பதை இப்படியும் அழைப்பர்
4. கோபம் என்பதற்கான மறு பெயர்
5. சொத்து ஒன்றின் உரிமம்
6. காட்டை இப்படியும் அழைப்பர்
7. இராமன் பதின்னான்கு ஆண்டுகள் சென்றது.
8. நீண்டகாலம்
9. மனத்திருத்தம்
10. சனக் கூட்டம்

லண்டன் தீயிலிருந்து காப்பாற்ற குழந்தையை ஜன்னல் வழியே வீசிய தாய்

லண்டனில் அடுக்குமாடியில் ஏற்பட்ட தீயில் இருந்து தன் குழந்தையைக் காப்பாற்ற முயன்ற தாய், அந்தக் குழந்தையை ஜன்னல் வழியாக வெளியே வீசியெறிந்தார். யாராவது பிடித்துக் காப்பாற்றிவிடுவார்கள் என்ற அவரின் நம்பிக்கை பொய்த்துப் போகவில்லை.

கட்டடத்துக்குள் இருந்த பெண் ஒருவர், வெளியே கூடியிருந்த கூட்டத்தினரிடையே தான் தனது குழந்தையை கீழே போடப் போவதாக சைகை செய்ததாகவும், அவர் கட்டடத்தின் 9 அல்லது 10வது மாடியில் இருந்திருக்கிலாம் என்றும் நேரில் கண்ட சமிரா லம்ரானி கூறினார்.

விற்பனைக்கு உண்டு

இரண்டு மாதம் நிரம்பிய டோமன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
(ஆண், பெண்)

077 659 0606

மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1985 ஆம் ஆண்டு பிறந்த 8செவ்வாய் குற்றமுள்ள மணமகளுக்கு படித்த சாதாரண வேலை ஒன்று பார்க்கும் மணமகன் தேவை.

077 508 3240

தவறிவிட்டது

வட்டு. மேற்கு வட்டுக்கோட்டையை முகவரியாகக் கொண்ட கனகரத்தினம் அருள்வேந்தன் ஆகிய என்னுடைய சாரதி அனுமதிப்பத்திரம் இ.போ.ச. தொழில் அனுமதி அட்டை, வங்கி ATMகார்ட் வங்கி அடையாள அட்டை ஆகிய பேர்ஸ் ஒன்று யாழ்.மத்திய பேருந்து நிலையத்திற்கும் 782 வழி இலக்க, காரைநகர் துறைமுகத்திற்கும் இடையில் கடந்த 08.06.2017 வியாழக்கிழமை தவறிவிட்டது.

077 880 3708

வேலைவாய்ப்பு

பிரபல தனியார் நிறுவனத்தில் க. பொ.த உயர்தரம் படித்த ஆண், பெண் இருபாலாரும் தேவை. (மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே தெரிவு செய்யப்படுவர்) தொடர்புகளுக்கு,

076 940 8018 ஜனா

ஓம் வீராட விஸ்வப் பிரம்மனே நமஹ

மரண அறிவித்தல்

பொன்னுச்சுவாமி இரவீந்திரன் (வவா)

பிறப்பு 03.08.1957 இறப்பு 13.06.2017

சாவகச்சேரி, சங்கத்தானை, பொன்னுச்சாமி வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பொன்னுச்சுவாமி இரவீந்திரன் கடந்த (13.06.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுச்சுவாமி (ஆசிரியர், டிறிபேக் கல்லூரி), காலஞ்சென்ற நல்லம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற சதாசிவம் லட்சுமிதம்பதியரின் அன்புமருமகனும் செல்வராணியின் அன்புக் கணவரும் நிஷாந்தினியின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றகருணாநிதி மற்றும் சந்தமலர், உருத்திரன், மனோகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சச்சிதானந்தம் சிவானந்தம் நித்தியானந்தம் (பிரான்ஸ்), சதானந்தம் (இந்தியா) ஆகியோரின் அன்புமைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2017) வியாழக்கிழமை மு.ப.10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி, கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னுச்சுவாமி வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

தகவல்: பொ.உருத்திரன்
(சகோதரன்) 077 617 3927

கேள்வி அறிவித்தல், நல்லூர் பிரதேச சபை மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதி (PSDG) -2017 (கட்டம்- 1)

01. தலைவர் பெறுகைக்குழு நல்லூர் பிரதேச சபை கொக்குவில் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ் குறிப்பிட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வீதி வேலைகளுக்காக கோருகின்றார்

02. தேசிய போட்டிக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்விகோரப்படுகின்றது. ஆயினும், 2016.06.30 ஆம் திகதி 04/ 2016 (1)ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் படி வட மாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்வி தாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி வீதி புனரமைப்பிற்கு பொருத்தமானதரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற் கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் (தொலை பேசி இலக்கம் - 0212222700 –0213002508) இல் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 3.00 வரை.2017.07.06 வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிட லாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் தலைவர், நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் என்னும் இடத்திலிருந்து 2017.06.15 திகதியிலிருந்து.2017.07.06 ஆம் திகதி வரை மு.ப 9.00 தொடக்கம் பி.ப 3.00 வரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் என்னும் முகவரிக்கு 2017.07.07 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. 01-08 வரையான வேலைகளுக்கான கேள்வியானது செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதி திகதியிலிருந்து 49 நாட்களும் , 09-10 வரையான வேலைகளுக்கான கேள்வியானது செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதி திகதியிலிருந்து 63 நாட்கள் ஆகும்.

09. கேள்வி பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

இல	வேலை விவரம்	அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (Vat நீங்கலாக)	மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் (VAT,NBT நீங்கலாக)	வேண்டப்படும் தரம்	கேள்வி பிணை வைப்பு (ரூபா)	ஒப்பந்த காலம்
01.	கேணியடி வீதி புனரமைப்பு திருநெல்வேலி	0.64	2000.00	C9	6450.00	02 மாதம்
02.	பலாலி வீதி குறுக்கு ஒழுங்கை வீதி புனரமைப்பு திருநெல்வேலி	1.15	2000.00	C9	11,550.00	02 மாதம்
03.	பரமேஸ்வரா கல்லூரி வீதி குறுக்கு ஒழுங்கை வீதி புனரமைப்பு திருநெல்வேலி	0.88	2000.00	C9	8,850.00	02 மாதம்
04.	பொன்னையா குறுக்கு ஒழுங்கை வீதிபுனரமைப்பு கொக்குவில்	0.28	2000.00	C9	2,900.00	02 மாதம்
05.	குளப்பிட்டி ஒழுங்கை கொக்குவில் வீதி புனரமைப்பு	0.64	2000.00	C9	6,450.00	02 மாதம்
06.	கே.கே.எஸ் குறுக்கு வீதி கேணியடிவில் வீதி புனரமைப்பு	0.89	2000.00	C9	8,900.00	02 மாதம்
07.	மடம் வீதி கல்வியங்காடு வீதி புனரமைப்பு	0.36	2000.00	C9	3,650.00	02 மாதம்
08.	துர்க்கை அம்மன் வீதி கொக்குவில் வீதி புனரமைப்பு	0.24	2000.00	C9	2,500.00	02 மாதம்
09.	நாகதம்பிரான் வீதி அரியாலை கிழக்கு வீதி புனரமைப்பு	2.01	2000.00	C8	20,150.00	02 மாதம்
10.	உடையார் குறுக்கு வீதி கொக்குவில் வீதி புனரமைப்பு	2.11	2000.00	C8	21,200.00	02 மாதம்

10. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் 2017.06.29 ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் மு. ப. 10.00 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்திற்கு ஆர்வமுள்ள ஒப்பந்த காரர்கள் கலந்து கொள்ள முடியும்.

சு.சுதர்ஜன்
தலைவர்
பெறுகைக்குழு
நல்லூர் பிரதேசசபை,
கொக்குவில்.



உடலுக்கு வலு, நோய் எதிர்ப்பாற்றல் அள்ளித்தரும் முளைகட்டிய பயறு

பயறு 'ஏழைகளின் இறைச்சி' என்றால் உங்களால் நம்பமுடிகிறதா? ஆம்... அத்தனை அற்புதமான ஓர் உணவுப் பொருள் பயறு. இதை ஏழைகளின் இறைச்சி என்று சொல்வதற்குக் காரணம், இறைச்சி உண்பதால், எவ்வளவு புரதச்சத்து கிடைக்குமோ அந்த அளவுக்கு புரதச்சத்து பயறு வகைகளை உண்ணும்போதும் எமக்குக் கிடைக்கும்.

முளைகட்டிய பயறு

பயறு வகைகள் 'லெக்யூம்' என்னும் குடும்பத்தைச் சேர்ந்தவை. மற்ற தாவரங்களைவிட அதிகமான சத்துகள் நிறைந்தவை. குறைவான ஈரப்பதம் கொண்டவை. பல நாள்கள் பத்திரப்படுத்தி உண்ணும் உணவாக பயறு வகைகள் இருக்கின்றன. நன்கு முதிர்வடைந்த பயறுகளில் அதிகமான புரதச்சத்துகள் உள்ளன. முதிர்ந்த பயறுகளில் கிட்டத்தட்ட 20 - 30 சதவிகிதம் புரதச்சத்துகள் நிறைந்துள்ளன. சாதாரண பயறுகளைவிட முளைகட்டிய பயறுகள் இரட்டிப்பு பலன்களைத் தருபவை. பயறுகளைச் சாதாரணமாக உட்கொள் ளும்போது உண்டாகும் வாய்வுத்தொல்லை முளைகட்டிய பயறை உண்ணும்போது உண்டாவதில்லை. மிக விரைவாக செரிமான மடையும் தன்மையும் கொண்டது. இதற்குக் காரணம் செரிமானப் பிரச்சினைகளை உண்டாக்கும் 'பைரேட்ஸ்' என்ற எதிர் ஊட்டச்சத் துகள் முளைகட்டிய தானியங்களில் குறைக்கப்பட்டுவிடுவதுதான்.

பயறு முளைகட்டும் முறை :

* பச்சைப் பயறை நன்கு அலசி சுத்தம்செய்து 8 மணி நேரம் தண் ணீரில் ஊறவைக்கவும்.
* 8 மணி நேரம் கழிந்ததும் நீரை நன்றாக வடித்து ஒரு பருத்தித் துணியால் கட்டிவைக்கவும்.
* அடுத்த 8 மணி நேரத்தில் பச்சைப் பயறு நன்கு முளைவிட்டிருக்கும்.

முளைகட்டிய பயறு உண்பதால் ஏற்படும் பயன்கள்:

* பஞ்ச சக்திகள் நிறைந்த உணவு.
* அதிக பிராண சக்தி வாய்ந்த உணவு.
* அதிக புரதச்சத்துக் கொண்டது.
* விற்றமின் பி 12 நிறைந்த உணவு.
* நோய் எதிர்ப்பாற்றல் அதிகரிக்கும்.

தினசரி மூன்று பேரீச்சம் பழம்
தித்திப்பான பலன்கள்

மலச்சிக்கல் தீர்க்கும்

'பேரீச்சை மலச்சிக்கலை உண்டாக்கும்' என்ற கருத்து நிலவி வருகி றது. ஆனால், உண்மையில் பேரீச்சை ஒரு சிறந்த மலமிளக்கியாகச் செயல்படுகிறது. மலச்சிக்கலைச் சரிசெய்ய, முதல்நாள் இரவே மூன்று பேரீச்சையை நீரில் ஊறவைக்க வேண்டும். காலையில் அவற்றின் சாற்றைக் குடிக்கலாம். பேரீச்சையில் அதிக அளவு நார்ச்சத்து நிறைந் துள்ளது. கரையக்கூடியது. இது செரிமான மண்டலப் பாதையில் உள்ள நீரை வெளியேற்ற உதவுகிறது. குடல் இயக்கங்களை ஆரோக் கியமாக வைத்திருக்க உதவுகிறது. வயிற்றுப்போக்குக்குச் சிறந்த மருந்தாகும் இது செரிமானச் சக்தியையும் அதிகரிக்கும்.

இரும்புச்சத்து அதிகரிக்கும்

பேரீச்சையில் நிறைந்துள்ள அதிக அளவிலான இரும்புச்சத்து, குருதிச்சோகையை சரிசெய்கிறது. உடலுக்குத் தேவையான புத்துணர்வு மற்றும் ஆரோக்கியத்தைத் தரும். குருதி உற்பத்திக்கு வழிவகுக்கிறது. குருதி சம்பந்தமான நோய்களைக் குணப்படுத்த உதவுகிறது.

இதயத்தை இதமாக்கும்

இதில் நிறைந்துள்ள பொட்டாசியம், இதய நோய்களில் இருந்து நம் மைக் காக்கிறது. பலவீனமான இதயத்துக்கு பலம்தரும். இதயத்துக்கு இம்சை தரக்கூடிய கெட்ட கொழுப் பைக் குறைக்கப் பெரிதும் உதவுகி றது. மாரடைப்பு மற்றும் பக்கவாதம் ஏற்படுவதற்கான வாய்ப்பையும் குறைக்கிறது.

எலும்பை வலுவாக்கும்

இதில் உள்ள மாங்கனீசு, மக்னீசியம் மற்றும் செலினியம் போன்ற நுண் சத்துகள் எலும்பை வலுவாக்கும். பேரீச்சையை உணவுடனும் சேர்த்துக் கொள்ளலாம். எலும்பின் வளர்ச்சிக்கு உதவும். மேலும், ஆஸ்டியோபோரோசிஸ் போன்ற எலும்பு நோயில் இருந்து நம்மைக் காக்கிறது. குறிப்பாக, பெண்கள் பேரீச்சையை உணவுடன் சேர்த் துக்கொள்ளவேண்டும். பெண்களுக்கு ஏற்படும் எலும்புருக்கி நோயைக் குணப்படுத்தும். வயதானவர்களுக்கு ஏற்படும் எலும்புத் தேய்மானத்தால் ஏற்படும் வலியைக் குறைக்க உதவுகிறது.

நினைவாற்றலைப் பெருக்கும்

இதில் உள்ள விற்றமின் மற்றும் பொட்டாசியம் சத்துகள் மூளை சுறு சுறுப்பாக இயங்க உதவுகிறது. நரம்பு மண்டலச் செயல்பாட்டை அதி கரிக்கவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்கவும் உதவும். ஞாபக மறதியால் பாதிக்கப்பட்டோருக்கு ஏற்படும் நினைவாற்றல் இழப்பைத் தடுக்கிறது.

கேள்வி அறிவித்தல்
குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை (PSDG)- 2017
வேலணை பிரதேச சபை

ஒப்பந்த பெயர்: புங்குடுதீவு கல்லடி அம்மன் வீதி (பெருக்குமர வீதி) புனரமைப்பு

இல : NP/14/41(18)/7/PSDG/02/2017

01. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசினது மாகாண சபை நிதியின் ஒருபகுதி கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது.
02. தலைவர்,உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு வேலணை பிரதேச சபை, வங்களாவடி வேலணை, தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்வி களை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட நிர்மாண / புனரமைப்பு வேலை களுக்காக கோருகின்றார்.
03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
04. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் குறிப்பிடப்பட்ட திட்டங்களிற்கான இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப் பட்டிருத்தல் வேண்டும்.
05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், வேலணை பிரதேச சபை, வங்களாவடி, வேலணை, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல: -021 2211506, மின்னஞ்சல் - velanaips@gmail.com), இல். இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 05.07.2017ஆம் திகதிவரை மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 14.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் செயலாளர், வேலணை பிரதேச சபை, வங்களாவடி, வேலணை, யாழ்ப்பாணம் எனும் இடத்திலிருந்து 15.06.2017ஆம் திகதியிலிருந்து 05.07.2017 வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1,500/-(வற்வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
08. கேள்வி இருபிரதிகளில் தயாரித்து தலைவர், வேலணை பிரதேச சபை, வங்களாவடி, வேலணை, யாழ்ப்பாணம். எனும் முகவரிக்கு 05.07.2017ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
09. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து 63(அறுபத்து மூன்று- 07.09.2017) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

ஒப்பந்த இலக்கம்	வேலை விவரம்	மதிப்பீட்டுத் தொகை (Rs.Mn)	ஒப்பந்த காலம்	தேவையான தரம்	கேள்விப் பிணைவிவரம்	
					பிணை வைப்பு (Rs)	தேவைப் படும் காலம்
NP/14/41 (18)/7/PSDG/02/2017	கல்லடி அம்மன் வீதி (பெருக்குமர வீதி) புனரமைப்பு	Rs.1.35	03 மாதங்கள்	C9 அல்லது அதற்கு மேல்	Rs. 15,000.00	04.10.2017

11. கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் வேலணை பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் 28.06.2017ஆம் திகதிபி.ப 14.30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது செலவில் கலந்துகொள்ள முடியும்.

தலைவர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,
வேலணைபிரதேச சபை,
வடி,

(C/30120)(10)

மரண அறிவித்தல்

திருமதி
ஜெகசோதி(மலர்) இருதயநாதன்

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரிவீதி யைப் பிறப்பிடமாகவும் மடம் வீதியை நிரந்தர வதிவிடமாகவும் பிரான்ஸை தற்காலிக வதிவிடமாக வும் கொண்ட திருமதி ஜெகசோதி (மலர்) இருதயநாதன் நேற்று (14.06.2017) புதன்கிழமை அதி காலை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்க ளான சரவணமுத்து - கனகம்மா தம்பதியரின் பிரியமான மகளும் காலஞ்சென்றவர்களான சந்தியாகு - சவரியாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும் சந்தியாகு இருதயநா தன் (அலோசியஸ்) இன் ஆருயிர் மனைவியும் சதீஸ்வரி (ஜேர்மன்), சதீஸ்குமார் (ஜேர்மன்), ஜெயபாலன் (பிரான்ஸ்), செல்வகுமார் (இத் தாலி), மக்லன் (கனடா), செல்லன் (பிரான்ஸ்), வலன்ரைன் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் டெர்வின்குமார், யாழினி, ரஞ்சினி(வவா), மாலினி, துஷ்யந்தி, சுபாஜினி, லக்ஷினிஆகி யோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற புவனேஸ்வரி, செல்வமணி (ராணி) சிறீஸ்கந்தராஜா, ஆனந்தவடிவேல், பேபிசறோஜா, நித்தியானந்ததேவி, உதயகுமார், காலஞ்சென்ற சத்திகுமார் மஞ்சும் விக்னேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜொனார்த்தன், மானஸ்வி, மேசி, அபினேஷ், ஆதிஸ், ஆஷிகா, ஜெர்ஷியா,ஜெர்ஷி யன், ஜெர்ஷான், டானியல், திரேசா, செனோரா, செறீனா, ஹரிஸ், அஸ் வின் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அவரது நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 864 4639,
00 365 115 680, 077 347 5139

தகவல்:
குடும்பத்தினர்.

முதலமைச்சரின்...

ஏனைய இரு அமைச்சர்கள் பற்றிச் சபையில் பேச ஆரம்பித்ததும், சபையிலிருந்து ஆளும் கட்சி உறுப்பினர்கள் வெளியேறினர். அமைச்சர்களான த.குருகுலராசா மற்றும் ப.சத்தியலிங்கமும் வெளிநடப்புச் செய்தனர்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில், முதலமைச்சர் சி.வி.விக்னேஸ் வரன் உரையாற்றத் தொடங்கினார். அவரது உரை ஆரம்பமாவதற்கு முன்னரே ஆளும் கட்சி உறுப்பினர்கள், முதலமைச்சர் தற்போதைய நிலமையைச் சமாளித்து உரையாற்றலாம். ஆனால் அறிக்கை தொடர்பிலோ இங்கு வழங்கப்பட்ட தன்னிலை விளக்கம் தொடர்பிலோ பேசினால் நாம் வெளியேறுவோம் என்று குறிப்பிட்டிருந்தனர்.

முதலமைச்சர் உரையாற்ற ஆரம்பித்து 3 நிமிடங்களின் பின்னர், 'விசாரணைக்குழு முன் சமர்ப்பித்த குற்றச் சாட்டுக்களுக்கு மேலதிகமாக முறைப்பாட்டாளர்கள் வராமையால் விடுவிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட அமைச்சர்களுக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இன்றும் கிடைக்கப் பெற்றுள்ளன' என்று கூறத் தொடங்கியதும், ஆளும்கட்சி உறுப்பினர்கள் முதலமைச்சரின் உரைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கத் தொடங்கினர். ஆளும் கட்சி உறுப்பினர் கே.சயந்தன், இதற்கு மேல் முதலமைச்சர் பேசினால் நாங்கள் வெளியேறுவோம் என்று குறிப்பிட்டார். அதன் பின்னர் ஆளும் கட்சியின் மற்றொரு உறுப்பினர் அ.அஸ்மின், முதலமைச்சரின் அமைச்சு சார்ந்த விடயங்களில் நீதி மோசடி நடக்கவில்லையா ? அங்கு சட்டவிரோத நியமனங்கள் வழங்கப்படவில்லையா ? முறைகேடாக இடமாற்றங்கள் நடைபெறவில்லையா ? இந்த விசாரணைக் குழு பொருத்தமற்றது என்பதால்தான் நாம் இந்தக் குற்றச் சாட்டுக்களை இங்கே முன்வைக்கவில்லை. நாம் மாகாண சபையின் தெரிவுக் குழுவையே கோரினோம். அது அமைக்கப்படாததால்தான் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதற்குப் பொருத்தமான தளம் இல்லாததால் தான் அதனை முன்வைக்கவில்லை என்று குறிப்பிட்டார்.

இதன் பின்னர் ஆளும் கட்சி உறுப்பினர்கள் சபையிலிருந்து வெளியேறினர். ஆளும் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்களான பொ.ஐங்கரநேசன், பா.டெனீஸ்வரன், ஜி.குணசீலன், க.சர்வேஸ்வரன், ஜி.ரி.லிங்கநாதன், பா.கஜதீபன், இ.இந்திரராசா, திருமதி அனந்தி சசிதரன், மயூரன், ஆ.புவனேஸ்வரன், எம்.கே.சிவாஜிலிங்கம், து.ரவிகரன், ம.தியாகராசா, க.விந்தன், க.சிவநேசன் ஆகியோர் மாத்திரமே சபையில் இருந்தனர். (த-5-8-101)

என் மீது...

மீது சுமத்தப்பட்டு வந்துள்ளன என்று தெரிவித்த விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், விசாரணைக் குழுவின் தன் மீதான அனைத் துக் குற்றச்சாட்டுக்களையும் மறுதலித் துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில், நீண்ட தன்னிலை விளக்கத்தை அவர் வழங்கினார். 19 பக்கங்களைக் கொண்டதாக அவரது தன்னிலை விளக்கம் அமைந்திருந்தது.

அதில், விசாரணைக் குழு உள்நோக்கத்துடன் செயற்பட்டது என்பதையும், தன் மீது விசாரணைக் குழு சுமத்திய ஒவ்வொரு குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் தனது நியாயப்பாடுகள் என்ன என்பதையும் தெரிவித்தார். அவரது முழுமையான தன்னிலை விளக்கம் 8ஆம் பக்கத்தில். (த-5-8-101)

தவராசா...

நிமிடங்கள் விவாதம் நடத்திய வடக்கு மாகாண சபை, இறுதியில் எதிர்க்கட்சித் தலைவரைப் பேச அனுமதிக்கவில்லை. இதனால் எதிர்க்கட்சித் தலைவர் சபையிலிருந்து வெளியேறினார்.

வடக்கு மாகாண சபையின் சிறப்பு அமர்வு நேற்று நடைபெற்றது. வடக்கு மாகாண அமைச்சர்களின் தன்னிலை விளக்கம் இடம் பெற்றது. சபை தேநீர் இடைவேளைக்கு ஒத்தி வைக்கப்பட்டது. தேநீர் இடைவேளை யின் பின்னர் சபை ஆரம்பமானது.

எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, சபை ஆரம்பமாவதற்கு முன்னர் நடைபெற்ற சபை நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில், அமைச்சர்கள் சபையில் பகிரங்கமாகத் தன்னிலை விளக்கம் தெரிவித்தால், தனக்கும் உரையாற்றச் சந்தர்ப்பம் தரவேண்டும் என்று கோரியிருந் தார். இதற்கு அமைவாக, தேநீர் இடைவேளை யின் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா உரையாற்றச் சந்தர்ப்பம் கேட்டார். ஆளும்கட்சி உறுப்பினர்கள் அதற்கு அனுமதிக்க முடியாது என்று தெரிவித்தனர். எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசாவைப் பேச அனுமதித்தால் இது விவாதமாக நீண்டு செல்லும் என்றும் குறிப்பிட்டனர்.

இது அமைச்சர்கள் மீது நடத்தப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை போன்றது அல்ல. எனவே எதிர்க்கட்சித் தலைவரைப் பேச அனுமதிக்க முடியாது என்று ஆளும்கட்சி உறுப்பினர் கே.சயந்தன் குறிப்பிட்டார்.

இங்கே விவாதம் வேண்டாம் என்றால், அமைச்சரை தன்னிலை விளக்கம் சபையில் கூற அனுமதித்திருக்கக் கூடாது என்று எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா குறிப்பிட, வடக்கு மாகாண விவசாய அமைச்சரைத் சபையில் தன்னிலை விளக்கம் வழங்க வேண்டாம் என்று நான் கேட்டுக் கொண்டேன் என்று அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார். அத்துடன் எதிர்க்கட்சித் தலைவரை இந்த விடயம் தொடர்பில் பேசுவதற்கு இன்னொரு சந்தர்ப்பத்தில் வாய்ப்பு வழங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த விசாரணை அறிக்கை சபைக்குக் கொண்டு வரப்பட்டதே தவறு. தவறிலிருந்து விடுபட இன்னொரு தவறைச் செய்யவேண்டாம். எதிர்க்கட்சித் தலைவரைப் பேச அனுமதிக்கக் கூடாது என்று ஆளும் கட்சி உறுப்பினர் அ.அஸ்மின் தெரிவித்தார்.

இதன்போது எதிர்க்கட்சி உறுப்பினர் ஜவாகிர், முதலமைச்சர் விக்னேஸ்வரன் மௌனமாக இருப்பதுதான் பிரச்சினைக்குக் காரணம் என்று குறிப்பிட்டார். இதன்போது முதல மைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், எதிர்க்கட்சித் தலைவரைப் பேச அனுமதிக்கலாம் என்று சபையில் தெரிவித்தார். அதற்கு ஆளும் கட்சி உறுப்பினர் கே.சயந்தன், சபை நடவடிக்கை தொடர்பில் அவைத் தலைவர் மாத்திரம்தான் தீர்மானிக்க முடியும். வேறு எவரும் பேச முடியாது என்று குறிப்பிட்டார்.

இறுதியில், முதலமைச்சர் சி.வி.விக்னேஸ் வரன் பேச அழைக்கப்பட்டதும், இது சன நாயகத்துக்குப் புறம்பானது. நான் வெளியேறுகின்றேன் என்று தெரிவித்து எதிர்க்கட்சித் தலைவர் வெளியேறினார். (த-5-8-101)

இரு...

அமைச்சுப் பதவிகளிலிருந்து விலகுவதற்கான கடிதங்களை வழங்கவேண்டும் என்று வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

'அமைச்சர்கள் மீதான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டாலும் சரி இல்லாவிட்டாலும் சரி நடைமுறை மாற்றம் ஒன்றை எமது உறுப்பினர்களும் மக்களும் விரும்புகின்றார்கள் போலத் தெரிகின்றது. இவற்றை எல்லாம் கவனத்திற்கெடுத்துச் செயற்படுவது எனது தார்மீகக் கடமையாகும். இதன் நிமித்தம் அமைச்சர்கள் குருகுலராசா மற்றும் ஐங்கரநேசன் ஆகியோரைத் தாமாகவே தமது பதவிகளைத் தியாகம் பண்ணுமாறு வேண்டிக் கொள்கின்றேன்' என்றார். (த-5-8-101)

தூக்கி...

வடக்கு மாகாண சபையின் நேற்றைய சிறப்பு அமர்வு முடிந்ததும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மார்ட்டின் வீதி அலுவலகத்தில் அவசர கூட்டம் கூட்டப்பட்டது. கூட்டம் நேற்று முன்னிரவு 8 மணி வரை நடைபெற்றது. வடக்கு முதலமைச்சரை மாற்றுவதற்கான முடிவு எடுக்கப்பட்டது. இதற்காக கடிதம் வரையப்பட்டு ஆளுநர் குரேயிடம் கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

"இதன் கீழ் கையெழுத்து வைத்திருக்கும் முறையாகத் தெரிவு செய்யப்பட்ட வடக்கு மாகாண சபையின் அமர்வு உறுப்பினர்களாகிய நாங்கள், தங்களுக்கு தெரிவிப்பது யாதெனில், முதலமைச்சர் விக்னேஸ்வரன் எம்முடைய நம்பிக்கையை ஆதரவையும் இழந்து விட்டார் என்றும் அவர் பெரும்பான்மை உறுப்பினர்களின் நம்பிக்கையையும் ஆதரவையும் இழந்துவிட்டார் என்பதை அறிவோம் என்றும், ஆகையினால் அவரைப் பதவியிலிருந்து அகற்றி புதிய முதலமைச்சர் நியமிக்குமாறு வேண்டுகின்றோம்" என்று எழுதப்பட்ட கடிதத்துடன், இரவு 9 மணியளவில், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் 15 பேர் ஆளுநர் அலுவலகத்திற்குச் சென்றனர். ஆளுநருடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. கடிதம் கையளிக்கப்பட்டது. 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆளுநர் பதிலளித்தார்.

இதேவேளை, வடக்கு மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ் வரன், கட்சிக்கு வழங்கிய கடிதமும் தூசி தட்டி எடுக்கப்பட்டுள்ளது.

அதில், 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கைகளுக்கு அல்லது கோட்பாடுகளுக்கு மாறாகச் செயற்படும் பட்சத்தில் என்னை வடக்கு மாகாண சபை உறுப்பினர் பதவியிலிருந்து விலக்குவதற்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கும் முழுமையான உரித்து உண்டென்றும் அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினால் கேட்கப்படும் பட்சத்தில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பதவியிலிருந்து உடனடியாக விலகுவேன் என்றும் இத்தால் வாக்குறுதி அளிக்கின்றேன். அப்படியான தருணத்தில் இந்தக் கடிதத்தையே என்னுடைய பதவி விலகல் கடிதமாக உபயோகிப்பதற்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளருக்கு இத்தால் அனுமதி வழங்குகின்றேன்' என்றுள்ளது. (உ-வ-5-101)

குற்றச்சாட்டுகளுக்கு...

தலைவரினால் அழைக்கப்பட்டார்.

அவர் தனது தன்னிலை விளக்கத்தில், விசாரணைக் குழு அமைக்கப்பட்டதன் நோக்கம், முதலமைச்சருக்கு ஆலோசனை வழங்குவதற்கும் பரிந்துரை வழங்குவதற்கும்தான். என் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள், கூட்டுப் பொறுப்புடன் முடிவெடுக்கும் அமைச்சரவைத் தீர்மானத்தின் மேலேயே எடுக்கப்பட்டுள்ளன. எனவே அமைச்சரவையே குற்றச் சாட்டுக்குப் பதில் கூறவேண்டும். வடக்கு மாகாண முதலமைச்சருக்கு எழுத்தில் எனது தன்னிலை விளக்கத்தை வழங்கிவிட்டேன். சபைக்குத்தன்னிலைவிளக்கம்வழங்கவேண்டிய அவசியமில்லை என்றார். (த-5-8-101)

லண்டனில்...

ழந்தனர் மேற்கு லண்டனில் உள்ள குடியிருப்புத் தொகுதியான கிரன்பெல்லிலேயே இந்தத் தீ விபத்து ஏற்பட்டது. இரண்டாம் மாடியில் ஏற்பட்ட தீ மிகக் குறுகிய நேரத்துக்குள் கட்டடத்தின் 24 மாடிகளுக்கும் பரவியது என்று சொல்லப்படுகிறது. தகவல் கிடைத்து சில நிமிடங்களில் களத்துக்கு விரைந்த தீயணைப்புப் படையினர் தீயைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்கு கடும் முயற்சிகளை மேற்கொண்டனர். 40 வாகனங்களும் 200 தீயணைப்புப் படையினரும் இணைந்து கிட்டத்தட்ட 8 மணிநேரப் போராட்டத்தின் பின்னர் தீயைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர் என்று பிரிட்டன் ஊடகங்கள் குறிப்பிடுகின்றன. ஆறு பேர் உயிரிழந்தனர். சிலர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடம் மேலும் குறிப்பிடப்படுகிறது.

விபத்துக்கான காரணம் தொடர்பில் எந்தத் தகவலும் வெளிப்படவில்லை. தொடர்ந்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ம)

வீட்டுக்குள்...

ரப்பை ஏற்படுத்தியுள்ளது. சிறார்களின் பெற்றோர் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, "குறித்த வீட்டில் தாய், தந்தை, அவர்களது 6 பிள்ளைகள், உறவுமுறை முதியவர் ஆகியோர் வசித்து வருகின்றனர் என்று கூறப்பட்டது. அவர்களில் இரண்டு குழந்தைகளுடன் பெற்றோர் இருவரும் தென்பகுதிக்குச் சென்று விட்டனர். அவர்கள் சில வாரங்களாக கொழும்புக்குச் சென்று தங்கியுள்ளனர். இங்குள்ளவர்களில் மூத்த பிள்ளை பாடசாலை சென்றுவருகிறார். அந்தச் சிறார்களுக்கு உரிய கண்காணிப்பு இருக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

10,11,12 வயதுகளையுடைய சிறார்கள் வீட்டுக்குள் முடக்கப்பட்டுள்ளனர் என்ற தகவல் கிடைத்ததும் தெல்லிப்பழை பிரதேச செயலக சிறுவர் பெண்கள் பிரிவினரும் காங்கேசன்துறைப் பொலிஸாரும் இணைந்து சிறுவர்கள் மூவரையும் வீட்டிலிருந்து மீட்டனர். அவர்களைச் சிறுவர் பெண்கள் பிரிவினர் மல்லாகம் நீதிமன்றில் நேற்று முற்படுத்தினர். விசாரணைகளின் பின்னர் சிறுவர்களை சிறுவர் இல்லம் ஒன்றில் தங்க வைக்குமாறு மன்று உத்தரவிட்டது. (4-8-26)

வாள்களுடன்...

நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் நடந்தது.

கொக்குவில் சந்திக்கு அருகில் உள்ள திருமண விழாக்களுக்கு பயன்படும் அலங்காரப் பொருள்கள் வாடகைக்கு விடும் கடை மற்றும் தளபாடக் கடை என்பனவே அடித்து நொறுக்கப்பட்டுள்ளது. மூன்று பேர் கொண்ட கும்பலே இந்த தாக்குதல் நடத்தியுள்ளது.

அவர்கள் முகங்களை துணிகளால் மூடியிருந்தனர். மோட்டார் சைக்கிள் இலக்கத் தகடுகளையும் மறைத்திருந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அவர்களின் தாக்குதலில் கடையிலிருந்த பொருள்கள், வாயில் கண்ணாடிகள் என்பன நொறுக்கப்பட்டுள்ளன. வீதியால் பயணித்தவர்களையும் வாள்களைக் காட்டி அச்சுறுத்தியவாறு அந்தக் கும்பல் தப்பியது என்று தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயத்துக்கு அண்மையில் உள்ள இரண்டு வீடுகளுக்குள் புகுந்த பத்து மோட்டார் சைக்கிள்களில் வந்த 20 பேர் கொண்ட கும்பல் தாக்குதல் நடத்தி சேதங்களை ஏற்படுத்தியிருந்தது. (ற-8)

சி.வி.கே...

நியமிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுவதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

புதிய முதலமைச்சர் மற்றும் அமைச்சரவையைத் தெரிவு செய்வதற்கான கூட்டம், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அலுவலகத்தில் இன்று இடம்பெறவுள்ளது. இதில் பங்கேற்பதற்காக கிழக்கு மாகாணத்திலிருந்து கட்சியின் பொதுச் செயலரும் வருகை தரவுள்ளார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை பதவி நீக்குமாறு கோரியுள்ளமையால், புதிய முதலமைச்சர் மற்றும் அமைச்சரவையைத் தெரிவு செய்ய வேண்டிய தேவை எழுந்துள்ளது. இதற்காக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர்கள், மார்டின் வீதியில் உள்ள கட்சி அலுவலகத்தில் இன்று கூடி ஆராயவுள்ளனர்.

இதன்போது, புதிய முதலமைச்சராக, சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவு செய்யப்படுவதற்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (வ-5)

மைத்திரிக்கு...

வுக்கு எதிராக வைக்கப்பட்டிருந்த சூனிய மொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

அந்தச் சூனியத்துடன் வைக்கப்பட்டிருந்த செப்புத் தகடொன்றில் அரச தலைவரின் பெயருடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் துமிந்த திஸாநாயக்கவின் மூன்று சகோதரர்களினதும், மாகாண சபை உறுப்பினர்கள் இருவரினதும், மற்றொருவரினதும் பெயர்கள் பொறிக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சில வாரங்களுக்கு முன்பு அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மந்திரவாதியொருவர் மூலம் தயாரிக்கப்பட்ட இந்தச் சூனியத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்காலம் பாழடைந்து போகவேண்டுமென துஷ்ட தேவதைகளிடம் பிரார்த்தனை செய்யப்பட்டிருக்கின்றது என வும் கூறப்பட்டது. (த)

ரூ.25 லட்சம்...

யின் அமைச்சர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு விசாரணைக் குழு நியமிப்பதற்கான பிரேரணை மீது நடந்த விவாதம் தொடக்கம், நேற்றுச் சிறப்பு அமர்வு வரையில் நடந்த விவாதம் வரைக்கும் ரூபா 20 லட்சத்துக்கும் அதிகமான பணம் செலவு செய்யப்பட்டுள்ளதாக அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் 9 ஆம் மற்றும் 16 ஆம் திகதிகளிலும், இந்த ஆண்டு கடந்த 7ஆம் திகதி மற்றும் நேற்று நடந்த அமர்வுகளுக்குமே இந்தச் செலவு ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.

இதேவேளை, விசாரணைக் குழுவுக்கு 4 லட்சத்து 83 ஆயிரம் ரூபா செலவானமை தெரிந்ததே.

(த-5-8-101)

இறுதிக்குத் தகுதிபெற்றது பாகிஸ்தான்

சொந்த மண்ணில் சுருண்டு மடிந்தது இங்கிலாந்து



மினி உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் 8 இலக்குகளால் இங்கிலாந்தைத் தோற்கடித்து இறுதிக்குத் தகுதிபெற்றது பாகிஸ்தான் அணி.

கார்டிவ் மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத் தடுப்பைத் தீர்மானித்தது. இங்கிலாந்தின் ஆரம்ப வீரர்களாக கேல்ஸ் மற்றும் பரிஸ்ரௌவ். 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கேல்ஸ். வீழ்த்தியவர் ரயீஸ். ரயீஸின் முதலாவது ஒரு நாள் ஆட்டமாக இந்த ஆட்டமே அமைந்தது. அனுபவமற்ற பந்துவீச்சைக் கொண்டு இங்கிலாந்தை வீழ்த்த திட்டமிட்ட சர்பராஸ் அகமட்டின் முயற்சி பாராட்டப் படவேண்டிய ஒன்றே. ரூட், பரிஸ்ரௌவ் இணைந்தனர். இலக்குச் சரிவு தற்காலிகமாகப் பிற்போடப்பட்டது. பரிஸ்ரௌவ் 7 ஓட்டங்களாலும், ரூட் 4 ஓட்டங்களாலும் அரைச்சதத்தை தவறவிட்டனர். மோர்கன், ஸ்ரோக்ஸ் முறையே 33, 34 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். இங்கிலாந்தின் பின்வரிசை அப்படியே சரணடைந்தது. பட்லர், மொயின் அலி, ரசிட் என்று எவராலும் எதிர்த்துப் போராட முடியவில்லை. அனைவரும் கட்டிப்போடப்பட்டனர். முடிவில் 211 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது இங்கிலாந்து.

பந்துவீச்சில் ஹசன் அலி 3 இலக்குகளையும், யுனைட் கான், ரயீஸ் இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பாகிஸ்தானின் ஆரம்ப வீரர்களாக அசார் அலி மற்றும் சமன். அடித்தளம் பலமாக அமைக்கப்பட்டது. இங்கிலாந்து வெற்றிபெறும் என்ற சிந்தனை தோற்றம்பெற சிறு வாய்ப்பும் வழங்கவில்லை. சராசரியும் கச்சிதமாகப் பேணப்பட்டது. 17.2 பந்துப்பரிமாற்றங்களில் இலக்குகள் எதையும் இழக்காமல் 100 ஓட்டங்களைத் தொட்டது பாகிஸ்தான். இருவரும் அரைச்சதம் கடந்தனர். இணைப்பாட்டமாக 118 ஓட்டங்கள் பகிரப்பட்ட பின்னர் 57 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் சமன். 76 ஓட்டங்களுடன் அசார் அலி போல்ட் செய்யப்பட்டார். பாகிஸ்தானின் கோக்லி என்று வர்ணிக்கப்படும் அசாம், அனுபவ வீரர் ஹபீஸ் இருவரும் களத்தில் நின்றனர். மீண்டும் ஓர் இணைப்பாட்டம் அரங்கேறியது. முடிவில் 77 பந்துகள் மீதமிருக்க பதற்றமில்லாமல் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது பாகிஸ்தான். (ம)

உதயதாரகை, கொலின்ஸ் அணிகளுக்கு முன்னேற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரில், உதயதாரகை விளையாட்டுக் கழகம் மற்றும் கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் என்பன முன்னேற்றம் கண்டன.

அல்வாய் நண்பர்களின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சமர பாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் மோதியது. ஆட்டத்தின் 11ஆவது நிமிடத்தில் உதயதாரகை அணியின் ராம்ராஜ் தனது அணியின் முதல் கோலைப் பதிவுசெய்தார்.

இதுவே முதல் பாதியின் ஒரே கோலுமாக அமைந்தது. இரண்டாம் பாதியின் 25ஆவது நிமிடத்தில் நியூட்டன் அணியின் ஜனிஸ்ரன் 25ஆவது நிமிடத்தில் பதில் கோலைப் பதிவுசெய்து 1:1 என்றாக்கினார். உதயதாரகையின் சார்பாக கபில் 30ஆவது நிமிடத்திலும், நியூட்டன் சார்பாக சசிகுமார் 35ஆவது நிமிடத்திலும் கோல்களைப் பதிவுசெய்ய ஆட்டம் சமநிலை கண்டது. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது உதயதாரகை.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில்கரணவாய்கொலின்ஸ் விளையாட்டுக் கழகமும் பொற்பதி சென். பீற்றர்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின. ஆட்டத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த கொலின்ஸ் அணி 4:0 என வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குமுன்னேறியது.(மு-108)

இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 15
நண்பர்கள் வி.க.
கால்பந்தாட்டம்
நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரின் ஆட்டங்கள் சில இன்று நடைபெறவுள்ளன. பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கரவைச் சுடர் விளையாட்டுக் கழகமும், தொடர்ந்து 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் செஞ்சுடர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

இளநிலைப்பிரிவு
கூடைப்பந்தாட்டம்
யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் இளநிலைப் பிரிவினருக்கான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில இன்று நடைபெறவுள்ளன. சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத்திடலில் பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் 17வயது பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அணியை எதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் 20வயது பிரிவு பெண்களுக்கான ஆட்டத்தில் திருக்குடும்பக் கன்னியர் மட அணியை எதிர்த்து வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணி மோதவுள்ளது. (ம-23)

யுவி 300

பன்னாட்டு கிரிக்கெட் அரங்கில் இன்று தனது 300ஆவது ஆட்டத்தில் களமிறங்கவுள்ளார் இந்திய அணியின் சகலதுறை வீரர் யுவராஜ் சிங்.
மினி உலகக்கிண்ணத் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. இன்று நடைபெறும் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் பங்களாதேஷ்ம் இந்தியாவும் மோதவுள்ளன. இன்றைய ஆட்டத்தில் இந்திய அணியின் விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமில் யுவராஜ் இடம்பிடித்தால் அது அவரின் 300ஆவது ஒருநாள் ஆட்டமாக அமையும்.
இதுவரை 299 ஆட்டங்களில் விளையாடியுள்ள யுவராஜ் 8ஆயிரத்து 622 ஓட்டங்களைக் குவித்துள்ளார். 150 ஓட்டங்கள் அதிகபட்சம். 14 சதங்கள், 52 அரைச்சதங்கள் உள்ளடங்குகின்றன. பந்துவீச்சைப் பொறுத்தவரையில் 111 இலக்குகளைக் கைப்பற்றியுள்ளார்.
திறனில் ஏற்பட்ட வீழ்ச்சியைத் தொடர்ந்து அணியில் இருந்து ஓரங்கட்டப்பட்ட யுவராஜ் கடந்த சில வாரங்களுக்கு முன்னரேயே மீண்டும் அணியில் சேர்க்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

பங்களாதேஷ் - இந்தியா அரையிறுதியில் இன்று

மினி உலகக்கிண்ணத் தொடரில் இன்று நடைபெறும் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் பங்களாதேஷ் - இந்தியா அணிகள் மோதவுள்ளன.
இந்திய அணியைப் பொறுத்தவரை அந்த அணி நடப்புச் சம்பியன் என்ற அந்தஸ்துடன் களமிறங்குகிறது. அந்த அந்தஸ்தைத் தக்கவைக்கக்கூடிய பலமும் இந்தியாவுக்குத் தாராளமாக இருக்கவே செய்கிறது. எட்ஜ்பஸ்டன் மைதானத்தில் இன்றைய ஆட்டம் நடைபெறுகிறது. துடுப்பாட்டத்துக்குச் சாதகமாக ஆடுகளம் இருக்கும் அதேநேரம் திடீர் மேலெழும்பல் தன்மையுடைய பந்துவீச்சுக்கும் ஒத்துழைக்கும் தன்மையும் இருக்கலாம் என்று எதிர்வுகூறப்படுகிறது. கடந்த ஆட்டத்தில் களமிறங்கிய அணியையே கோக்லி இன்று களமிறக்குவார்.
கடந்த ஆட்டத்தில் ரோகித், தவான், கோக்லி, யுவராஜ், டோனி, பாண்டியா, யாதவ், ஜடேயா, புவனேஸ்வர் குமார், அஸ்வின், பும்ரா என்ற வாறாக இந்தியாவின் பதினொருவர் கொண்ட குழாம் கட்டமைக்கப்பட்டது. இது மிகச் சிறந்த தெரிவு என்று சொல்லிக் கொள்ளலாம். பும்ராவைத் தவிர ஏனைய பத்துப் பேரும் துடுப்பெடுத்தாட வல்லவர்கள். அதிலும் குறிப்பாக தவான் ஆகச் சிறந்த திறனில் உள்ளார். கோக்லி, ரோகித்முன்வரிசையைக் கச்சிதமாக கட்டமைக்கும் திறன் படைத்தவர்கள். மத்திய வரிசையில் டோனி, யுவராஜ் உள்ளனர். கடைசிக்கட்ட அதிரடிக்கு இருக்கவே இருக்கிறார் பாண்டியா. இந்தியாவின் பந்துவீச்சு வரிசை பும்ரா, புவனேஸ்வர் குமார், பாண்டியா ஆகியோரால் பலப்படுகிறது. அஸ்வின், ஜடேயா, யுவராஜ் ஆகியோரும் பந்துவீச்சு வரிசையில் ஆட்டடிப்படைக்கவல்லவர்கள்.
பங்களாதேஷைப் பொறுத்தவரை சகிப் அல் ஹசன் உள்ளார். அவர் ஓர் ஆகச் சிறந்த சகலதுறை வீரர். நியூசிலாந்துத் தொடரில் இருந்து வெளியேற்றப்பட்டு பங்களாதேஷ் அரையிறுதிக்குத் தகுதி பெற காரணமும் அவரேதான். அவரைவிட இக்பால், கையிஸ், ரகிம், மகமதுல்லா ஆகியோர் துடுப்பாட்டப் பலமாகவும், ரகுமான், தஸ்கின், ரூபல் பந்துவீச்சுப் பலமாகவும் உள்ளனர். இந்தியாவுடன் ஒப்பிடுகையில் பங்களாதேஷ் பலம் குன்றிய அணி என்ற பேச்சுக்கள் எல்லாம் தற்போது இல்லை. ஏனெனில் தான் கத்துக்குட்டி அல்ல என்பதை பல டெஸ்ட் வெற்றிகளின் மூலம் நிரூபித்துள்ளது பங்களாதேஷ். (ம)

உலக ரென்னிஸ் தொடருக்கு ரபேல் நடால் தகுதி பெற்றார்

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள ரென்னிஸ் உலக சம்பியன்ஷிப் தொடருக்கு முதல் வீரராகத் தகுதி பெற்றார் ஸ்பெய்ன் வீரர் ரபேல் நடால்.
முதல்தர வீரர்கள் எண்மர் மட்டுமே இந்தத் தொடரில் பங்குபற்ற முடியும். அண்மையில் முடிவடைந்த பிரான்ஸ் ரென்னிஸ் தொடரைக்கைப்பற்றியதை அடுத்தே நடாலுக்கு இந்த முன்னேற்றம் கிடைத்தது. நடப்பு வருடத்துக்கான உலக சம்பியன்ஷிப் ரென்னிஸ் தொடர் இங்கிலாந்தில் நடைபெறவுள்ளது. இந்தத் தொடருடன் நடப்பு வருட ரென்னிஸ் அட்டவணைகள் முடிவுக்கு வரும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

கோடிகளை அள்ளிய கோக்லியின் ஓவியம்

இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் விராட் கோக்லியின் பத்து வருட ஐ.பி.எல். பயணத்தைக் குறிக்கும் ஓவியம் 55 கோடிக்கு ஏலத்தில் வாங்கப்பட்டுள்ளது
இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் விராட் கோக்லி தனது பெயரில் தொண்டு நிறுவனம் ஒன்றை நடத்தி வருகிறார். இந்த நிறுவனம் சார்பில் நேற்றுமுன்தினம் விருந்து நிகழ்ச்சி நடைபெற்றது.
அதில் ஷஷா ஜபர் என்ற பிரபல ஓவியர் கோக்லியின் 10 வருட ஐபிஎல் பயணம் குறித்து வரைந்திருந்த ஓவியம் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. இந்த ஓவியத்தை இங்கிலாந்து தொழில் அதிபரான பூனம் குப்தா இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 55 கோடிக்கு வாங்கியுள்ளார். (ம)

மன்னிப்புக் கேட்டார் கிரீஸ்மன்

தவறான தகவலை வழங்கியமைக்காக மன்செஸ்டர் யுனைற்ரெட் ரசிகர்களிடம் மன்னிப்புக் கேட்டார் நட்சத்திர கால்பந்து வீரர் கிரீஸ்மன்.
கிரீஸ்மன் தற்போது அத்லெட்ரிகோ மட்ரிட் அணிக்காக விளையாடி வருகிறார். அவர் அந்த அணியுடனான ஒப்பந்தத்தை முடித்துக் கொண்டு மன்செஸ்டருக்கு செல்லவுள்ளார் என்று கருத்துக்கள் வெளிவந்தன. ஆனால் அவர் அத்லெட்ரிகோவுடன் தனது ஒப்பந்தத்தைத் தற்போது நீடித்துள்ளார். இதையடுத்தே மன்செஸ்டர் ரசிகர்களிடம் மன்னிப்புக் கேட்டார். (ம)

100 சதங்களை விளாசினார் சங்கக்கார

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்பவான் குமார் சங்கக்கார, முதல் தரம் மற்றும் 'ஏ' தர ஆட்டங்களில் 100 சதங்களை விளாசினார்.
சங்கக்கார கடந்த 2015ஆம் ஆண்டு பன்னாட்டு கிரிக்கெட் அரங்கில் இருந்து ஓய்வு பெற்றார். இதையடுத்து இங்கிலாந்தின் சர்ரே கழகம் சங்காவை ஒப்பந்தம் செய்தது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஜோக்சயர், சர்ரே அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் சர்ரே வெற்றிபெற்றது. சங்கா 121 ஓட்டங்களை விளாசினார். இந்தச் சதம் முதல் தரம் மற்றும் 'ஏ' தர ஆட்டங்களில் சங்கா விளாசிய 100ஆவது சதமாகப் பதிவானது.
"இந்த அடைவைப் படைத்ததில் மிக மகிழ்ச்சியாக உணர்கிறேன். எனக்கு உண்மையில் 100 சதங்கள் குறித்து எந்தச் சிந்தனையும் இல்லை. ஆட்டத்தை முடித்துக் கொண்டு பவிலியன் திரும்பியபின்னர்தான் அதைப் பற்றித் தெரிவித்தார்கள். நான் கிரிக்கெட்டை இன்னும் நேசித்துத்தான் விளையாடிக் கொண்டிருக்கிறேன்" என சங்கா மேலும் தெரிவித்தார். (ம)

தேவை
யாழ். நகரில் காணி
அல்லது கடை
குத்தகைக்கு தேவை.
077 201 7004

ஜேர்மன் மொழி Deutsch கற்கைநெறி
18.06.2017 ஆரம்பமாகிறது.
IELTS
Free Siminar
எதிர்வரும் 17.06.2017 மற்றும் 18.06.2017 ஆம் திகதி காலை 9 - 11 மணிவரை
Seminar இல் கலந்துகொள்ளும் மாணவர்கள் வகுப்புகளில் இணையும் பட்சத்தில் பரீட்சைக் கட்டணத்தில் 25% நிறுவனமே செலுத்தும்.
மேலதிக விவரங்களுக்கு: 076 419 0327/ 077 136 3389
Address: London Metropolitan College. No.136. Palaly Road. Parameswara Junction. Jaffna. (தினேஸ் பேக்கரி கட்டடதொகுதி மேல்மாடி)
021 753 8395

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இளைஞர் யுவதிகள், தொழில்தேடுவோர்,
தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.
அடிப்படை ஆங்கில அறிவற்றவர்களும் 3 மாதங்களிலேயே தமிழ்போல சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்.
3 மாத சனி,ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 17.06.2017
1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.ப 01.00-03.00
4. மாலை 03.00-05.00
வாரநாள் வகுப்புகள் (திங்கள் மற்றும் புதன்)
1.காலை 08-10 2.காலை 10-12 3.மாலை 03-05
SAAMSON
Experts in English training
279, ஆஸ்பத்திரி பின்புற வீதி, யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

கொக்குவில் இந்து இறுதிக்குத் தகுதி

வீடு வாடகைக்கு
மானிப்பாய் சோதி வேம்படி வீதியிலுள்ள (ஏஞ்சல் சர்வதேச பாடசாலைக்குப் பின்புறமாக) சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
077 500 0900

வடமாகாண பாடசா லைகளுக்கு இடையிலான கரம் தொடரில் 17 வயது ஆண்கள் பிரி ல் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி இறு திக்குத் தகுதிபெற்றது.

யாழ்ப்பாணம் மத்தி கல்லூரியில் நேற்று இந்த அரையிறுதி ஆட் டங்கள் நடைபெற்ற . முதலாவது அரையிறுதியில் வவுனியா தமிழ் மத்திய மகா ந்தியாலய அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அ மோதியது. இரண்டு ஒற்றையர், ஓர் இரட் டையர் செற்களைக் கொண்டதாக இறுதி அமைந்தது. முதல் செற்றை கொக்குவில் இந்துக் கல்லூரியின் நிவேதிகன் 24:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப் பற்றினார். இரண்டா வது ஒற்றையர் ஆட் டத்தை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் றொசாந்தன் கைப்பற் றினார்.

ஒற்றையர் ஆட்டத் தில் இரு அணியின ரும் தலா ஓர் வெற்றி யைப்பெற்றமையால் இரட்டையர் ஆட்டத் தில் இறுதியைத் தீர் மானிக்கும் நிலை ஏற் பட்டது. கொக்குவில் இந்துக் கல்லூரி அணியின் இணை யான றுக்சன், தீபி கன் இணை கைப் றியதை அடுத்து 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக் குத் தகுதி பெற்றது அந்த அணி. (ம-23)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 10 . 12 . 1925
மறைவு 18 . 05 . 2017



கடந்த 18.05.2017 வியாழக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்ப மகுடம்
அமரர் Dr. வ.சின்னப்பு

அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டு சகல வகையிலும் உதவிபுரிந்தவர்களிற்கும், தொலைபேசி வாயிலாக ஆறுதல் அளித்தவர்களிற்கும், துண்டுப் பிரசுரம் மற்றும் Posters வழங்கியவர்களிற்கும், மேலும் பல வழிகளிலும் உதவிகளைப் புரிந்து எமது துயரில் தோள் கொடுத்தவர்களிற்கும் எமது மனம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (15.06.2017) வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 17.06.2017 சனிக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தி லும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து கிரி யைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைகின்றோம்.

இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.
077 744 8366
077 317 9771

9, ஹென்ஸ்மன் ஒழுங்கை,
சாவகச்சேரி.

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலல் அழைப்பும்

அமரர்
தர்மலிங்கம் இராஜரட்ணம்

தோற்றம்
17.09.1945
மறைவு
16.05.2017

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி 16.05.2017 இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (15.06.2017) வியாழக்கிழமை காலை புனித சாட்டி தீர்த்தக்கரையிலும் நாளை (16.06.2017) வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் நீராவியடி இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதை தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் உடனிருந்து உதவிகள் புரிந்தவர்களுக்கும் மலர்வளையங்கள், கண்ணீர் அஞ்சலிகள், இரங்கல் உரைகள் மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும் அன்னாருக்கு இறுதி மரியாதையை நிறுவனம் சார்பாக நடத்திய யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவன சமூகத்திற்கும், கொழும்பில் இறுதி மரியாதையை செலுத்திய யா/ வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்திற்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது துன்பத்தில் பங்கு கொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் நன்றி கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

குடும்பத்தினர்.
021 222 6803

கனடாவில் நிரந்தர குடியேறல் வேலைவாய்ப்பு கல்வி கருத்தரங்கு
குறுகிய காலத்தில் கனடா செல்ல ஒரு அரிய சந்தர்ப்பம்
குறைந்த கட்டணத்துடன் சட்டபூர்வமாக குடும்பத்துடன் கனடாவில் குடியேறலாம்
நாள்-17-06-2017
சனிக்கிழமை
முற்பதிவு அவசியம்
V2 Travels
0768226236
49 A சப்பல் லேன்
யாழ்ப்பாணம்

www.unisons.lk

SMART ஆகுறீங்களா?
COOL ஆகுறீங்களா?

அனைத்து மோட்டார் சைக்கிள் லீசிங் வசதியுடனும்
இலவசமாக
Air Cooler ஒன்று அல்லது Smartphone ஒன்று

பதிவு இலவசம்
முதலாம் வருட காப்புறுதி

மிக குறைந்த மாதாந்த கட்டணங்கள்
பினைபாளர் தேவையில்லை*
4 வருடங்களுக்கு கொடுப்பனவு செய்யும் வசதி

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

இந்த சலுகையானது 2017 ஜூன் மாதம் 30 திகதி வரை மட்டுமே

மேலதிக விபரங்களுக்காக பின்வரும் இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளவும்
விக்னேஷ் 077 251 0850 | தினேஷ் 077 337 8012

துரித இலக்கம் 0117 511 511

2000 ஆம் ஆண்டு 56ம் இலக்க நிதிக்குத்தகை சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் உரிமையளிக்கப்பட்ட விதேட நிதுவனமாகும்

யுனிசன்ஸ் கெப்பிடல் லீசிங் லிமிட்டட்
இல.101, தர்மபால மாவத்தை, கொழும்பு 07

UCL

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.